# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 25 புதன்கிழமை (08.06.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 194





14 யாழ். நகரை அச்சுறுத்தும் கழிவகற்றல்





21 சம உரிமை வழங்க நடவடிக்கை எடுங்கள்





25 வெற்றி நடைபோடுகிறது இந்தியா


**கல்விச்சுடர்**

இன்றைய உதயனில் 16 ஆம் பக்கத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான வினாத்தாள் - I வெளியாகி உள்ளது.

## ஈரானிய அதிபரிடம் இருந்து மஹிந்தவுக்கு ரகசியக் கடிதம்





கொழும்பு, ஜூன் 8

ஈரானிய அதிபர் முகமட் அகமது நிஜாத்திடம் இருந்து ரக சிய கடிதம் ஒன்று ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ வுக்கு அனுப்பப்பட்டுள்ளது. சிறப்புத் தூதவர் ஒருவர் மூலம் இந்தக் கடிதம் பரி மாறப்பட்டுள்ளது.

ஈரானியப் பிரதி வெளிவிவகார அமைச்சர் மொகமட் அலிப தொல்லாகி மூலமே இந்தக் கடிதம் ஜனாதிபதியிடம் ஒப் படைக்கப்பட்டது என்று (27 ஆம் பக்கம் பார்க்க)

## போர்க் குற்ற அறிக்கை குறித்து இலங்கையுடன் தொடர்ந்து பேச்சு

**பதில் இன்னும் இல்லை என்கிறார் பான் கீ - மூன்**



நியூயோர்க், ஜூன் 08

நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக இலங்கை அரசுடன் தான் தொடர்ந்து பேச இருக்கிறார் என்று ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகம் பான் கீ - மூன் தெரிவித்துள்ளார் என்று 'இன்னர் சிற்றி பிரஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

நிபுணர் குழு அறிக்கை தொடர்பாக இலங்கை அரசின் பதிலை எதிர்பார்த்து காத்திருப்பதாக பான் கீ - மூன் தெரிவித்த "அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள போர்க் குற்றங்கள் தொடர்பாக சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஐ.நா. மனித உரிமைகள் (27 ஆம் பக்கம் பார்க்க)

# தடுப்பிலுள்ளோரை விடுவிக்க வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

**காணாமற் போனோரையும் தேடி உறவுகள் கண்ணீர்**

கொழும்பு, ஜூன் 8

அரசினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை உடனடியாக விடுவிக்குமாறு வலியுறுத்தியும் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர், விவரங்களை வெளியிடுமாறு கோரியும் வவுனியா நகரில் நேற்றுப் பெரும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஒரு மணி நேரத்துக்கும் மேலாக வவுனியா பஸ் நிலையத்துக்கு முன்பாக நடந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு கண்ணீருடன் அரசுக்கு எதிராக உரத்துக் குரல் எழுப்பினர். படை நடவடிக்கைகள் காரணமாக காணாமற்போனவர் களின் உறவினர்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். (27 ஆம் பக்கம் பார்க்க)




தடுப்பில் உள்ள மற்றம் காணமற் போனவர்களின் உறவினர்கள் கண்ணீர் மல்க நேற்று வவுனியா நகரில் தமது உறவுகளின் புகைப்படங்களை கைகளில் ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## பத்து லட்சம் கையெழுத்துக்கள் ஐ.நாவிடம் ஒப்படைப்பு

கொழும்பு, ஜூன் 08

நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக 10 லட்சம் பேரிடம் பெறப்பட்ட கையெழுத்துக்கள் அடங்கிய மனு ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் சீ.பி.ரத்நாயக்க தலைமையில் இந்த கையொப்பங்கள் திரட் (27 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. அழைப்பு

கொழும்பு, ஜூன் 08

அரசின் ஜனநாயக அடக்கு முறைக்கு எதிராக நாளை கொழும்பில் நடத்தப்படவுள்ள ஆர்ப்பாட்டத்தில் கட்சி பேதமின்றி அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஐக்கிய தேசியக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேற்படி (27 ஆம் பக்கம் பார்க்க)

**துறைத் தலைவர்களின் போராட்டத்தால்**

## யாழ். பல்கலைக்கழக செயற்பாடு நேற்றுமுதல் முற்றாக ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ். பல்கலைக்கழகத்தில் துறைத் தலைவர்கள் தொழிற் சங்க நடவடிக்கை காரணமாக பதவி விலகியதன் எதிரொலியாக நேற்ற முதல் பல்கலைக் கழக செயற்பாடுகள் யாவும் செயலிழந்தன.

யாழ். பல்கலைக்கழகத்தின் துறைத் தலைவர்கள் மே மாதம் 9 ஆம் திகதி தமது பதவிகளில் இருந்து விலகிய போதும் மாணவர்களுக்கான விரிவுரைகள் இடம்பெற்று வந்தன. எனினும் பரீட்சைகள், செயன்முறை ஆய்வுப் பணிகள் இடம்பெறவில்லை.

இதன் காரணமாக வெளி மாவட்ட மாணவர்கள் விரிவுரைகளைக் கைவிட்டு நேற்று தமது வீடுகளுக்குச் சென்றனர்.

இதனால் விரிவுரைகள் நேற்று (27 ஆம் பக்கம் பார்க்க)

## தோட்டத் தொழிலாளர் சம்பளத்தை மேலும் உயர்த்தக் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 08

தோட்டத் தொழிலாளரை ஏமாற்றி காட்டிக்கொடுக்கும் கூட்டு ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்துவிட்டு வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப அவர்களுக்கு சம்பளம் வழங்க வேண்டும் என ஜே.வி.பி. வலியுறுத்தியுள்ளது.

தோட்டத் தொழிலாளரின் சம்பள உயர்வு தொடர்பாக ஜே.வி.பி. விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

(27 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் தீர்வு குறித்த பேச்சின் முடிவு என்ன?

**அமைச்சர் பீரிஸ் விளக்கம்**



கொழும்பு, ஜூன் 08

அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுகள் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருப்பதால், பேச்சின் முடிவுகள் எவ்வாறு அமையும் என இப்போது கூற முடியாது என்றும், பேச்சு முறையாக இடம்பெறுகிறது என்றும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தேசிய பிரச்சினைகளை பேச்சுகளின் மூலம் தீர்க்கவே அரசு முயற்சி செய்கின்றது. அந்த அடிப்படையில் நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி. ஆகிய கட்சிகளுடன் பேச்சுகளை நடத்தி வருகின்றோம்.

இந்த மாதம் 23ஆம் திகதி அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான அடுத்தகட்ட பேச்சு இடம் பெறும். அவ்வாறு பேசாவிட்டால் அரசமைப்பில் திருத்தங்களை ஏற்படுத்த முடியாது.

பேச்சுகள் தொடர்ந்து இடம்பெறுவதால் பேச்சுகளின் முடிவுகள் எவ்வாறு அமையும் என்று இப்போது எதுவும் கூறமுடியாது. பேச்சுகள் திட்டமிட்டபடி முறையாக இடம் பெறுகின்றன - என்றார். (சி)

## நிபுணர்குழு அறிக்கையை எதிர்க்க இந்தியாவிடம் உதவி கோரவில்லை

**நாடாளுமன்றில் பீரிஸ் விளக்கம்**

கொழும்பு, ஜூன் 8

இலங்கையில் போர்க் குற்றங்கள் தொடர்பில் ஐ.நா. பொதுச் செயலாளரின் நிபுணர் குழு அறிக்கையை எதிர்க்குமாறு இந்தியாவிடம் ஒரு போதும் கோரவில்லை என்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ். " இந்தியாவிடம் மட்டுமன்றி வேறு எந்தவொரு நாட்டிடமும் இலங்கை அப்படிக் கோரிக்கை வைக்கவில்லை." என்றார் அவர்.


இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நான் அண்மையில் இந்தியா சென்று அந்நாட்டுத் தலைவர்களுடன் பேச்சு நடத்தினேன். கூட்டறிக்கை ஒன்றும் (27 ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம்: 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




தெளிவான வானிலை அனைத்து மாவட்டங்களிலும் நிலவுவதற்கான சாத்தியம் . அநேக மாவட்டங்களில் வெப்பமான கால நிலை நாள் முழுவதும் நிலவும்.

CSE COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை µ யாழ்ப்பாணம்
ஆனி 07, 2011
பங்குச்சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 7294.54↓
மிலங்கா(MPI) 6795.20↓
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 4.1Bn
பங்குகளின் அளவு(No.) 182.38Mn
வியாபாரம்(No.) 26088
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
கலாமசு சிஸ்ரம் 3000.00
அலுப(f)ப் 137.00
மஸ்கெலியா 30.00
புறபரி டிவலொப்மன்ர் 72.00
கொமர்ஸல் டிவலொப்மன்ர் 136.90
குறைவு(Top 5 losers) - விலை Rs.
ஹன்ரர் 1199.90
எஸ் எம் பி லீசிங் 0.50
கொன்பிபி 250.00
றிவேறினா 121.00
பான் ஏசியன் பவர் 7.50
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# ஆயுதப் பேர ஊழலில் ஈடுபட்ட துரோகிகளின் பெயர்களை வெளியிட அரசுக்குத் தயக்கம் ஏன்?

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படைக்கு ஆயுதம் மற்றும் தளபாடக்கொள்வனவு செய்வதில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளில் சம்பந்தப்பட்டவர்களின் பெயர்களை வெளியிட ஏன் அரசு தயக்கம் காட்டுகின்றது.

இவர்கள் தேசத்துரோகிகள். இவர்களை காப்பாற்ற ஏன் முயற்சிக்கிறீர்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான கஜித் பெரேரா நேற்று நாடாளுமன்றத்தில் அரசைச் சாடினார்.

நேற்று நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போதே இந்தக் கேள்வியை எழுப்பினார் கஜித்.

மேற்குறிப்பிட்ட மோசடி தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு மேல்நீதிமன்ற நீதியரசர் சிராணி திலகரத்ன தலைமையில் விசாரணைக் குழுவொன்றை நியமித்தார். அதன் வெளிப்பாடுகள் என்ன என கஜித் பெரேரா கேள்வி எழுப்பினார்.

இந்தக் கேள்விக்கு பதிலளித்த ஆளும் கட்சிக் கொறடாவும் அமைச்சருமான தினேஸ் குணவர்த்தன, இந்த விடயம் தேசிய பாதுகாப்பு சம்பந்தமான விடயம் என்பதால், பகிரங்கமாக வெளியிட முடியாது என்று கூறினார்

அமைச்சரின் இந்த பதிலை ஆட்சேபித்த பெரேரா பாதுகாப்பு சம்பந்தமாக நீங்கள் எதையும் கூற வேண்டாம். அதை நாங்கள் கேட்கவும் இல்லை.

ஆயுதக் கொள்வனவு ஊழலில் சம்பந்தப்பட்டவர்கள் தேசத்துரோகிகள், இராணுவ வெற்றிகளுக்கே துரோகம் செய்தவர்கள். இவர்களுடைய பெயரைத் தான் வெளியிடும்படி கேட்கிறோம். இந்தத் தேசத்துரோகிகளை மக்களுக்கு அடையாளம் காட்ட வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தினார் கஜித் பெரேரா.

இந்த ஆயுதப்பேர ஊழலில் ஈடுபட்டவர்களின் பெயர்களை அமைச்சரின் வாயினாலேயே வெளிக்கொண்டுவர கஜித் பெரேரா முயன்ற போதும் தேசிய பாதுகாப்பு என்று சாமர்த்தியமாக தட்டிக்கழித்து விட்டார்.

**வடக்கு, கிழக்கு, மலையகம் மீது கஜித்துக்கு திடீர் அக்கறை**

ஐ.தே.க.பிரதித்தலைவரும் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாச நேற்று வழமைக்கு மாறாக வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத் தாய்மார்களின் போஷாக்கின்மை, குறைப்பிரசவம், வளர்ச்சிகுன்றியமை தொடர்பாகக் கேள்விகளை எழுப்பினார்.

வடக்கும், கிழக்கும் முப்பது வருட யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட பிரதேசம். தாய், சேய் மந்த போஷாக்கு ஏற்பட்டுள்ளது. போதிய வசதிகள் இல்லை என்று குற்றம் சாட்டியதோடு வடக்கில் 31 ஆயிரம் தாய்மார் இருக்கின்றனர். ஆனால், 23 ஆயிரம் தாய்மாருக்கு மட்டுமே திரிபோஷா வழங்கப்படுகின்றது. தேவையான சுகாதார வசதிகள் இல்லை என்றும் குற்றம் சாட்டினார்.

**போஷாக்கின்மையைப் போக்க பிள்ளையானா?**

கிழக்கின் உதயம் வேலைத் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணம் முதலமைச்சர் பிள்ளையானின் தலைமையில் பெரும் அபிவிருத்தி கண்டுள்ளது என்




றார் பிரதி சுகாதார அமைச்சர் லலித் திஸாநாயக்க. அப்படியானால் போஷாக்கின்மையைப் போக்குவது பிள்ளையான் தானா? அவரிடமா ஒப்படைத்துள்ளீர்கள் என்றார் சஜித். இதுவும் நியாயமான கேள்விதான்.

**மலையகத் தொழிலாளர்களுக்கு சம்பளம் 380 ரூபாவே!**

சஜித் பிரேமதாஸ வழமையாக தென்பகுதி பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள், சுகாதார தேவை, மந்த போஷாக்கு குறைப்பிரசவம் தொடர்பாகவே கேள்விகளை எழுப்புவது வழமை.

ஆனால் நேற்று மலையக மக்கள் மீதும் வடக்குக் கிழக்குத் தாய்மார் தொடர்பாகவும் அக்கறையுடன் கேள்விகளை எழுப்பினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மலையகத்தில் 42.2 வீதம் மந்த போஷாக்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர். போதிய சுகாதார வசதிகள் இல்லை. அவற்றைப் பெறுவதற்கான வருமானமும் இல்லை. இப்பொழுது 515 ரூபா சம்பள உயர்வு கிடைத்துள்ளதாகக் கூறப்படுவது பொய். ஆக 380 ரூபா மட்டுமே கிடைத்துள்ளது. அரசாங்கம் இந்த விடயத்தில் தலையிட்டு தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளத்தை ஆகக்குறைந்தது 500 ரூபாவாவது பெற்றுக் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தினார் சஜித் பிரேமதாச.

**தோட்ட ஆஸ்பத்திரிக்கு எம்.பி.பீ.எஸ். டாக்டர்கள்**

இந்த அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களின் சுகாதார மேம்பாட்டுக்கு கூடுதலான வசதிகளை ஏற்படுத்தி உள்ளது. எல்லா தோட்ட ஆஸ்பத்திரிகளையும் அரசுடைமையாக்கி, அங்கு பயிற்சிபெற்ற எம்.பி.பீ.எஸ்.டாக்டர்களையும் நியமித்துள்ளது என்று பதில் அளித்தார் பிரதி சுகாதார அமைச்சர்.

**குடும்ப சுகாதார தாதிகள் பதவிக்கு ஆயிரம் பேர்**

வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட பல பாகங்களிலும் குடும்ப சுகாதார தாதிமார்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனை நிவர்த்திசெய்யும் வகையில் ஆயிரம் குடும்ப சுகாதார தாதியரை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். முதற்கட்டமாக 500 பேர் தெரிவுசெய்யப்பட்டு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அடுத்த கட்டமாக 500 பேர் தெரிவுசெய்யப்படுவர். இவர்கள் வடக்கு, கிழக்கு பாகங்களுக்கே நியமிக்கப்படுவர் எனவும் பிரதி சுகாதார அமைச்சர் கூறினார்.

**கணினியில் ஆசிரியர்களை விட மாணவர்கள் கெட்டிக்காரர்கள்**

ஐ.தே.க உறுப்பினரான புத்திக்க பத்திரன மாத்தளை மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறை, தளபாட தட்டுப்பாடு, சீருடை விநியோகம் மற்றும் அபிவிருத்தி தொடர்பாகக் கல்வி அமைச்சரிடம் கேள்வி ஒன்றை எழுப்பினார்.

இந்தக் கேள்விக்குப் பதில் அளித்த பிரதிக்கல்வி அமைச்சர் விஜிந்த முனி சொய்சா இன்று கிராமப்புற சிறு பாடசாலைகள் உட்பட எல்லாப் பாடசாலைகளுக்கும் கணினி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் தேவையான பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இல்லை. இந்த விடயத்தில் ஆசிரியர்களை விட மாணவர்கள் கூடுதலான அறிவைப்பெற்றுள்ளனர். காரணம் மாணவர்கள் தனியார் வகுப்புக்களுக்குச் சென்று கணினி அறிவைப் பெற்றுள்ளனர் என்று குறிப்பிட்ட பிரதி அமைச்சர் எல்லா ஆசிரியர்களுக்கும் இந்தத் துறையில் பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

இப்படியான வாதப்பிரதிவாதங்களுடன் வாய்மூல வினாக்கான கேள்வி நேரம் முடிவடைந்தது.

பின்னர் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், சபாநாயகரின் அனுமதியுடன் சபையில் தன்னிலை விளக்கம் ஒன்றை அளித்தார்.

**இலங்கை இந்திய கூட்டு அறிக்கையால் வந்த வம்பு**

கடந்த நாடாளுமன்ற சபை அமர்வின் போது தாம் நாட்டில் இல்லாத சமயத்தில் ஜே.வி.பி. உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தனக்கு எதிராகவும் உண்மைக்கு மாறாகவும் சில கருத்துக்களை வெளியிட்டுள்ளார் என்று கூறிய வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இந்த விடயம் தொடர்பாக தன்னிலை விளக்கம் ஒன்றை அளித்தார்.

தான் இந்தியாவுக்குச் சென்ற நோக்கம் நிறைவடையவில்லை என்றும் மாறாக எமது இறைமையைப் பாதிக்கும் வகையில் இந்தியாவுக்குச் சில வரப்பிரசாதங்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகவும் பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன்துறை அபிவிருத்தி நடவடிக்கைகள் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் குற்றம் சுமத்தினார். இது முற்றிலும் உண்மைக்கு மாறானவை என்றும் அமைச்சர் பீரிஸ் கூறினார்.

**ஐ.நா.நிபுணர்குழு அறிக்கைக்கு எதிராக ஆதரவு திரட்டவில்லை**

போர்க்குற்றம் தொடர்பான ஐ.நா.நிபுணர்குழு அறிக்கைக்கு எதிராக எமக்கு ஆதரவு தரும்படி எந்த ஒரு நாட்டிடமும் நாம் கோரவில்லை. ஆனால் எம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை மறுத்து நமது நிலைப்பாட்டை சர்வதேச நாடுகளிடம் விளக்கிவருகின்றோம் எனவும் அமைச்சர் கூறினார்.

**கூட்டறிக்கை தொடர்பான முழுநாள் விவாதம்**

வெளிவிவகார அமைச்சின் கூற்றை மறுத்தார் ஜே.வி.பி. உறுப்பினரான அநுரகுமார திஸாநாயக்க. கூட்டறிக்கை தொடர்பாக நாம் ஒன்றும் தவறாகக் கூறவில்லை. ஆளும் கட்சிக் கொரடாவான அமைச்சர் தினேஸ் குணவர்த்தன கடந்த மே 26 ஆம் திகதி சபையில் தெரிவித்த கூற்றுக்களின் அடிப்படையிலேயே பேசினோம் என்றும் கூறினார் - அநுரகுமார.

இவருக்கு வக்காலத்து வாங்கினார் எதிர்க்கட்சிக் கொரடாவான ஜோன் அமரதுங்க. இவரை ஆளும் கட்சி உறுப்பினர்கள் இந்த விடயம் தொடர்பாக விவாதம் நடத்த முடியாது என ஆட்சேபித்தனர்.

உதயன் சபைச் செய்தியாளர்
**புத்திரசிகாமணி**

இதனால் இருதரப்பினருக்கும் இடையில் சர்ச்சை ஏற்பட்டது. இந்த நிலையில் குறுக்கிட்ட சபாநாயகர் ஓர் அமைச்சர் தன்னிலை விளக்க உரையாற்றும்போது அதனை ஒரு விவாதமாக்க முடியாது. அதேவேளை குறிப்பிட்ட விடயம் தொடர்பாக தனியான ஒரு விவாதம் கேட்டு நடத்தலாம் என சபாநாயகர் கூறினார்.

இதனை ஏற்றுக்கொண்ட எதிர்க்கட்சியினர் தனி ஒரு நாள் விவாதம் நடத்தலாம் என இணக்கம் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளை சட்டம் தொடர்பான விவாதம் இடம்பெற்றது. ✱

## நிகழ்வுகள்

### இசைக் கச்சேரி

வடமராட்சி, ஜூன் 8

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்திவரும் வாராந்த ஆன்மிக நிகழ்வு வரிசையில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பக்க வாத்தியங்கள் சகிதம் முருக பக்தர்களின் இன்னிசைக் கச்சேரி இடம்பெறும். (ற-236)

### கட்டடத் திறப்பு விழா

சுழிபுரம், ஜூன் 8

சித்தன்கேணி சுப்பிரா-14 தனியார் கல்வி நிறுவனத்தின் சுப்பிரா வித்தியாலய நூதன கட்டடத் திறப்பு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 6.47 மணிக்கு நடைபெறவுள்ளது.

சமய கலாசார நிகழ்வுகளுடன் நடைபெறவுள்ள இந்த விழாவுக்கு சிவன் தேவஸ்தான குரு சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள் தலைமை தாங்கவுள்ளார். (ற)

### ஆசிரியர் செயலமர்வு

வடமராட்சிக் கல்வி வலய பாடசாலைகளில் தரம் 6 முதல் 11 வரையுள்ள கிறிஸ்தவ பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் இரவு 8.30 மணிவரை நெல்லியடி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் கலந்து கொள்ளும் ஆசிரியர்கள் இலவச பாடநூல்களைத் தம்முடன் எடுத்து வருமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூரில் பாதுகாப்பு அமைச்சர்களின் மாநாடு; கோத்தபாய அங்கு செல்லாததன் மர்மம் என்ன?

சிங்கப்பூரில் நடைபெற்ற ஆசிய பாதுகாப்பு மாநாட்டில் இலங்கை சார்பில் பாதுகாப்பு அமைச்சரோ அல்லது பாதுகாப்பு செயலரோ கலந்து கொள்வதைத் தவிர்த்து கொண்டதற்கான காரணம் குறித்து பல்வேறு தகவல்களும் வெளியாகத் தொடங்கியுள்ளன.

இந்த மாநாட்டில் இலங்கை மீதான போர்க்குற்றங்கள் மற்றும் மனிதஉரிமை மீறல் விவகாரங்கள் பற்றி கேள்விகள் எழுப்பப்பட்டால், அதற்குப் பதிலளிப்பதற்கு சிக்கல் ஏற்படலாம் என்பதாலேயே இலங்கையின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

பத்தாவது ஆசிய பாதுகாப்பு மாநாடு கடந்த 3 ஆம் திகதி இரவு ஆரம்பமாகி 5 ஆம் திகதி நிறைவடைந்தது.

சிங்கப்பூரின் சங்கிரி-லா விடுதியில் நடைபெற்ற இந்த மாநாட்டுக்கு மூலோபாயக் கற்கைகளுக்கான அனைத்துலக நிலையம் ஏற்பாடு செய்திருந்தது.

27 நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களுக்கு இந்த மாநாட்டில் பங்கேற்பதற்கான அழைப்புகள் அனுப்பப்பட்டிருந்தன.

இலங்கையின் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் அதிபர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

பாதுகாப்பு அமைச்சர்களுக்கான இந்த மாநாட்டில், இலங்கையின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தான் பங்கேற்றார்.

இவருடன் இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக திசநாயக்கவும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தார்.

இந்த மாநாட்டில் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் றொபேட் கேற், இந்திய பாதுகாப்பு இணை அமைச்சர் பல்லம் ராஜு, பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சர் லியம் பொக்ஸ், ஜப்பான், இந்தோனேசியா, கொரியா, அவுஸ்ரேலியா, சிங்கப்பூர், நியுசிலாந்து, சிலி, ஜேர்மனி, மியான்மர், மலேசியா, வியட்னாம், பிலிப்பைன்ஸ், சீனா உள்ளிட்ட நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

ஆனால் சிறிலங்காவில் இருந்து மட்டும் வெளிவிவகார அமைச்சர் சென்றிருந்தார்.

இலங்கை அதிபர் இந்த மாநாட்டில் பங்கேற்காது போனாலும், பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவையும் கூட அவர் அனுப்பி வைக்கவில்லை.

இலங்கை மீது எழுந்துள்ள போர்க்குற்றச்சாட்டுகளும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுமே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. இத்தகைய குற்றச்சாட்டுகள் தொடர்பாக கேள்விகள் எழுப்பப்பட்டால் அதற்குப் பதிலளிப்பதில் பாதுகாப்புச் செயலர் நெருக்கடியை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

எனவே இலங்கை தொடர்பான கேள்விகள் இந்த மாநாட்டில் கிளப்பப்படுவதை தவிர்க்கும் நோக்கிலேயே இலங்கையின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (புதினப்பலகை)

இணையச் செய்திகள்

# இராணுவ முகாமில் புதையல் தேடுகிறார் நாமல் ராஜபக்ஷ

தியத்தலாவை இராணுவ முகாமில் புதையல் இருப்பதாக கூறி ஜனாதிபதியின் புதல்வரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ அதனை தோண்டி எடுக்கும் பணிகளை மேற்கொண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த வாரம் தியத்தலாவை இராணுவ முகாமில், திட்டமிடல் பிரிவின் நிலப்பரப்பின் ஒரு பகுதியில் புதையல் இருப்பதாக நாமல் ராஜபக்ஷவுக்கு சிலரால் கூறப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து புதையலைத் தேடும் நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டு வருகிறார்.

இதேவேளை, ஹப்புத்தளை தங்கமலை பகுதியிலும் அவ்வாறான புதையல் ஒன்று இருப்பதாக கிடைத்த தகவல் அடிப்படையில், நாமல் ராஜபக்ஷ தேடல் பணிகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(தமிழ்வின்)

# புலம்பெயர் தமிழருக்கு ஜனாதிபதி சவால்


இலங்கை தமிழ் மக்கள் மீது உண்மையான அக்கறை கொண்ட புலம்பெயர் தமிழர்கள் இருப்பார்களாயின் ஒரு டொலரையேனும் அவர்களுக்கான அன்பளிப்பாக வழங்கட்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சவால் விடுத்துள்ளார்.

கொக்காவில் தொலைத் தொடர்பு கோபுர சேவையை ஆரம்பித்து வைத்து உரையாடிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறான சவாலை விடுத்தார். அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், இலங்கைத் தமிழர்களின் உரிமைகளை பாதுகாக்க வேண்டும் என வெளிநாடுகளில் இருந்தவாறு கூச்சலிடும் புலம்பெயர் தமிழர்களில் ஒருவரேனும் தமிழ் மக்களின் நலனுக்காக ஒரு டொலரை கூட அன்பளிப்பு செய்ததில்லை.

அவர்களுக்கு கொழும்பு, கிளிநொச்சி, யாழ்ப்பாணத்தில் எல்லாம் வீடுகள் உண்டு. ஐரோப்பா, கனடா, அமெரிக்காவிலும் கூட வீடுகள் உண்டு. அவர்கள் ஆங்கிலம் பேசி தமக்கான நிதிகளைச் சேகரித்துக் கொள்கின்றனர். இவர்களில் பலர் தமிழில் பேசுவதில்லை. எனக்கு தெரிந்த தமிழ் கூட அவர்களில் பலருக்கு தெரியாது. ஆனால் அவர்கள் தங்களுக்கான நிதி சேகரிப்பதில் மிகவும் திறமைசாலிகள்.

எவ்வாறெனினும் புலம்பெயர்ந்த தமிழர்களால் சேகரிக்கப்படும் நிதிகள் இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்கு உதவ பயன்படுத்தப்படுவதில்லை.

ஆனால் தமிழர்களுக்கும் ஏனைய சமூகங்களுக்கும் இடையில் பிரிவினையை ஏற்படுத்தக் கூடிய பிழையான தகவல்களையும் பொய்யையும் பரப்பவே அந்த நிதியைப் பயன்படுத்துகின்றனர். இதன்மூலம் மறைந்து போன தமது ஈழக் கோரிக்கையை மீண்டும் தோண்டியெடுக்க முயற்சி செய்கின்றனர். (தமிழ்மிரர்)



உலகத் தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் படுகொலையை சித்திரிக்கும் வகையில் தஞ்சையில் ''முள்ளிவாய்க்கால் ஈகிகள் முற்றம்'' உருவாக்கப்பட்டுவருகின்றது.
50 தொன்னுக்கு மேலான எடையும் 40 அடி நீளமும் 10 அடி உயரமும் கொண்ட கற்களைப் பயன்படுத்தி சிற்பிகள் இரவு பகலாக சிற்பங்களை செதுக்கி வருகின்றனர்.
முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்டு வீழ்ந்து கிடக்கும் மக்களின் அவலக் காட்சிகளும், முள்வேலி முகாம்களில் அடைக்கப்பட்டு புலம்பும் மக்களின் துயரக் காட்சியும் தமிழ் நாட்டிலும், உலக நாடுகளிலும் ஈழத்தமிழ் மக்களுக்காக உயிர்த் தியாகம் செய்தவர்களையும் உள்ளடக்கி இது அமைக்கப்பட்டு வருகின்றது. (தமிழ்வின்)

# கூட்டமைப்பினர் அரசில் இணையும் வாய்ப்பு; யோகேஸ்வரனுக்கு அமைச்சு பதவி!

இலங்கை அரசில் இணைகின்றமை குறித்து தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களில் மூவர் மிகவும் சாதகமாக பரிசீலித்து வருகின்றார்கள்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களில் இருவரும், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவருமே அரசில் இணையவுள்ளனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

சிவசக்தி ஆனந்தன் எம்.பி, வினோ நோகராதலிங்கம் எம்.பி ஆகியோருடன் வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் மூலமாக பேச்சுக்கள் இடம்பெற்று ஓரளவு சுமுக நிலையை எட்டி உள்ளன.

வன்னி மாவட்ட அபிவிருத்திக்கு பெருந்தொகை நிதி ஒதுக்கீடுகள் செய்து தரப்படும் என்று இருவருக்கும் வாக்குறுதி வழங்கப்பட்டு உள்ளது.

அதே போல சீனித்தம்பி யோகேஸ்வரன் எம்பியுடனான பேச்சுக்கள் கூட்டமைப்பில் இருந்து கொண்டு அரசை ஆதரித்து வருகின்ற பொடியப்பு பியசேன எம்.பி மூலமாக மேற்கொள்ளப்பட்டு ஓரளவு வெற்றி நிலையை அடைந்துள்ளது.

யோகேஸ்வரன் எம்.பிக்கு இந்து கலாசார அமைச்சுப் பதவி வழங்கப்படும் என்று வாக்குறுதி கொடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் இவர்கள் அரசில் இணைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (தமிழ்.சி.என்.என்.)

# ஹத்துருசிங்கவிடம் இமெல்டா முறைப்பாடு

விடுதலைப்புலிகளின் சர்வதேச வலயமைப்பின் மூலமாக தனக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் குறித்து மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவிடம் யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் முறைப்பாடொன்றைச் செய்துள்ளார்.

யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவிடம் அவர் செய்துள்ள முறைப்பாட்டில் மின்னஞ்சல் மற்றும் தொலைபேசி வழியாக விடுதலைப் புலிகளின் சர்வதேச வலைப்பின்னலைச் சேர்ந்தவர்கள் தன்னை அச்சுறுத்தி வருவதாக தெரிவித்துள்ளார்.

அது மாத்திரமன்றி விடுதலைப்புலிகளின் தரப்பிலிருந்து தனக்கு கொலை அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேற்கொண்டுள்ள முறைப்பாட்டின் அடிப்படையில் அவருக்கான விசேட பாதுகாப்பு உத்தியோகத்தர்களை வழங்கவும் அரசாங்கம் கவனம் செலுத்தியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதே நேரம் யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் அண்மையில் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிராகத் தெரிவித்த கருத்துக்கள் மற்றும் இராணுவத்தினருக்குப் பாராட்டும் தெரிவித்தமை மட்டுமன்றி அவர் தற்போது எதிர்கொள்ள நேர்ந்துள்ள அச்சுறுத்தல்கள் என்பன தொடர்பில் சிங்கள ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிட்டு வருகின்றன. (தமிழ்வின்)

# கோப்பி குடிக்க கிருபாகரனை அழைத்த சமரசிங்க

கடந்த வெள்ளிக்கிழமை (03) ஜெனீவாவில் இடம்பெற்ற போர்க்குற்ற காணொளி மீதான விவாதத்தில் ஒரு சமயத்தில் நிலை தடுமாறிய சிறீலங்கா அமைச்சர் மஹிந்த சமரசிங்க, மனித உரிமைச் செயற்பாட்டாளர் கிருபாகரனை கோப்பி குடிக்க வருமாறு அழைத்ததால் அரங்கத்தில் சிரிப்பு ஒலி எழுந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

காணொளியின் பின்னரான கேள்வி நேரத்தின் போது பிரான்ஸ் நாட்டை தளமாகக் கொண்ட மனித உரிமைகள் மையத்தின் பொதுச்செயலாளர் கிருபாகரன் மேதகு அமைச்சர் அவர்களே எனக் கேள்வியை ஆரம்பித்திருந்தார் (ஐ.நா விதிகளின் பிரகாரம் அப்படித்தான் அழைக்கவேண்டும்).

ஆனால் அதனை இடைமறித்த சமரசிங்க நாம் இருவரும் ஒருவரை ஒருவர் அறிந்தவர்கள் எனவே இந்த முறைகள் தேவையற்றது என தெரிவித்திருந்தார்.

பின்னர் அவர்கள் இருவரும் பேசிய விடயங்கள் வருமாறு:

சமரசிங்க: நீர் யார் என்பது இங்கு இருக்கும் எல்லோருக்கும் தெரியும்.

கிருபாகரன்: நிச்சயமாக, ஏனெனில் நான் இங்கு 22 வருடங்களாக வந்து செல்கிறேன். எனவே எல்லோருக்கும் என்னைத் தெரியும் (அரங்கத்தில் சிரிப்பொலி எழுந்தது).

சமரசிங்க: நாம் இருவரும் இணைந்து கோப்பி குடிக்காதது தான் இங்குள்ள ஒரே ஒரு பிரச்சினை.

கிருபாகரன்: ஏன் கூடாது, இன்று மாலையே நாம் இருவரும் கோப்பி அருந்தலாம் (மீண்டும் அரங்கத்தில் பலத்த சிரிப்பொலி).

நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் சிறீலங்கா அரசு மிதமிஞ்சிய பிரசாரத்தை மேற்கொள்கின்றது என கிருபாகரன் தொடர்ந்து பேசுகையில் பின்னர் தெரிவித்தார்.

இங்குள்ள சில உறுப்பினர்கள் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் மறுதலையான கருத்துக்களைக் கொண்டுள்ளனர். ஆனால் அது ஆதாரமற்றது. அது ஒரு சுயாதீன குழு அல்ல. அதன் இரு உறுப்பினர்கள் முன்னர் சிறீலங்கா அரசுக்காக பிரசாரம் செய்தவர்கள் என மேலும் அவர் தெ[illegible]தார். (மனிதன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிகளை அளவீடு செய்வதற்கு இனி செய்மதி தொழில்நுட்பம்

கொழும்பு,ஜூன் 8

காணிகளை அளந்து எல்லைகளை நிர்ணயிக்கும் செயற்பாடுகள் தொடர்பாக வான்படங்கள் மற்றும் செய்மதிப் படங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் மாற்றுத் தொழில்நுட்ப முறையொன்றைக் கையாள்வதற்கு காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

காணிகளை அளவீடு செய்து வரைபடங்களைத் தயார் செய்யும் முறையே இதுவரையில் கையாளப்பட்டு வருகிறது.

இந்தச் செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் நில அளவையாளர்களுக்குத் தற்போது தட்டுப்பாடு நிலவுகின்றது. இதன் காரணமாக அந்தச் செயற்றிட்டங்களில் ஏற்படும் தாமதத்தை நிவர்த்தி செய்யும் நோக்கிலேயே செயற்றிறன் மிக்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டாரவின் பணிப்புரையின் பேரில் நில அளவைத் திணைக்களத்தின் முழுமையான பங்களிப்புடன் ஆரம்பிக்கப்படவுள்ள இந்தத் திட்டத்துக்கு அமைச்சரவையின் அனுமதியும் பெறப்படவுள்ளது. (த-22)

# சாவகச்சேரி நகர சபைக்கு உழவு இயந்திரம்

தென்மராட்சி,ஜூன் 8

சாவகச்சேரி நகர சபைக்கு உழவு இயந்திரமும் குடிதண்ணீர் தாங்கியும் வழங்கப்படவுள்ளன.

தென்மராட்சி பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்த வேளையில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தினரால் தென்மராட்சி பிரதேச செயலகத்திடம் கையளிக்கப்பட்ட வாகனங்களே பிரதேச சபையின் பயன்பாட்டுக்கென வழங்கப்படவுள்ளன.

(த-207)

# மரண அறிவித்தல்



## திருமதி நட்சேத்திரம் சுவாம்பிள்ளை

இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட நட்சேத்திரம் சுவாம்பிள்ளை கொழும்பில் (01.06.2011) புதன்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார். அன்னார் திரு. திருமதி. சூசைப்பிள்ளை செந்தூரியின் அருமை மகளும், திரு. திருமதி. சூசைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திரு. சுவாம்பிள்ளையின் (சுவலைத்தம்பி) பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான அருட்சகோதரி லெனோர் AC சேனாதிராஜாவினதும் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான மனுவேற்பிள்ளை( வெள்ளையர் ), ராசமுத்து, மனோன்மணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற மனோ, அருட்சகோதரி டொமினிக்கா ( றஞ்சி SCJM, பற்றீசியா, செல்வதி மலர், ஜெனிற்றா, றஞ்சன், றஞ்சிற் ஆகியோரின் பாசமிகு தாயாரும், மனுவேற்பிள்ளை (பொன்னு), ராஜா, நிஸ்தார், காலஞ்சென்ற பீற்றர், ரட்ணா, சுமி பேளின் மனோகரன், காலஞ்சென்ற மகேந்திரன், றஞ்சன், ரமேஸ் ஆகியோரின் அன்புமிகு மாமியாரும், பேள்சி-யோசப், றியன்சி-அனு, ஜெசி-தேவா, பிறன்சி-யொவானா, லலித்-சூசனா, லலினி-நிர்மலன், நிலானி, பற்றிக், கெலன், நட்தியா, அரன்னியா, அன்றியா, லேடன், ஜெனன், ஜெறம், ஜெநிசன், ஆட்றியன், பஸ்ரியன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஜொஆன், ஜொணத்தன், ஜொஸ்லின், குருஷேவ், மகிமா, வினோதன், அன்ரனி, ஆஷிலி, அனிசா, கேற்லின் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் யாழ்ப்பாணம் இளவாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அன்னாரின் இல்லத்தில் புதன்கிழமை (08.06.2011) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு வியாழக்கிழமை (09.06.2011) காலை 10.00 மணிக்கு புனித அன்னம்மாள் ஆலயத்தில் இரங்கள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இரங்கல் திருப்பலியின் பின்னர் புனித அன்னம்மாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு துயரத்துடன் அறியத்தருகின்றோம்.

**"சுவம் வாசம்" வட்டக்குளம், இளவாலை**

# போதனா வைத்தியசாலையில் 'லிப்ற்' 8.3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம் ஜூன் 8-

யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளர் விடுதிகள் அமைந்துள்ள நான்கு மாடிக் கட்டடத்திற்கான 'லிப்ற்' வசதியை அமைக்கவென ஒதுக்கப்பட்ட 8.3 மில்லியன் ரூபா நிதியை சுகாதார அமைச்சு இலங்கை மின்சார சபையிடம் கையளித்துவிட்டது.

'லிப்ற்' அமைக்கும் பொறுப்பு இலங்கை மின்சார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆறு மாத காலப் பகுதியினுள் 'லிப்ற்' அமைக்கப்பட்டுவிடும் என யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.பவானந்தராஜா தெரிவித்தார். இந்த 'லிப்ற்' ஏனைய இடங்களிலுள்ளமை போன்று சாதாரண அளவில் இல்லாது நோயாளர்களைத் தள்ளுவண்டியுடன் கொண்டுசெல்லக்கூடியதாக பெரிய அளவானதாக அமையவுள்ளது.

இதற்கான உபகரணங்கள் அனைத்தும் தாய்லாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளன. அடுத்த ஆறுமாத காலப் பகுதியினுள் இவை பொருத்தப்பட்டு 'லிப்ற்' இயங்கக் கூடியதாக இருக்கும் என்றார் பிரதிப்பணிப்பாளர். (த-4)

# உள்ளூராட்சி வாரத்தையொட்டி நல்லூர் பிரதேச சபையின் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் ஜூன் 8

எதிர்வரும் ஜூலை மாதத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி வாரத்தையொட்டி நல்லூர் பிரதேச சபை பல்வேறு நிகழ்வுகளை நடத்த ஏற்பாடுகள் செய்துள்ளதாக நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் மேரி சாந்தசீலன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், உள்ளூராட்சி வாரம் ஜூலை மாதம் 10ஆம் திகதி முதல் 17ஆம் திகதிவரை நடைபெறும்.

நல்லூர் பிரதேச சபை உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு காரைக்கால் பகுதியில் உள்ள திண்மைக் கழிவு அகற்றல், சிரமதான நடவடிக்கைகள், கிடுகு பின்னுதல், முட்டி உடைத்தல், போன்ற பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள், கலாசார நிகழ்வுகள், பெண்கள் ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டிகள் ஆகியவற்றை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது - என்றார். (த-07)

# கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் திருமதி கௌ.வசந்தினி அவர்களின் அன்புத் தந்தையும் கிராம அலுவலர் நா.கௌரிதரன் அவர்களின் பாசமிகு மாமனுமாகிய

## கந்தையா காசிப்பிள்ளை

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மசாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
தென்மராட்சி, சாவகச்சேரி.

(சி/574870)

பிரதேச செயலக ஊழியர்
நலன்புரி சங்கம்

**Computer Express**
Institute of Information Technology

பாடசாலை மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்குமான தொழில்சார் கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன....

* Dip. in computer science. 4 Months 1000/=
* Dip. in web page Designing. 4 Months 1000/=
* Dip. in Graphic Designing. 4 Months 1000/=
* Dip. in Desk top publishing. 4 Months 1000/=
* Dip. in Hardware Engineering. 3 Months 1000/=
* Dip. in Auto CAD. 3 Months 1000/=
* Dip. in MicroSoft Office. 3 Months 1000/=
* Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) 3 Months 1000/=
* Honours Dip. in computer science. 5 Months 1000/=

Advances Courses
Diploma in Video Editing 4Months 1000/=
Diploma in Multimedia 4Months 1000/=

பதிவுகளுக்கு முந்துங்கள்

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Monday to Friday 9Am to 2.30Pm
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering
Diploma in Acc.Package.
Course Fee 1000/=

Batch I -08.06.2011 9Am or 3pm Batch II -10.06.2011 9Am or 3pm
Batch III -11.06.2011 9Am or 3pm Batch IV -12.06.2011 9Am or 3pm

Tally புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422, 0774907444



எங்கும் கிடைக்காத அதிகுறைந்த
விலையில் தரமான ஆடைகளை பெற்றுக்கொள்ள

**சரவணா ரெக்ஸ்**

770, 772, கே.கே.எஸ்.வீதி,
(தட்டாதெருச் சந்தி),
யாழ்ப்பாணம்.
TP: 021 222 0421, Fax: 222 0421

526, 529, பருத்தித்துறை வீதி,
நல்லூர் ([illegible]),
யாழ்ப்பாணம்.
TP :021 222 1723.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அரசியல் தீர்வு ஒன்றைக் காண...

இனப்பிரச்சினைக்கு உள்நாட்டிலேயே அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். இதில் வெளிநாட்டு தலையீடுகளுக்கு இடமளிக்க முடியாது.

வடக்கு மற்றும் தென்பகுதி அரசியல் வாதிகள், அதாவது அரசியல் தலைவர்கள் இணைந்து தீர்க்கவேண்டிய விடயம் இது. அரசியல் தீர்வு ஒன்றை மக்கள் மீது திணிக்க முடியாது.

இவ்வாறு அறுத்து உறுத்துத் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. முல்லைத்தீவு மாவட்டம் கொக்காவிலில் அதி உயர்ந்த நவீன தொலைத் தொடர்புக் கோபுரத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் ஜனாதிபதி இவற்றை விளம்பினார்.

அரசியல் தீர்வு ஒன்றை மக்கள் மீது பலாத்காரமாகத் திணிக்க முடியாது. மக்களின் மனங்களை இணைப்பதன் மூலமே இனப்பிரச்சினைக்கு உகந்த தீர்வு ஒன்றைக் காணமுடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

இனப்பிரச்சினைக்குரிய தீர்வு உள்நாட்டிலேயே காணப்பட வேண்டும் என்பதனை எவரும் மறுக்க முடியாது. ஆனால் இந்த நாடு சுதந்திரம் அடைந்த சில வருடங்களில் சிங்கள அரசியல் தலைவர்களால் தோற்றுவிக்கப்பட்டதே இந்த இனப்பிரச்சினை என்பதனை மறந்து விடவும் முடியாது; மறுக்கவும் இயலாது.

தமிழர்களும் இந்த நாட்டின் மூத்த குடிமக்கள் என்பதனைப் புறந்தள்ளி, சனத்தொகையில் சிங்களவர்களே பெரும்பான்மையினர் என்பதால் தாம் ஆள்பவர்களாகவும் தமிழர்கள் ஆளப்படுபவராகவும் - இன்னொரு விதமாகக் கூறுவதானால் ஆண்டான் அடிமையாக - இந்த நாட்டின் அரசியல் சமன்பாடு நிலை நிறுத்தப்பட வேண்டும் என்ற கோட்பாடு சிங்களத் தலைவர்களால் புனையப்பட்டது. அதுவே இன்றைய சாபக்கேடுகளுக்கு மூலவிதை.

அந்த விதைக்கு தண்ணீரும் பசளையும் இடப்பட்டு இனவாதமும் பிராந்திய வாதமும் இரட்டை நச்சு விருட்சங்களாக ஓங்கி வளர 'பெரும் பாடுபட்டவை' சிங்கள அரசுகளே. தாம் வழங்கும் அற்பசொற்பங்களைப் பெற்றுக்கொண்டு, தமிழ் மக்கள் அடங்கி வாழ வேண்டும் என்ற மேலாண்மை, இந்த நாட்டில் ஜனநாயகத்தைக் கேலிக்கு உரியதாக்கி ஊறுபடுத்தி விட்டது.

இலங்கை சுதந்திரநாடாகிய பின்னர், பதவிக்கு வந்த சிங்களத் தலைமைகள் எல்லாமே, தமிழர்களை இந்த நாட்டின் ஒரு பொருட்டாக மதித்து அவர்களுக்குச் சேரவேண்டிய, அவர்களிடம் இருந்து பிரிக்க முடியாத உரிமைகளை வழங்குவதற்கு மறுத்து அவற்றைக் கபளீகரம் செய்து கொள்வதிலேயே கடந்த அறுபது வருடங்களாக அக்கறையாக இருந்து செயற்பட்டன; செயற்பட்டு வருகின்றன.

அதன் விளைவே, தமிழ் மக்கள் தமது பிறப்புரிமைகளை பெறுவதற்கு வேண்டி, பல்வேறு வடிவங்களில் நடத்திய சாத்வீக மற்றும் வன்முறைப் போராட்டங்கள். அவற்றின் இறுதிக்கட்டமாக உருவெடுத்ததே ஆயுதப்போராட்டம். அதனை விளைநிலம் ஆக்கியதில் கொழும்பு அரசுகளுக்கும் சமபங்குண்டு.

வன்னிப்போரில் பெரும்எண்ணிக்கையான பொதுமக்களின் - தமிழ் மக்களின் - உயிர்கள் காவுகொள்ளப்பட்ட பின்னரும், அவர்களுக்கு உரிய உரிமைகளை - அரசியல் உரிமைகளை - வழங்குவதற்கு இன்றைய அரசு போக்குக் காட்டி வருகிறது. ஆறு பத்து வருடங்களாக பதவிக்கு வந்த அரசுகள் செயற்பட்ட வகையில் இருந்து முன்னகர்ந்து இது சிங்கள மக்களின் நாடே என்று நிலைநாட்ட வேகமாகவும் வீச்சாகவும் வினைத்திறனுடனும் செயலாற்றுவது தெட்டெனத் தெரிகிறது. தமிழர்களின் பூர்வீக மண்ணை இராணுவ வலுவுடன் சிங்களப் பிரதேசங்களாக மாற்ற வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் ஒரு நாடு ஒரு மக்கள் என்ற கோஷத்தை இன்றைய அரசு ஒலித்து வருகிறது.

இத்தகைய போக்கு இனப்பிரச்சினை என்ற புண்ணுக்கு அமிலம் ஊற்றி மேலும் ஆழமாக்குவதற்கான முயற்சி என்று கொள்ளலாம். அதனாலேயே வெளிநாடுகள் தமது கையை வைக்க முயலும் நிலைமைக்கு கொண்டுவந்து விட்டுள்ளது.

பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பது வடக்கு, தெற்கின் அரசியல் தலைமைகள் அமர்ந்து பேசவேண்டிய விடயம். தீர்வைப் பலவந்தமாகத் திணிக்க முடியாது என்பதும் அது மக்களின் உள்ளத்தில் இருந்து வரவேண்டும் என்பதும் ஏற்புடைய வாதமே.

மக்கள் உள்ளங்கள் ஒன்றுபட வேண்டும் என்று கூறிக் கொண்டு அவர்களிடையே விஷத்தைக் கொட்டுவதும், நச்சுப் புகைபோடுபவர்கள் தட்டில் அதனை மேலும் கொட்டித் தூண்டுவதும் அரசியல் தர்மம் ஆகாது. தென்னிலங்கை அரசியலில் இது மிகவும் பிரசித்தமான செல்நெறியாகக் காணப் படுகிறதே....!

அதனைத் தவிர்க்கக் கூடிய, தடுக்கக் கூடிய சிங்களத் தலைமை இன்றைய தேவை. நாட்டின் ஜனாதிபதி என்ற முறையில், இன்னும் ஆறு வருடங்களுக்கு ஆட்சித் தலைமைத்துவத்தைக் கையில் பிடித்திருக்கப்போகும் மஹிந்த ராஜபக்ஷ, மேற்கூறிய பாத்திரத்தையும் வகிப்பாரெனின், அவர் இந்த நாட்டின் தலைசிறந்த அரசியல் தலைவராகச் சுடர்விடுவார். பொதுவாக மக்கள் தேவைகளையும் குறிப்பாகத் தமிழ் மக்களின் உரிமைகளைக் கிள்ளிக் கொடுக்காமல், நீதியின், மனிதத்துவத்தின் நெறி நின்று வழங்குவதற்கு முன்வந்தால், அவர் இந்த யுகத்தின் சரித்திர புருஷராக மிளிர்வார். அத்தகைய ஒரு நிலையில் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில், வெளிநாட்டுத் தலையீடு என்ற பேச்சுக்கும் இடமிருக்காதே.

# வலி. வடக்கில் நோர்வேயின் 150 அரை நிரந்தர வீடுகள்

## ஒவ்வொன்றும் ரூ. 87 ஆயிரம் பெறுமதியானவை

யாழ்ப்பாணம், ஜூன் 8

நோர்வே அகதிகள் பேரவையினால், வலி.வடக்கில் மக்கள் தற்போது மீளக்குடியமர்ந்த இடங்களில் 150 அரை நிரந்தர வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன. இதற்கான அனுமதிகள் நோர்வே அகதிகள் பேரவைக்கு வழங்கப்பட்டுள்ளன.

உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த வலி. வடக்கு பிரதேசத்தில் மக்கள் தற்போது மீளக்குடியமர்ந்து வருகின்றனர். கடந்த வருடம் நவம்பர் மாதம் 27 ஆம் திகதி முதலாம் கட்டமாகவும், இந்த வருடம் மே மாதம் 9 ஆம் திகதி இரண்டாம் கட்டமாகவும், மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டனர்.

மீளக்குடியமர்ந்த மக்களுக்கான உதவிகளை பெரும்பாலான அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கிவருகின்றன. அந்தவகையிலேயே நோர்வே அகதிகள் பேரவை தற்போது அரை நிரந்தர வீடுகள் அமைக்கும் பணியை வலி. வடக்கில் ஆரம்பிக்கவுள்ளது.

ஒவ்வொரு வீடும் 87 ஆயிரத்து 450 ரூபா பெறுமதியானவை. அத்துடன் 2 அறைகள் கொண்டதாக இந்த அரை நிரந்தர வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

கொல்லங்கலட்டி மற்றும் குரும்பசிட்டி கிராமத்திலிருந்தே இந்த அரை நிரந்தர வீட்டுத்திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-15)

# வீடமைப்பு அதிகார சபையின் ஊழியர்கள் 57 வயதுடன் 'அவுட்'

யாழ்ப்பாணம், ஜூன் 8

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் கடமையாற்றும் ஊழியர்கள் 57 வயது வரை மட்டுமே சேவையாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எவருக்கும் எக்காரணம் கொண்டும் சேவை நீடிப்பு வழங்க முடியாது என்ற அரசின் அறிவிப்பு சகல பிராந்தியங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு 57 வயது முடிந்த பின்பும் தேவைக்கேற்றவாறு சேவை நீடிப்பு வழங்கப்பட்டு வந்தது.

இதனால் அவர்கள் ஒரு சில வருடங்கள் தொடர்ந்தும் வேலை செய்யக் கூடிய வாய்ப்பு இருந்தது.

தற்பொழுது இந்த நடைமுறை மாற்றப்பட்டுள்ளது. 57 வயது முடிந்தவுடன் எக்காரணம் கொண்டும் சேவை நீடிப்பு வழங்கப்படமாட்டாது என்று தலைமைப் பீடத்திலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட சுற்றுநிருபத்தில் குறிப்பிடபட்டுள்ளது.

சேவை நீடிப்பை எதிர்பார்த்திருந்தவர்களுக்கு இந்த அறிவிப்பு ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது.

இதேவேளை -

ஊழியர் பற்றாக்குறையுடன் இயங்கி வரும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில், சேவை நீடிப்புக்கு முற்றுப் புள்ளிவைக்கப்பட்டுள்ளதால் ஊழியர் பற்றாக்குறை மேலும் ஏற்படும் என்று கருதப்படுகிறது.

அதிகார சபையில் பல வருடங்களாக கடமையாற்றும் ஊழியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது. இது குறித்துக் கவலை அடைந்துள்ள ஊழியர் இடமாற்ற உத்தரவை எதிர்பார்த்த வண்ணம் உள்ளதாகக் கூறப்பட்டது. (த-115)

# குடாநாட்டிலிருந்து தம்புள்ள செல்லும் மரக்கறி வகைகள் 70 வீதத்தால் வீழ்ச்சி

கொழும்பு, ஜூன். 8

யாழ்ப்பாணத்திலிருந்து தம்புள்ள பொருளாதார மையத்துக்கு எடுத்துச் செல்லப்படும் மரக்கறி வகைகளின் தொகைகள் 70 வீதம் வரை குறைவடைந்துள்ளதாக அங்குள்ள வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த மழைக்காலத்தை அடுத்து மரக்கறிகளின் உற்பத்தி குறைவடைந்தமை, நியாயமான விலைகள் தமக்குக்கிடைக்காமை மற்றும் இவற்றை எடுத்துச் செல்லும் போக்குவரத்துச் செலவுகள் அதிகரித்துள்ளமை காரணமாக தம்புள்ளக்கு மரக்கறி வகைகளைக் கொண்டு செல்வதைத் தாம் குறைத்துக் கொண்டுள்ளதாக யாழ்.மாவட்ட விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

சின்னவெங்காயம், பீற்றூட், பூசணிக்காய், கத்தரிக்காய், கறிமிளகாய், பச்சை மிளகாய் போன்ற மரக்கறி வகைகள் யாழ்ப்பாணத்திலிருந்து தம்புள்ளக்கு எடுத்து வரப்பட்டன எனவும் தற்போது மூன்று அல்லது நான்கு லொறிகளில் மட்டுமே யாழ்ப்பாணத்திலிருந்து மரக்கறிகள் தம்புள்ளக்குக் கொண்டு வரப்படுவதாகவும் இதற்கு முன்னர் பதினைந்து இருபது லொறிகளுக்கு மேல் யாழ்ப்பாணத்திலிருந்து மரக்கறிகள் தம்புள்ளக்கு எடுத்து வரப்பட்டன எனவும் தம்புள்ள வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னர் மரக்கறி மூடையொன்றை தம்புள்ளக்குக் கொண்டு செல்வதற்கு நூறு முதல் நூற்றி இருபது ரூபா வரை கட்டணம் அறவிடப்பட்டது.

ஆனால் தற்போது அக் கட்டணம் நூற்று ஐம்பது முதல் நூற்றி அறுபது ரூபா வரை அதிகரித்துள்ளதாகவும் யாழ்ப்பாண விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலைப்பாட்டின் காரணமாக தற்போது யாழ்ப்பாண விவசாயிகள் தமது விளைச்சல்களை குறைந்த விலை மட்டங்களுக்கு உள்ளூர் சந்தைகளுக்கே சந்தைப்படுத்த முனைந்துள்ளதாகவும், வெளி மாவட்டங்களிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் வர்த்தகர்கள் தோட்டங்களுக்குச் சென்று அவற்றைக் கொள்வனவு செய்து வருவதாகவும் அறியமுடிகிறது. (த-22)

# பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு 500 நல்லின எருமைகள் இறக்குமதி

பருத்தித்துறை, ஜூன் 8

500 நல்லின எருமைமாடுகளை பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்வதற்கு கால் நடைவள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இறக்குமதி செய்யப்படும் இந்த நல்லின எருமைகள் இங்குள்ள மாட்டுப் பண்ணையாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதுடன் அவற்றின் மூலம் நல்லின எருமைக் கன்றுகளைப் பெருக்கும் திட்டம் முன்னெடுத்துச் செல்லப்படவுள்ளதாகவும் மேற்படி அமைச்சு தெரிவிக்கிறது.

மேலும், அந்த நல்லின எருமைகளிலிருந்து அதிகளவு பாலைப்பெற முடியுமெனவும் கால்நடை வள மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு தெரிவிக்கிறது.

(த-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
08 ஜூன் 2011 புதன்கிழமை

### பனை, தென்னை வளக் கூட்டுறவுச் சங்கங்களின்

# வறுமைக் கோட்டின் கீழ் வசிக்கும் உறுப்பினர்களுக்கு வீடமைப்புத் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

பனை, தென்னை வள அபி விருத்திக்கூட்டுறவுச் சங்கங் களில் பணியாற்றும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் உறுப் பினர்களுக்கான வீடமைப்புத் திட்டம் ஒன்றை ஆரம்பித்து வைத் துள்ளதாக கூட்டுறவு அபி விருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் தெரி வித்தார்.

சர்வதேசக் கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு இந்தப் புதிய திட்டத்தை மேற்படி சங் கங்கள் ஆரம்பித்துள்ளதாக அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்: பண்டத்தரிப்பு, சாவகச்சேரி, அச்சுவேலி, பருத்தித்துறை ஆகிய நான்கு பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவு சங்கங்களே இந்தப் புதிய திட் டத்தை முன்னெடுக்க முன்வந் துள்ளன.

வறுமைக் கோட்டின்கீழ் வாழும் இருப்பிட வசதிகள் இன்றித் தவிக்கும் உறுப்பினர்களுக்கு. இந்தத் திட்டத்தின் கீழ் வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன.

மேற்படி சங்கங்களின் நட வடிக்கை பாராட்டுக்குரியது. ஏனைய கூட்டுறவு அமைப்புக் களும் அந்தத் திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவதே காலத்தின் தேவையாகும்- என்றார். (த-26)

# இந்திய மீனவர்கள் அத்துமீறல் சமாசக் கூட்டத்தில் ஆராயப்படும்

யாழ்ப்பாணம்,ஜூன் 8

யாழ்.மாவட்ட கடற்றொழி லாளர் கூட்டுறவுச் சங்கங் களின் சமாசத்தின் இயக்குநர் சபைக்கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சமாசத்தின் கேட்போர் கூடத் தில் இடம்பெறவுள்ளது.

சமாசத்தின் தலைவர் எஸ். தவரட்ணம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த மாதத் துக்கான இயக்குநர் சபைக் கூட்டத்தின் போது இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைத் தடுப்பதற்கான வழிவகைகள் குறித்து ஆராயப்படவுள்ளதா கத் தெரியவருகிறது.

எதிர்வரும் 10 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலுள்ள இந்தி யத் துணைத் தூதரகத்தின் முன் னால் யாழ்.மாவட்ட மீனவர்கள் ஆர்ப்பாட்டம் செய்யவுள்ள தாக வெளியான செய்தியில் உண்மை இல்லை எனத் தெரி வித்துள்ளார் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம்.

இந்திய மீனவர்களின் அத்து மீறலைத் தடுப்பதற்குரிய வழி வகைகள் குறித்து சமாசத்தின் இயக்குநர் சபைக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்படவுள்ள துடன் இது தொடர்பான மேல திக நடவடிக்கைகள் குறித்தும் கலந்தாலோசிக்கப்படவுள்ளதாக வும் தவரட்ணம் மேலும் கூறி யுள்ளார். (த-14)

# வெளிமாவட்ட சேவையை விஸ்தரிக்க போக்குவரத்துச் சபைக்குப் புதிய பஸ்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 8

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு அண்மையில் கிடைத்த புதிய பஸ்கள் மூலம் யாழ்ப் பாணத்துக்கும் வெளி மாவட் டங்களுக்குமான சேவைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன என பிர தான பிராந்திய முகாமையாளர் கே.கேதீசன் அறிவித்துள்ளார்.

இந்தச் சேவைகள் நேற்று செவ்வாய்க்கிழமை முதல் ஆரம் பிக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார்.

யாழ். மத்திய பஸ் நிலையத் தில் இருந்து 8.30 மணிக்கு மட் டக்களப்பு ஊடாக கல்முனை நோக்கிப் புறப்படும் பஸ் அடுத்த நாள் இரவு 8 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணத்தை வந்தடையவுள்ளது.

இதேவேளை -காரைநகரில் இருந்து இன்று இரவு 7 மணிக்கு 782 இலக்க பாதையூடாகப் புறப்பட்டு யாழ்.பஸ் நிலையம் வந்தடையும் பஸ் இரவு 9 மணிக்குப் புத்தளம் வழியூடாக கொழும்பு நோக்கிப் புறப்பட வுள்ளது. மீண்டும் நாளை இரவு 7 மணிக்கு இந்த பஸ் யாழ். நோக்கிப் புறப்படும்.

இந்தச் சேவைக்கான ஆசனப் பதிவுகளை யாழ். பஸ் நிலையத் திலும், காரைநகர் சாலையிலும், கல்முனை பஸ் நிலையத்திலும் மேற்கொள்ள முடியும் - என்றார். (த-9)

# குறிகாட்டுவான் -நயினாதீவு கடற் பாதைச் சேவை விரைவில்

யாழ்ப்பாணம் ஜூன் 8

குறிகாட்டுவான் இறங்கு துறைக்கும் நயினாதீவு இறங்கு துறைக்கும் இடையிலான கடற் பாதை சேவை விரைவில் ஆரம் பிக்கப்படவுள்ளது.

இந்தச் சேவையை நடத்து வதற்கென ஏற்கனவே எடுத்து வரப்பட்ட கடற்பாதைக்கான உபகரணங்கள் குறிகாட்டுவான் துறையில் தவம் கிடக்கின்றன. இப்போது இந்த பாதையை பெருத்திச் சேவையை ஆரம் பிப்பதற்காக கொழும்பிலி ருந்து குழு ஒன்று விரைவில் யாழ்ப்பாணம் வருகைதரவுள்ள தாக வீதி அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவிக் கின்றன.

இந்த பாதை சேவை மூலம் வாகனங்களை நேரடியாக நயினா தீவுக்குக் கொண்டு செல்ல, எடுத்துவரவும் முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-26)

# கலை இலக்கிய பெரு விழா 12 ஆம் திகதி துன்னாலையில்

வடமராட்சி ஜூன் 8

அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தின் கலை இலக்கியப் பெருவிழா எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு துன்னாலை அல்லையம்பதியடி லேன் மணி மண்டபத்தில் கலை இலக்கிய சங்கத்தின் தலைவர் பண்டிதர் பொன். சுகந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முக தாஸ், யப்பான் பல்கலைக்கழக ஆய்வாளரும் விரி வுரையாளருமான கலாநிதி மனோன்மணி சண்முக தாஸ் ஆகியோர் கலந்து கொள்வார்கள்

விசேட விருந்தினராக இளைப்பாறிய மாவட்ட நீதிபதி .மு.திருநாவுக்கரசு,சிறப்பு விருந்தினராக யாழ்.இலக்கிய வட்டத் தலைவர் கலாநிதி க.குணராசா (செங்கையாழியான்) கௌரவ விருந் தினராக கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்திய சீலன் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

நாடகக் கலைஞர் அமரர் கந்தையா வடிவேலு ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டி யில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு, கலை, இலக்கியத்துறைக்கு சிறப்பாகச் சேவை ஆற்றி வரும் திருமறைக் கலாமன்றத்துக்கு 2010ம் ஆண் டுக்கான அதி உயர் விருது வழங்கி கௌரவித் தல் ஆகிய நிகழ்வுகளும் விழாவில் இடம் பொறும்.

அரிச்சந்திர மயானகாண்டம், காத்தவராயன் சிந்து நடைக்கூத்து, சத்தியவான் சாவித்திரி ஆகிய இசை நாடகங்களும் பட்டிமன்றமும் இந்த விழாவில் நடைபெறவுள்ளது. (த-236)

## இதுபோதுமா...



கோப்பாய் அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற அலங்கார உற்சவகாலங்களில் தெய்வீகப் பேருரையாற்றிய காரை.எம்.பி.அருளானந்தன் தேவஸ்தான திருப்பணிச் சபையினரின் சார்பில் ' செந்தமிழ்கலை ஞானி' எனும் பட்டமும் விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் தம்பதியினர் விருதை வழங்குகின்றனர்.

# நூலக டிப்ளோமா கற்கை நெறி

யாழ்ப்பாணம், ஜூன் 8

இலங்கை நூலக சங்கத்தின் யாழ்ப்பாண நிலையத்தால் நடத் தப்படும் நூலகமும், தகவல் விஞ்ஞானமும் டிப்ளோமா கற்கை நெறி தரம் 3 இற்கான வகுப்புகள் எதிர் வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கேட் போர் கூடத்தில் ஆரம்பமாகும் கற்கை நெறிக்கு தெரிவு செய்யப் பட்ட மாணவர்கள் தவறாது சமுகமளிக்குமாறு இலங்கை நூலக சங்கத்தின் யாழ். நிலைய ஒருங்கிணைப்பாளர் திருமதி கல்பனா சந்திரசேகர் அறிவித் துள்ளார். (த-236)

# எள்ளுக்கு கிராக்கி

சுழிபுரம், ஜூன் 8

சுழிபுரம் பகுதியிலுள்ள வயல் களில் அறுவடைசெய்யப்பட்ட எள்ளுக்கு நல்ல கிராக்கி ஏற் பட்டுள்ளது.போதிய எள் விளை யாமல் போனாலும் எள் தட்டுப் பாட்டினால் அதிகவிலை கொடுத்து வாங்குவதற்கு வியாபாரிகள் தினமும் சுழிபுரம் வந்து போவ தைக் காணமுடிகின்றது.(த-28)

# மரக்கன்று வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூன்8

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு சுற்றாடலை வளப் படுத்தும் நோக்குடன் ஐ.டி.எம் நிறுவனத்தின் சாவகச்சேரிக் கிளையினால் பயன்தரு மரக் கன்றுகள் பாடசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் முதற் கட்டமாக சாவகச்சேரி டிறி பேர்க் கல்லூரி, மீசாலை வீர சிங்கம் மகாவித்தியாலயம், கொடி காமம் திருநாவுக்கரசு மகாவித் தியாலயம், கைதடி முத்துக் குமாரசாமி மகாவித்தியாலயம் ஆகியவற்றுக்கு மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளன. (த-ற)

# குடாநாட்டு கூட்டுறவு நிறுவனங்களில் புதிய அங்கத்தவரை இணைக்கும் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

89 ஆவது சர்வதேசக் கூட்டு றவுத் தினத்தை முன்னிட்டு யாழ்.குடாநாட்டில் உள்ள பலநோக் குக்கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட அனைத்துக்கூட்டுறவு நிறுவனங் களிலும் புதிதாக அங்கத்தவர் களை இணைக்கும் திட்டம் ஆரம் பித்து வைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கூட்டுறவு நிறுவனங்கள் தமது ஒவ்வொரு கிளை நிலையங் களில் இருந்தும் குறைந்தது 50 உறுப்பினர்களை புதிதாக இணைத் துக்கொள்ள வேண்டும்.

தேசிய ரீதியில் மேற்கொள் ளப்பட்டு வரும் இந்தத் திட்டத் துக்கு பொது மக்கள் மற்றும் கூட் டுறவாளர்கள் முழுமையான ஒத் துழைப்பு வழங்கவேண்டும்.

18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் இந்தப் புதிய அங் கத்துவத்தில் இணைவதன் மூலம் கூட்டுறவு அமைப்புக் களை மேலும் அபிவிருத்தி செய்து கொள்ளமுடியும்.

புதிதாக அங்கத்துவத்தில் இணைய விரும்புபவர்கள் தத் தமது பிரதேச கூட்டுறவு நிறு வனங்கள் மற்றும் பல நோக்குக் கூட்டுறவு சங்கத் தலைமை அலுவலகங்களில் இதற்கான படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து அதனை எதிர் வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் ஒப் படைக்கவேண்டும்.

இதற்கெனச் சகல கிளை விற் பனை நிலையங்களிலும் இது குறித்து விழிப்புணர்வு நடவ டிக்கை மேற்கொள்ளவேண்டும்.

கிளை முகாமையாளர்கள், நுகர்வோர் மத்தியில் இது குறித்த தகவலைத் தெரியப்படுத்தி அவர்களை அங்கத்ததுவத் தில் இணைப்பதற்கு முழுமை யான ஆக்கபூர்வமான ஏற்பாடு களை மேற்கொள்ள வேண்டும்- என்றார். (த-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.தேர்தல் மாவட்டத்தில் 554 வாக்களிப்பு நிலையங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன் 8
யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் அடுத்த மாதம் இடம்பெறவுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் 554 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாக உதவித்தேர்தல் ஆணையாளர் ஆ.சு.கருணாநிதி தெரிவித்தார்.

ஒத்தி வைக்கப்பட்ட உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் அடுத்த மாதம் 23 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இதற்கான தேர்தல் நடவடிக்கைகளில் யாழ்.தேர்தல் திணைக்களம் ஈடுபட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் தொடர்பாக உதவித் தேர்தல் ஆணையாளரைக் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு;-

வல்வெட்டித்துறை நகரசபைக்கு 11 வாக்களிப்பு நிலையங்களும், பருத்தித்துறை நகர சபைக்கு 12 வாக்களிப்பு நிலையங்களும், சாவகச்சேரி நகர சபைக்கு 13 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன.

காரைநகர் பிரதேச சபைக்கு 14 வாக்களிப்பு நிலையங்களும், ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு 17 வாக்களிப்பு நிலையங்களும், நெடுந்தீவு பிரதேச சபைக்கு 3 வாக்களிப்பு நிலையங்களும், வலி.மேற்கு பிரதேச சபைக்கு 35 வாக்களிப்பு நிலையங்களும், வலி.வடக்கு பிரதேச சபைக்கு 51 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன.

வலி. தென்மேற்கு பிரதேச சபைக்கு 39 வாக்களிப்பு நிலையங்களும், வலி.தெற்கு பிரதேச சபைக்கு 43 வாக்களிப்பு நிலையங்களும், வலி.கிழக்கு பிரதேச சபைக்கு 55 வாக்களிப்பு நிலையங்களும்,

வடமராட்சி தென் மேற்கு பிரதேச சபைக்கு 42 வாக்களிப்பு நிலையங்களும், பருத்தித்துறை பிரதேச சபைக்கு 31 வாக்களிப்பு நிலையங்களும், சாவகச்சேரி பிரதேச சபைக்கு 38 வாக்களிப்பு நிலையங்களும், நல்லூர் பிரதேச சபைக்கு 28 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு 18 வாக்களிப்பு நிலையங்களும், கரைச்சி பிரதேச சபைக்கு 58 வாக்களிப்பு நிலையங்களும், பூநகரி பிரதேச சபைக்கு 19 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன - என்றார். (த-15)

## கரம்பைக்குறிச்சிப் பாடசாலையில் நீர்க்குழாய் புனரமைப்பு

கொடிகாமம், ஜூன் 8
கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலையின் குடிதண்ணீர் வழங்கும் குழாய்கள் மாணவர்களின் பெற்றோர்களின் நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் பாடசாலையின் குடிதண்ணீர் தேவை தங்கு தடையின்றிக் கிடைக்க வழி ஏற்பட்டுள்ளதாக அதிபர் எஸ்.தயாபரன் தெரிவித்தார்.

அண்மையில் இனந்தெரியாத நபர்களால் சேதமாக்கப்பட்ட இந்தப் பாடசாலையின் நீர் வழங்கும் குழாய்களே திருத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-122)

## சர்வதேசக் கூட்டுறவு விழாவில் வடபகுதியிலிருந்து 1000 பேர்

யாழ்ப்பாணம்,ஜூன் 8
குருநாகலில் ஜூலை மாதம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வதேச கூட்டுறவுதின விழாவில் வட பகுதியிலிருந்து 1000 கூட்டுறவாளர்களை அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளை வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மேற்கொண்டுள்ளார்.

யாழ்.மாவட்டத்திலிருந்து 300 பேரும், வவுனியா மாவட்டத்திலிருந்து 250 பேரும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களிலிருந்து தலா 150 பேரும் இந்த விழாவில் பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு ஐந்து மாவட்டங்களின் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள், கூட்டுறவுச் சபையின் தலைவர்கள் ஆகியோருக்கு வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அறிவித்துள்ளார். சர்வதேச கூட்டுறவு தின விழாவினை முன்னிட்டு ஜூன் 28 ஆம் திகதியிலிருந்து ஜூலை 2 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள தேசிய மட்ட விளையாட்டு நிகழ்வுகளில் கூட்டுறவாளர்கள் கலந்துகொள்வதற்கான ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன.

மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விளையாட்டு அணிகளில் இருந்து மாகாண அணியை தெரிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-26-135)

கல்வி அபிவிருத்தி...



நேரடியாக ஆய்வு: நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்துக்கு நேற்று செவ்வாய்க்கிழமை சென்ற கல்விச் சேவை ஆணைக்குழுவின் ஆய்வாளரும் தேசிய கல்வி நிறுவன முன்னாள் பணிப்பாளருமான லியானி அமரசிங்க மற்றும் தேசிய கல்வியியல் கல்லூரி உப பீடாதிபதி சத்தியேந்திரம் பிள்ளை ஆகியோர் வித்தியாலய அதிபர் எஸ்.சேதுராஜாவைச் சந்தித்துக் கலந்துரையாடுகின்றனர். (த-319)

## ஆலயங்களின் உண்டியல்கள் உடைத்துப் பணம் திருட்டு

கொழும்புத்துறை, ஜூன் 8
கொழும்புத்துறைப் பகுதியில் ஆலயங்களின் உண்டியல்களை உடைத்து பணத்தைக் களவாடிச் செல்லும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

கடந்த சனிக்கிழமை இரவு புங்கங்குளம். வில்வையடி நாக பூஷணி அம்மன் ஆலயத்தில் உண்டியல் உடைக்கப்பட்டு திருடர்களால் பணம் முழுவதும் திருடப்பட்டுள்ளது.

அண்மையில் திருவிழா நடைபெற்ற இந்த ஆலயத்தின் உண்டியல் பணத்தை திருடியவர்கள் பூசகர் விஷேட தினங்களில் பயன்படுத்தும் வாளால் உண்டியலை உடைத்தமையால் அந்த வாள் பல துண்டுகளாக உடைந்து காணப்படுகிறது.

கடந்த மாத பிற்பகுதியில் பாண்டியன்தாழ்வில் உள்ள வைரவர் ஆலயம், புனித அன்னம்மாள் ஆலயம் என்பவற்றின் உண்டியல்களையும் உடைத்து திருடர்கள் பணத்தை எடுத்துச் சென்றனர்.

இவ்வாறு ஆலயங்களில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி வருவது பக்தர்கள் மத்தியில் கவலையையும் விசனத்தையும் தோற்றுவித்துள்ளது. (த-135)

## சட்டவிரோத மதுபான விற்பனை 5 மாதங்களில் 71 பேர் சிக்கினர்

### 79 ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம்,ஜூன் 8
கடந்த 5 மாதங்களுக்குள் சட்டவிரோத மதுபானம் விற்பனை செய்த 71 பேரிடம் 79 ஆயிரத்து 400 ரூபா யாழ். நீதிமன்றத்தால் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மதுவரித்திணைக்களப் பொறுப்பதிகாரி என்.கிருபாகரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.மதுவரித் திணைக்கள எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோத மதுபானம் விற்பனை செய்யப்படுவதாகக் கிடைத்த தகவல்களையடுத்து திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையில் சிக்கிய 71 பேரும் யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்குகளை விசாரித்த யாழ்.நீதிமன்றம் 79 ஆயிரத்து 400 ரூபா அபராதம் விதித்தது.

அனுமதியின்றி சாராய விற்பனையில் ஈடுபட்டமை, வீடுகளில் வைத்து கள் விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரிலே இவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. (த-9)

## ஓகஸ்டில் விவசாயக் கண்காட்சி இம்முறை புதிய விடயங்களுடன்

யாழ்ப்பாணம், ஜூன் 8
எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள விவசாயக் கண்காட்சியில் பல புதிய விடயங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

கடந்த ஆண்டை விட இம்முறை நடைபெறும் கண்காட்சி மிகவும் வித்தியாசமாக இருக்கும் என யாழ்.விவசாயத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இம்முறை மத்திய விவசாயத் திணைக்களமும் இதில் கலந்து கொள்ளவுள்ளது. இது தவிர ஏனைய பகுதிகளைச் சோர்ந்த விவசாய திணைக்களங்களையும் பங்குகொள்ளுமாறு மாகாண விவசாய பணிப்பாளர் நாயகம் கேட்டுக்கொள்ளவுள்ளார்.

விவசாயக் கண்காட்சியை முன்னிட்டு மரக்கறி, பழ வகை, மறுபயிர் வகைகளுக்கான பயிர்த்துண்டங்கள், உள்ளக வீதிகள் போன்ற முக்கிய வேலைத் திட்டங்களைச் செயற்படுத்துவதில் விவசாய திணைக்களம் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது - என்றார். (த-7)

## கசிப்புத் தொல்லை 5 மாதமாக இல்லை

யாழ்ப்பாணம்,ஜூன் 8
யாழ்.மதுவரித் திணைக்களத்தின் எல்லைக்குள் கசிப்புத் தொல்லை முழுமையாக நீக்கி விட்டது.

யாழ்.மதுவரித்திணைக்கள பொறுப்பதிகாரி என்.கிருபாகரன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த 2010 ஆம் ஆண்டு யாழ்.மதுவரித் திணைக்கள எல்லைக்குள் சட்டவிரோத மதுபானம் விற்பனை செய்த 178 பேருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இதில் கசிப்பு விற்பனை செய்த 30 பேர் அடங்கியிருந்தனர்.

கடந்த 5 மாதகாலத்தில் கசிப்பு விற்பனை செய்த எவரும் கைதுசெய்யப்படவுமில்லை, அது தொடர்பான முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை. இருப்பினும் கிராம உத்தியோகத்தர்களின் ஆதரவுடன் அவ்வப்போது எமது திணைக்கள அதிகாரிகள் திடீர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்[illegible]றார். (த-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
08 ஜூன் 2011 புதன்கிழமை

# நல்லை ஆதீனத்தில் ஞாயிறன்று சிறந்த நூல்களுக்கான பரிசளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்8

யாழ். இலக்கிய வட்டம், இலங்கை இலக்கியப் பேரவை ஆகியன இணைந்து நடத்தும் 2008-2009ஆம் ஆண்டுகளில் வெளியான சிறந்த நூல்களுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லை ஞானசம்பந்தர் ஆதீ னத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். இலக்கிய வட்டத் தலைவர் கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், அருட்தந்தை ஐ.டா. டிக்சன் ஆகியோர் ஆசியுரை வழங்குவார்கள்.

நிகழ்வில் பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, இலக்கியப் பேரவைச் செயலாளர் சி.சிவதாசன் ஆகியோர் உரையாற்றுவார்கள்.

சிறந்த நூல்களாகத் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் பெறும் நூல்கள் வருமாறு:

2008 ஆம் ஆண்டுக்கான பரிசு பெறும் நூல்கள்

* லோமியா - எஸ்.ஏ. உதயன் (நாவல்)
* நினைவுகள் மடிவதில்லை - சிற்பி சரவணபவன் (சிறுகதை)
* இது நதியின் நாள் - பெண்ணியா (கவிதை)
* காவியம் (தகுதியானவை கிடைக்கவில்லை)
* வைரப் பனை மரம் - திருமதி சந்திரா தனபாலசிங்கம் (சிறுவர் இலக்கியம்)
* ஒருகலைஞனின் கதை- கலைஞர் கலைச்செல்வன் (நாடகம்)
* சிவஞானபோதச் சிற்றுரை (மட்டுவில் சு.நடராசா)
* இறைவிழுமியம் -அருட்தந்தை அ.ஸ்ரீபன் (சமயம்)
* மனமெனும் தோணி -கோகிலா மகேந்திரன் (பல்துறை)
* சூழவம்சம் கூறும் இலங்கை வரலாறு -செங்கை ஆழியான் (மொழிபெயர்ப்பு)
* சிறுவர் நீதிப் போதனைக் கதைகள் - வைரமுத்து சுந்தரேசன் (மொழிபெயர்ப்பு)

2009ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல்கள்

* துயரம் சுமப்பவர்கள் நீ.பி. அருளானந்தம் (நாவல்)
* இலங்கைத் தமிழ்ச் சிந்தனை வளர்ச்சியில் அமெரிக்க மிஷன் - கலாநிதி எஸ்.ஜெபநேசன் (ஆய்வு)
* ஒருவருக்காக அல்ல -அமரர் து.வைத்திலிங்கம் (சிறுகதை)
* குரல் வழிக் கவிதைகள் - அல் அஸுமத் (கவிதை)
* காவியம் (எதுவும் கிடைக்கப் பெறவில்லை)
* திந்தேன் - பண்டிதர் அ.ந. கடம்பேஸ்வரன்(சிறுவர் இலக்கியம்)
* கங்கையின் மைந்தன் - அகளங்கன்(நாடகம்)
* ஞானதீபம் - சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் (சமயம்)
* பண்டைத் தமிழர் பண்பாட்டுத் தடங்கள் - கலாநிதி ம.ரகுநாதன் (பல்துறை)
* திறந்த கதவு - திக்குவல கமால் (மொழிபெயர்ப்பு சிறுகதை)

(த-7-236)

# யாழ். பாடசாலைகளுக்கு புதிய அதிபர்கள் நியமனம்

யாழ்ப்பாணம்,ஜூன்8

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் சிலவற்றுக்குப் புதிய அதிபர்கள் நேற்று நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இந்த நியமனங்கள் உடனடியாக அமுல்படுத்தப்படும் என்று வடமாகாண கல்வி அமைச்சின் பதில் செயலாளர் இ.ரவீந்திரன் அறிவித்துள்ளார்.

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியின் அதிபராக இராசரட்ணம் புஸ்பரட்ணம் நியமிக்கப்பட்டுள்ளார்.

குலசேகரம் திலீபன் உயலப்புலம் மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலையின் அதிபராக நியமனம் பெற்றுள்ளார்.

கோப்பாய் வடக்கு றோமன் கத் தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபராக திருமதி பிரமேலதா ஜெயரட்ணராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனங்களை வடமாகாணக் கல்வி அமைச்சின் பதில் செயலாளர் இ.ரவீந்திரன் நேற்று வழங்கினார்.

இந்த நியமனங்கள் யாவும் வலயக் கல்விப் பணிப்பாளர்களின் சிபார்சுக்கு அமையவே இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-15)

# தனியார் பஸ் வேலை நிறுத்தம்; இ.போ.சபைக்கு 24 லட்சம் வருமானம்

கொழும்பு, ஜூன் 8

கடந்த மூன்று தினங்களாக பாணந்துறை - கொழும்பு தனியார் பஸ்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதால் இலங்கை போக்குவரத்துச் சபை மேலதிக பஸ்களை சேவையில் ஈடுபடுத்தியதன் மூலம் 24 இலட்சம் ரூபாவை வருமானமாகப் பெற்றுள்ளது என பாணந்துறை இ.போ.ச. டிப்போவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாளாந்தம் சராசரியாகக் கிடைக்கும் வருமானத்தை விட இந்த மூன்று தினங்களிலும் 10 இலட்சம் ரூபா மேலதிகமாகக் கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பாணந்துறை-கொழும்பு தனியார் பஸ் ஒன்றின் சாரதியும் நடத்துநரும் இரத்மலானை டிப்போவின் முன்னால் வழி மறித்துத் தாக்கப்பட்டதை ஆட்சேபித்தே தனியார் பஸ்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# துணைவேந்தர் வசந்திக்கு சாவகச்சேரியில் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 8

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முதற்பெண் துணைவேந்தராகப் பதவியேற்றுள்ள பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்தை அவரது பிறந்த மண்ணில் வாழ்த்திக் கௌரவிக்கும் விழா எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோயில் வீதியில் உள்ள தென் மராட்சிக் கலைமன்றக் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

விழாக்குழுவின் தலைவரும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபருமாகிய அ.கயிலாயபிள்ளை தலைமையில் இடம் பெறும் இந்த விழாவில் வாழ்த்துரைகளை யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ்.பல்கலைக்கழகப் பௌதிகவியற்றுறைப் பேராசிரியர் க.கந்தசாமி, தென்மராட்சிக் கல்வி வலயப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி எஸ். கே.யோகநாதன், தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன், முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் புஸ்பா கணேசலிங்கம், சாவகச் சேரி கைத்தொழில் வணிகர் மன் றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ், ஓய்வு பெற்ற மருத்துவர் டாக்டர் சு.சி. அருளானந்தம், சாவகச்சேரி பொது வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி டாக்டர் த.குகதாசன், இரண்டாம் வருட மருத்துவபீட மாணவன் பா. கஜலக்சன் ஆகியோர் வழங்குவர்.

சிறப்பு நிகழ்வாக ''வசந்தம்' என்ற சிறப்பு மலர் வெளியிட்டு வைக்கப்படும். கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் மலரின் வெளியீட்டுரையை ஆற்றுவார்.

யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மலரை விழா நாயகிக்கு வழங்கிக் கௌரவிப்பார். (த)

# பாலர் பாடசாலை கட்டடத் திறப்பு விழா

பண்டத்தரிப்பு, பிரான்பற்று மார்க்கண்டு சுவாமிகள் சபையின் பாலர் பாடசாலைக் கட்டடத் திறப்பு விழா இன்று புதன் கிழமை காலை 8.30 மணிக்கு பிரான்பற்றில் இடம்பெறவுள்ளது.

மார்க்கண்டு சுவாமிகள் சபையின் தலைவர் ந.சண்முகராஜா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் மா.வேதநாதன், வலிகாமம் வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. குகனேசன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

சிவதொண்டன் அமைப்பினரும் பங்குபற்றும் இந்த நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் பரிசில் வழங்கலும் இடம்பெறவுள்ளன. (ஒ-313)

## மரண அறிவித்தல்

### திருமதி பாலசுப்பிரமணியம் சிவயோகம்

சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசுப்பிரமணியம் சிவயோகம் நேற்றுமுன்தினம் (06.06.2011) திங்கட்கிழமை காலமானார்.



அன்னார் ஓய்வுபெற்ற பிரதி தபால்மா அதிபர் பாலசுப்பிரமணியத்தின் பாசமிகு மனைவியும் சுப்பிரமணியம் (R.M.P), கணபதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்), திருமதி சிவஞானம், திருமதி சிவக்கொழுந்து (ஓய்வுபெற்ற ஆசிரியை), திருமதி கமலாதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை), மா.கெங்காதரராசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பார்வதி, சொர்ணமலர் (ஓய்வுபெற்ற ஆசிரியை),சந்திரகாசன் (ஓய்வுபெற்ற T.A ), சிவஞானம் (கிராம அலுவலர்), காலஞ்சென்ற சிவானந்தன் (R.D.A), ஜலஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் கஜேந்திரன், Dr. சசிகரன், சிறிரங்கன், Dr. சிவதர்சனா,சேந்தன், ஞானச்சந்திரன், ஞானமதி, ஞானேஸ்வரி, ஞானேந்திரன், சிவகுமார், சிவபவன், பவானி ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும், வித்தியானந்தன், அருள்நிதி, தயாநிதி, சத்தியா, ஐங்கரன், காயத்திரி, கணாத்தியன், கஜேந்திரன் ஆகியோரின் அருமை மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.06.2011) புதன் கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
பாலசுப்பிரமணியம்
(கணவர்)

(சி/574871)

# ரயில்வே மின்னுற்பத்தி நிலையத்தில் 10 லட்சம் ரூபா டீசல் திருட்டு

கொழும்பு, ஜூன் 8

மருதானை ரயில்வே மின்னுற்பத்தி நிலையத்தின் டீசல் தாங்கியில் திடீர் சோதனையை மேற்கொண்ட ரயில்வே அதிரடிக் குழுவினர் அந்தத் தாங்கியில் 16,870 லீற்றர் டீசல் திருடப்பட்டுள்ளதைக் கண்டுபிடித்துள்ளனர்.

திருடப்பட்ட டீசலின் பெறுமதி சுமார் பத்து இலட்ச ரூபாவாகும் இது தொடர்பில் இந்த மின்னுற்பத்தி நிலையத்தின் களஞ்சியசாலைப் பொறுப்பாளரும், உதவியாளரும் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என ரயில்வே திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக கடந்த வியாழக்கிழமை அந்த நிலையத்தின் அதிகாரிகள் செய்த முறைப்பாட்டையடுத்தே இந்த அதிரடிச் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

(ச-5)

## கண்ணீர் அஞ்சலி

புன்னாலைக்கட்டுவன் பிரபல தொழிலதிபர்
*அமரர் ச.இராசரத்தினம் [SR]* அவர்களின்
அன்பு மனைவி

### பரமேஸ்வரி



05.06.2011 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

புன்னாலைக்கட்டுவன்
தெற்கு.

தகவல்:
ஐ.சந்திரதேவன் குடும்பம்
(மருமகன்)

(1737)

## மரண அறிவித்தல்

### திருமதி நாகராசா கண்மணி

நயினாதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகராசா கண்மணி 06.06.2011 திங்கட்கிழமை நியூசிலாந்தில் காலமானார்.



அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் கந்தையா நாகராசா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் பாசமிகு மனைவியும் சாந்தினி, பரமகாந்தன், காலஞ்சென்ற சிவகாந்தன் மற்றும் வசந்தினி, பிறேமினி ஆகியோரின் அன்புத் தாயும் மயில்வாகனம், ஆயிஷா, ரமேஷ் ஆகியோரின் பாசமிகு மாமியும் சிவகாமி, சேயோன், றிசோன், நட்டானியா, றோணன், விசாகன், விசானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நியூசிலாந்து வெலிண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/721)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையரின் பணத்தின் மீதும் கண் வைத்துள்ளது அரசு

## அதற்கு இடமளியோம் என்கிறார் பொன்சேகா

கொழும்பு, ஜூன் 8

உள்நாட்டு ஊழியர்களின் பணத்தைக் கொள்ளையிட அரசு முயற்சித்தது. ஆனால், அம் முயற்சி கவிழ்த்துப் போடப்பட்டது. இந்தநிலையில், வெளிநாட்டில் பணிபுரிகின்ற இலங்கையர்களின் பணம் மீது அரசு கண் வைத்துள்ளது. அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்.

-இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.



வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் காலை மேல் நீதிமன்றில் நீதியரசர்களான தீபாலி விஜேசுந்தர, எச்.என்.பி.பி. வராவெவ, சர்பிக் ரஷீக் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நேற்று முன்தினம் நீதிமன்றில்ஆஜர்படுத்துவதற்காக சிறைச்சாலையில் இருந்து அழைத்துவரப்பட்ட போது நீதிமன்ற வளாகத்தில் கூடியிருந்த ஊடகவியலாளர்களிடம் முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா இவ்வாறு கூறினார். (சி)

# ஹோட்டல் பணியாளர்களுக்கு வைத்திய சான்றிதழ் அவசியம்

கொழும்பு, ஜூன்8

கொழும்பு நகரில் இயங்கி வரும் சுமார் ஐநூறுக்கும் மேற்பட்ட நட்சத்திர, மத்தியதர சிறியரக ஹோட்டல்களில் உணவு தயாரிப்பவர்களும், பரிமாறுபவர்களும் தம்மை வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்தி சான்றிதழ்களைப் பெற்றிருக்க வேண்டும் என்ற கட்டாய நிபந்தனையை மாநகரசபை பொதுசன சுகாதார வைத்தியப் பிரிவு விதித்துள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் ஊழியர்கள் தம்மை வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்தி சான்றிதழைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என சபையின் பிரதான பொதுசன சுகாதார அதிகாரி டாக்டர் பிரதீப் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வைத்தியசான்றிதழ் பெற்றிருக்காதவர்களைப் பணியில் அமர்த்தும் ஹோட்டல் நிர்வாகங்களுக்கு எதிர்வரும்ஜூலை முதல் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. அதற்கு மேலதிகமாக வழக்குகளும் தொடரப்படும் எனவும் அவர் தெரிவித்தார். ஊழியர்களை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துமாறு கடந்த மார்ச் மாதம் சகல ஹோட்டல்களுக்கும் எழுத்துமூல அறிவித்தல் கொடுக்கப்பட்டது. எனினும், பெரும்பாலான ஹேட்டல்கள் அதனை உதாசீனம் செய்துள்ளன - என அவர் மேலும் தெரிவித்தார். (சி)

# போதைப் பொருள்களுடன் கல்கிஸவில் இருவர் கைது

கொழும்பு, ஜூன்8

கல்கிஸைப் பகுதியில் போதைப் பொருள்களை வைத்திருந்த இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கல்கிஸைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் கல்கிஸை பொலிஸார் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மொரட்டுவை, கல்கிசை ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்கள் எனவும், இவர்களிடமிருந்து 35 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் ஒரு லட்சம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

## ஆர்ப்பாட்டம்...




கடந்த யுத்த காலத்தில் காணாமல் போனவர்கள் கடத்தப்பட்டவர்களை விடுவிக்க கோரி நாம் இலங்கையர் அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை வவுனியா பஸ் நிலையத்திற்கு முன்னால் இடம்பெற்றபோது மக்கள் பதாகைகளை ஏந்தி எதிர்ப்பினைத் தெரிவிப்பதைக் காணலாம்.

# நாடு முழுவதும் மீன் நிலையங்கள்

கொழும்பு, ஜூன்8

பாவனையாளர்களுக்கு தட்டுப்பாடின்றி மீன்வகைகளைப் பெற்றுக்கொள்வதற்காக நாடு முழுவதிலும் மீன் விற்பனை நிலையங்களை அமைக்கும் திட்டம் ஒன்றைச் செயற்படுத்த மீன்பிடித்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் ஓர் அங்கமாக தெனியாய மற்றும் பற்றபக்த பிரதே சங்களில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரு விற்பனை நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டன.

பாவனையாளர்களுக்கு தட்டுப்பாடின்றி சிறந்த தரத்திலான மீன்களை நியாய விலையில் பெற்றுக் கொடுக்கும் நோக்கிலேயே இந்த திட்டம் அமுல்படுத்தப்படுவதாக மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.(ச)

# மேல்மாகாணத்தில் பாடசாலைகளிலேயே டெங்கு நுளம்புகள் அதிகம் உற்பத்தி

கொழும்பு, ஜூன்8

மேல்மாகாணத்தில் 75 சதவீதமான பாடசாலைகள் டெங்கு நுளம்புகள் பரவும் இடங்களாகக் காணப்படுகின்றமை பூச்சியியல் ஆய்வுமூலம் தெரிய வந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சும், மருத்துவ ஆராய்ச்சி நிலையமும் இணைந்து சப்ர கமுவ, வடமேல், மத்திய மற்றும் தென் மாகாணப் பாடசாலைகளில் ஆய்வுகளை மேற்கொண்டன.

ஏனைய மாகாணங்களிலும் 65 முதல் 75 சதவீதம் வரையான பாடசாலைகள் டெங்குநுளம்பு பரவும் இடங்களாக காணப்படுகின்றன என சுகாதார அமைச்சின் பேச்சாளர் டபிள்யூ.எம்.டி. வன்னி நாயக்க தெரிவித்தார்.

டெங்கு நுளம்புகள் பரவுவதைத் தடுக்கும் முகமாக பாடசாலை வளாகங்களில் வாராந்தம் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்வது குறித்த சுற்றுநிருபங்களை பாடசாலைகளுக்கு அனுப்புவது தொடர்பில் கல்வியமைச்சரும், சுகாதார அமைச்சரும் ஆலோசித்து வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச)

# செல்பேசியால் வந்த வினை

கொழும்பு,ஜூன் 8

செல்போனில் உரையாடியவாறே வாகனத்தைச் செலுத்தியனார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஹைவெல் வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்ட சாரதியொருவருக்கு கங்கொடவில பிரதான நீதிவான் அநுரகுமார ஹேரத் 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார்.

வாகனம் செலுத்தும்போது செல்போன்களில் உரையாடுவது குற்றமெனத் தெரிவித்த நீதிவான் சந்தேக நபருக்கு விதித்த அபராதம் ஏனைய சாரதிகளுக்கும் ஒரு பாடமாக அமையட்டும் எனத் தெரிவித்துள்ளார். (ச)

# சிறுவர் காப்பகங்களை பதிவு செய்ய நடவடிக்கை

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

கொழும்பு, ஜூன்8

சிறுவர் காப்பகங்கள் மற்றும் சிறுவர் கல்வி நிலையங்களைபதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் அனோமா திஸாநாயக்க தெரிவித்தார்.

நாட்டில் அதிகரித்துள்ள சிறுவர் துஷ்பிரயோகங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறி னார்.

இதனடிப்படையில் நாட்டிலுள்ள அனைத்து சிறுவர் காப்பகங்கள், பராமரிப்பு நிலையங்கள் மற்றும் சிறுவர் கல்வி நிலையங்கள் என்பனவற்றை பதிவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் வாகனங்களை பதிவு செய்யும் நடவடிக்கை ஏற்கனவே நாடு முழு வதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தத்திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் வாகனங்களை பதிவு செய்யும் நடவடிக்கை கொழும்பு மாவட்டத்தில் பூர்த்தியடைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ச)

# செயலிழந்தது ஏ.ரி.எம்.சேவை; வாடிக்கையாளர்கள் விசனம்



மன்னார், ஜூன் 8

இலங்கை வங்கியின் மன்னார் கிளையில் அமைக்கப்பட்டுள்ள தன்னியக்க இயந்திரம் (ஏ.ரி.எம்) திடீர் திடீர் என செயலிழந்து போவதால் தாம் தொடர்ந்தும் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என வாடிக்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் வங்கி முகாமையாளருக்கும், தலைமை அலுவலகத்துக்கும் பல தடவைகள் முறையிட்டும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும் அவர்கள் விசனிக்கின்றனர்.

எனவே இந்தவிடயத்தில் வங்கி நிர்வாகம் துரித நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில்வாடிக்கையாளர்கள் ஏனைய வங்கிகளைநாட வேண்டி ஏற்படும் என வாடிக்கையாளர் தரப்பில் மேலும்தெரிவிக்கப்பட்டது. (ச-லி)

# சிறையிலிருந்து தப்பியோடிய கைதி தம்புள்ளையில் கைது

கொழும்பு,ஜூன்.8

அநுராதபுரம் சிறைச்சாலையிலிருந்து தப்பிச் சென்று தலைமறைவாக இருந்த கைதியொருவரை தம்புள்ளை நகரில் வைத்து பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

நான்கு மாதங்களுக்கு முன்னர் அநுராதபுரம் சிறைச்சாலையிலிருந்து தப்பியோடிய இந்தக் கைதி திருகோணமலையில் வேறொரு பெயரில் வாழ்ந்து வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். பெண் பொலிஸாரின் உதவியுடன் இந்தக் கைதியை தந்திரமான முறையில் கைதுசெய்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# கட்டுநாயக்க சம்பவம் தொடர்பில் 200 பேரிடம் சாட்சியங்கள் பதிவு

கொழும்பு, ஜூன் 8

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள் மீதான தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய 200 பேரிடம் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தனியார் ஊழியர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸார் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர், ஆர்ப்பாட்டத்தின் போது பங்குபற்றியவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதுவரை 200 பேரிடம் சாட்சியங்கள் பதிவு செய்துள்ள குற்றத்தடுப்பு பொலிஸார் மேலும் சாட்சியங்களை பதிவு செய்து வருவதாக தெரிவித்துள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய யூனியனின் உதவியுடன் வவுனியாவில் 1,200 வீடுகள்

வவுனியா, ஜூன் 8

ஐரோப்பிய யூனியனின் நிதியுதவியுடன் வவுனியா மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள 1200 வீடுகளின் வேலைகளுக்குரிய ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படும் என மாவட்ட அரச அதிபர் திருமதி எச்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வவுனியா மாவட்ட மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்க ஐரோப்பிய யூனியன் நிதியுதவிகளை வழங்க முன்வந்துள்ளது.

இதன் முதற்கட்டமாக 1200 வீடுகளை அமைத்துக் கொடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு பயனாளிகள் தெரிவு பிரதேச செயலக ரீதியாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளிகளை அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடிய ஐரோப்பிய யூனியன் குழுவின் பிரதிநிதிகள் அடுத்த வாரம் ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-9)

# அச்சுறுத்தும் இரவுகள்

கிளிநொச்சி, ஜூன் 8

கிளிநொச்சிப் பகுதியில் உள்ள வீதிகள் எவற்றுக்குமே வீதி விளக்குகள் பொருத்தப்படாத நிலையில் இரவில் போக்குவரத்தை மேற்கொள்பவர்கள் சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

கிளிநொச்சியின் நகரப் பகுதியான பிரதான சந்திக்குக் கூட வீதி விளக்கு எதுவுமே பொருத்தப்படாத நிலை காணப்படுகின்றது. இதனால் இரவில் வீதிகள் அனைத்துமே இருள் சூழ்ந்த நிலையில் காணப்படுகின்றன. இதனால் பாதசாரிகள் பயணிக்கும் போது மிகவும் அச்சத்துடனேயே பயணிக்கின்றார்கள். இரவில் வீதி வெளிச்சம் இல்லாமையால் களவு போன்ற சமூக விரோதச் செயல்கள் நடைபெறுவதற்கு ஏற்றதாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே உரியவர்கள் கவனம் செலுத்தி கிளிநொச்சியின் பிரதான சந்திகள், வீதிகளுக்கு வீதி விளக்குகளைப் பொருத்தி உதவ வேண்டுமென இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க-426)

## கணினிப் பயிற்சி நெறிகள்

மன்னார், ஜூன் 8

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் மன்னார் மாவட்டக் காரியாலயத்தால் மன்னார் மாவட்டத்தில் கணினி டிப்ளோமாப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பாடசாலைக் கல்வியை முடித்து உயர் கல்விக்கான வாய்ப்பைத் தவறவிட்டவர்களுக்கும், தொழில் வாய்ப்பைத் தேடிக் கொண்டிருப்பவர்களுக்கும் இது ஓர் அரிய சந்தர்ப்பமாக அமைந்துள்ளது.

ஆர்வமுள்ள பயிலுநர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிடாமல் பயன்படுத்திக் கொள்ளுமாறும் மேலதிக தகவல்களுக்குத் தமது மாவட்டக் காரியாலயமான 'தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகாரசபை, மாவட்டக் காரியாலயம், மன்னார்' என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-601)

மரியாதை...



நல்ல ஒழுங்கமைப்பு: மன்னாரில் நடைபெற்ற பொலிஸாரின் வருடாந்த அணிவகுப்பு மரியாதையை மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கொடித்துவக்கு ஏற்றுக் கொள்ளுகின்றார். (601)

## வவுனிக்குளத்தின் புனரமைப்பு ஆரம்பம்

முல்லைத்தீவு, ஜூன் 8

முல்லைத்தீவு மாந்தை கிழக்கிலுள்ள வவுனிக்குளத்தின் புனரமைப்புப் பணிகள் கடந்த 3 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

கெயர் திட்டத்தின்கீழ் வவுனிக்குளத்தின் உள்ளக புனரமைப்புப் பணிகளுக்கென 240 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தக் குளத்தின் புனரமைப்பு பணிகளின் ஆரம்ப நிகழ்வு வவுனிக்குளம் சீதாளாம்பிகை சமேத சிவபுரநாதர் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளுடன் ஆரம்பிக்கப்பட்டது.

நிகழ்வில் மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் கே.ஜெயக்காந்த், வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர் எஸ். சுபாகரன் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் எனப்பலர்கலந்துகொண்டனர்.(க-6)

# கசிப்பு விற்றவருக்கு அபராதம், தண்டம்

கிளிநொச்சி, ஜூன் 8

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டதுடன் மூன்று மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, தருமபுரம் பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்து விற்பனையில் ஈடுபட்டுவந்த ஒருவர் தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கடந்த முதலாம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்.

குறித்த நபர் ஏற்கனவே நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்ட போதிலும் மீண்டும் கசிப்பு உற்பத்தி செய்து விற்பனையில் ஈடுபட்டமை தெரிய வந்தது. இதனால் 10 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்துமாறு நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டது. பணம் கட்டத் தவறின் இருமாத சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் அத்துடன் மேலதிகமாக மூன்றுமாத சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

(க-6)

# நெற் பயிர்களில் நோய்த் தாக்கம்

முல்லைத்தீவு, ஜூன் 8

முல்லைத்தீவு மாவட்டம் முத்துஐயன்கட்டுக் குளத்தின் கீழும், சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழும் செய்கை பண்ணப்பட்ட சிறுபோக நெற் பயிர்களில் ஒருவகை நோய் ஏற்பட்டுத் தாக்கங்களை ஏற்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெற் பயிர்களின் இலைகள் பழுத்துக் காணப்படுவதுடன் இலைகளில் வெள்ளை நிறமும் காணப்படுகின்றமை இந்த நோயின் அறிகுறிகளாகும்.

விவசாயிகள் கிருமி நாசினியைத் தெளித்த போதிலும் இந்த நோய் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை.

ஆகவே விவசாயப் போதனாசிரியர்கள் இதனைப் பார்வையிட்டு உரிய ஆலோசனைகளை வழங்குமாறு விவசாயிகள் கேட்டுள்ளனர். (க-500)

# ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சை கருத்தரங்கு இன்றும் நாளையும்

கிளிநொச்சி, ஜூன் 8

ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் பொருளியல் பாடத்தைக் கற்று முதல் தடவையாக இந்த ஆண்டுக்கான பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்குமுகமாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட முன்னோடி வினாத்தாள் தொடர்பான கருத்தரங்குகள் இன்றும், நாளையும் கிளிநொச்சி மத்திய கல்லூரியிலும், கிளிநொச்சி மகாவித்தியாலயத்திலும் நடைபெறவிருக்கின்றன.

காலை 9 மணிக்கு இந்தக் கருத்தரங்கு குறிப்பிட்ட நிலையங்களில் ஆரம்பமாகும்.

கிளிநொச்சி மத்திய கல்லூரியில்:

கிளிநொச்சி மத்திய கல்லூரி, பூநகரி ம.வி, இராமநாதபுரம் ம.வி, அக்கராயன் ம.வி, கனகபுரம் ம.வி, திருவையாறு ம.வி, தருமபுரம் ம.வி, பரந்தன் இந்து மகாவித்தியாலயம், முழங்காவில் ம.வி. ஆகிய பாடசாலைகளுக்கும்.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில்:

கிளிநொச்சி மகா வித்தியாலயம், கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி, வட்டக்கச்சி ம.வி, முருகானந்தா ம.வி, உருத்திரபுரம் ம.வி, பளை மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கும் இந்தக் கருத்தரங்குகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகக் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா அறிவித்துள்ளார்.

(க-405)

# வறிய சீவல் தொழிலாளர்களுக்கு முல்லையில் வீடமைப்புத் திட்டம்

முல்லைத்தீவு, ஜூன் 8

ஜனாதிபதியின் சிறப்பு வேலைத்திட்டத்துக்கமைய 89 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தையொட்டி பனை தென்னை வள கூட்டுறவு அபிவிருத்திச் சங்கங்களின் வறிய அங்கத்தவர்களுக்கான வீட்டுத் திட்டங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இதற்கமைவாக ஒட்டுசுட்டான், வித்தியாபுரம் அரை ஏக்கர் திட்டத்தில் வசிக்கும் திருமதி வளர்மதி தவஞானம் என்பவருக்குரிய வீடு அமைப்பதற்கான அடிக்கல் நடும் வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

பனை தென்னை வள கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்தின் பொது முகாமையாளர் உதயச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் கூட்டுறவு உதவி ஆணையாளர் சி.தவராசா, கிராம சேவை அலுவலர் கா.பாலசுப்பிரமணியம், சங்கத்தின் உப தலைவர் கு. இலட்சுமிகாந்தன், சங்கக் கணக்காளர் திருமதி செல்வராணி தனராஜ் ஆகியோர் அடிக்கல்லை நட்டு வைத்தனர். நன்றியுரையை சங்கங்களின் இணையப் பொது முகாமையாளர் சி.வேதவனம் ஆற்றினார்.

இதைப் போன்று புதுக்குடியிருப்புப் பிரதேசம் வள்ளுவர்புரம் கிராமத்திலுள்ள புவனேஸ்வரன் என்பவரின் வீட்டுக்கும் அடிக்கல் நட்டு வைக்கப்பட்டது. புதுக்குடியிருப்பு பனை தென்னை வள கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்தின் பொது முகாமையாளர் நா.செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற நிகழ்வின்போது கூட்டுறவு உதவி ஆணையாளர் சி.தவராசா அடிக்கல்லை நட்டு வைத்தார்.

இந்த இரு நிகழ்வுகளிலும் சங்கத்தின் பணியாளர்கள், பொது மக்களெனப் பலர் கலந்து கொண்டனர். (க-500)



ஒட்டுசுட்டான் வித்தியாபுரத்தில் வீடொன்றின் அடிக்கல் நடும் நிகழ்வில் கூட்டுறவு உதவி ஆணையாளர் சி.தவராசா மங்கள விளக்கேற்றுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சிலுவைச் சங்கத்தின் நிதியுதவியில் 600 வீடுகள்

கிளிநொச்சி, ஜூன் 8

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் நிதியுதவியுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் 600 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்தத் தகவலை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தப் பல்வேறு நிறுவனங்கள் உதவிகளைப் புரிந்து வருகின்றன.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் 600 வீடுகளை அமைத்துக் கொடுக்கும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது. இதில் இதுவரை 300 வீடுகள் முழுமையாக்கப்பட்டுப் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

ஏனைய வீடுகளை அமைக்கும் பணிகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-9)

# திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு

வவுனியா, ஜூன் 8

அண்மைக் காலமாக வவுனியாவிலுள்ள சில கிராமங்க ரில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

குறிப்பாக ஆசிகுளம், சிதம்பரபுரம் பகுதிகளில் இவை அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் பகுதியில் திருமண வீட்டுக்குப் பகலில் சென்றுவிட்டு வந்தவர்களின் நகைகளைப் பறித்துக் கொண்டு ஓடிய திருடர்கள் அந்தப் பகுதிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

சிதம்பரபுரம் பகுதியில் இரவு வேளை வீடு ஒன்றினுள் புகுந்த திருடர்கள் அங்கிருந்தவர்களுக்கு மயக்க மருந்தைத் தெளித்துவிட்டு பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

இத்தகைய சம்பவங்களால் இந்தப் பகுதி மக்கள் அச்சத்துடனேயே பொழுதைக் கழித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(க-421)

# நாற்சந்தியில் பெருங்குழி போக்குவரத்துக்கு இடையூறு

முல்லைத்தீவு, ஜூன் 8

கற்சிலைமடு ஸ்ரீ விநாயகர் ஆலயத்துக்கு முன்பாக நாற்சந்தி கூடும் இடத்தில் காணப்படும் பெரிய குழி மக்களின் போக்குவரத்துக்கு இடையூறாகக் காணப்படுகின்றது.

இந்தக் குழி கடந்த மழை காலத்தின்போது உருவானது. ஆனால் இதுவரை மூடப்படாத நிலையிலேயே உள்ளது.

கற்சிலைமடு பிரதான சந்தியிலிருந்து பண்டாரவன்னி, கற்சிலைமடு கிராமங்களின் ஊடாக முத்துஐயன்கட்டு டி-2 வாய்க்காலுடன் செல்லும் வீதியில் இந்தப் பெரிய குழி காணப்படுவதால் பெருமளவு மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

இருமருங்கும் வாய்க்கால்கள், நான்கு திசைகளிலிருந்தும் பிரயாணம் செய்வோரென குழி அமைந்துள்ள இடம் பிரதான இடமாக விளங்குவதால் வாகனங்களில் பிரயாணம் செய்யும் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். அத்துடன் விபத்துக்கள் ஏற்படும் வாய்ப்புக்களும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

ஆகவே உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் கூடிய கவனமெடுத்து இந்தக் குழியை மூடுவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென மக்கள் கோருகின்றனர். (க-500)

## விழாவுக்கு ஏற்றம்...



விருந்தினருக்கு மரியாதை: நானாட்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கலை விழாவில் கலந்து கொண்ட விருந்தினர்கள் விழா மேடையில் காணப்படுகின்றனர். (601)

# மீள்குடியமர்வு மறுக்கப்பட்ட உழவனூர் குடும்பத்தினர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

கிளிநொச்சி, ஜூன் 8

கிளிநொச்சி, தருமபுரம் உழவனூர் பகுதியைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர் அவர்களது சொந்தக் காணியில் மீளக்குடியமர்வதற்கு அந்தப் பகுதிக் கிராம அலுவலர் மற்றும் உதவி அரச அதிபர் ஆகியோர் மறுத்துள்ளதாகக் கூறி பாதிக்கப்பட்ட குடும்பத் தலைவர் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

கிளிநொச்சி, தர்மபுரம் உழவனூர் கிராமத்தைச் சேர்ந்த றெஜினோல்ட் சுரேஸ்குமார் என்பவர் கடந்த 2010 ஆம் ஆண்டு மீளக்குடியமர்வுக்காக வந்தவேளை குறித்த குடும்பத்தை அவர்களுடைய காணியில் மீளக்குடியமர்வதற்குக் குறித்த பிரிவைச் சேர்ந்த கிராம அலுவலரும் உதவி அரச அதிபரும் அனுமதிக்கவில்லை எனவும் இதனால் தானும் தனது குடும்பமும் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் கூறி யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் இவரால் முறைப்பாடு செய்யப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி இந்த விடயம் தொடர்பாக நடைபெற்ற விசாரணையின் போது முறைப்பாட்டாளர் றெஜினோல்ட் சுரேஸ்குமாரும் பிரதிவாதிகளான கண்டாவளை உதவி அரச அதிபர் சத்தியசீலன், குறித்த கிராம அலுவலர் மயில்வாகனம் இராசரட்ணம் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

இந்த விசாரணையின் போது முறைப்பாட்டாளரது நிலைப்பாடு தொடர்பாக அறியத் தருமாறு கேட்கப்பட்டது. அதனடிப்படையில் றெஜினோல்ட் சுரேஸ்குமார் கூறுகையில்:

கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற விசாரணையின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய தன்னை தனது சொந்த இடத்தில் குடியமர்வதற்கு உதவி அரச அதிபரோ அல்லது கிராம சேவையாளரோ நடவடிக்கை எடுக்கவில்லையெனத் தெரிவித்தார்.

ஆணைக்குழு தமக்குக் கட்டளையிட்டதற்கு அமையத் தம்மால் இயன்ற அளவு நடவடிக்கைகளை தாம் மேற்கொண்டதாக கிராம அலுவலர் தெரிவித்தார்.

மேலும் இந்தக் காணிப் பிணக்குத் தொடர்பான மேலதிக விசாரணையொன்று கடந்த 23 ஆம் திகதி நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 2.15 மணி வரை நடைபெற்றது. இந்த விசாரணை தொடர்பாக பிரதிவாதியான கண்டாவளை உதவி அரச அதிபரிடம் கேட்டபோது கருத்துக்கூற மறுத்துவிட்டார்.

(க-6)

# அமைதியைக் குலைப்பவர்களால் நூலக வாசகர்களுக்குச் சிரமம்

கிளிநொச்சி, ஜூன் 8

கிளிநொச்சி மாவட்ட பொது நூலகத்துக்கு வரும் ஒரு சிலரின் அமைதியைக் குலைக்கும் செயற்பாடுகளால் ஏனைய வாசகர்கள் சிரமங்களுக்கு ஆளாகி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரைச்சிப் பிரதேச சபையின்கீழ் இயங்கிவரும் இந்த நூலகம் தற்போது கிளிநொச்சி பொதுவிளையாட்டு மைதானத்திலுள்ள ஒரு கட்டடத்தில் பல்வேறு வசதியீனங்களுக்கு மத்தியில் இயங்கி வருகின்றது.

தற்போது இந்த நூலகத்தில் பத்திரிகைப் பகுதிதான் பிரதானமாகக் காணப்படுகின்றது. அநேகமான வாசகர்கள் இந்தப் பகுதியைத்தான் பயன்படுத்தி வருகின்றனர். கிளிநொச்சி மாவட்டத்திலேயே தற்போது இந்த நூலகம்தான் பொது நூலகமாகச் செயற்பட்டு வருகின்றது.

இதனால் மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்களெனப் பலரும் இதனை நாடி வருகின்றனர். ஆனால் பத்திரிகை படிப்பதற்கென இங்குவரும் சிலர் சத்தம் போட்டுக் கதைத்தும், பத்திரிகைகளை உரத்த குரலில் வாசித்தும் ஏனையவர்களுக்கு இடையூறு விளைவி[illegible] வருகின்றனர். இதனால் அமைதியாக இருந்து நூலகத்தை உபயோகிக்கும் ஏனையோருக்கு இவர்களின் இத்தகைய செயல்கள் பெரும் இடையூறாக அமைந்துள்ளது.

ஆகவே இடையூறு விளைவிப்பவர்கள் தாமாகவே முன்வந்து தமது செயற்பாட்டை நிறுத்த வேண்டுமெனப் பாதிக்கப்படுவோர் தெரிவிக்கின்றனர்.

(க-426)

# வாசிப்புப் பழக்க மேம்பாடே சமூக அபிவிருத்தியின் இலட்சணமாக உள்ளது

## கிளிநொச்சி பொது நூலகத்தின் நூலகர் கூறுகிறார்

கிளிநொச்சி, ஜூன் 8

வாசிப்புப் பழக்க மேம்பாடே சமூக அபிவிருத்தியின் அடிப்படை இலட்சணமாகும். இவ்வாறு தெரிவித்திருக்கிறார் கிளிநொச்சி பொது நூலகத்தின் நூலகர்.

கிளிநொச்சி பொது நூலக வாசகர் வட்டத்தின் கலந்துரையாடல் கடந்த வாரம் பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது. இதற்குத் தலைமை வகித்து உரையாற்றும்போதே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் கரைச்சிப் பிரதேசசபையின் செயலாளர் உட்பட பல வாசகர்கள் கலந்து கொண்டனர். இங்கு தொடர்ந்து உரையாற்றிய நூலகர் ஒரு சமூகத்தினுடைய வளர்ச்சியின் அடையாளமாக வாசிப்புப் பழக்கம் இருந்து வருகிறது. யுத்தத்துக்கு முன்பு 14 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நூல்களைக் கொண்ட நூல் நிலையமாக இது விளங்கியது. மருத்துவபீட மாணவர்கள் தேடல்களை மேற்கொள்ளக்கூடிய மருத்துவ அறிவியல் சார்ந்த நூல்களையும் நாம் கொண்டிருந்தோம். அந்த அரிய சொத்தை நாம் யுத்தத்தின் போது தொலைத்துவிட்டோம். அரிய நூல்களை இழந்த போதும் நாம் இழக்காது கொண்டு வந்திருக்கின்ற விடயம் அறிவைப் பெருக்க வேண்டும் என்ற ஆர்வம் ஒன்றே. அத்தகைய ஆர்வம் மிகுந்த வாசகர்கள் இருக்கின்ற போதும் நூல் வளங்களோ அன்றித் தேடல்களுக்கான வசதிகளோ, வாசிப்பதற்கான புறச் சூழலோ இல்லாத நிலையில் நூலகம் இன்று இயங்கி வருவது வேதனை தருகின்றது.

இன்று வரை இந்த நூலகத்துக்கென மலசலகூடங்கள் கூட அமைக்கப்படவில்லை. [illegible] இருக்கின்ற அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென அவர் அழைப்பு விடுத்தார்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற கலந்துரையாடலின் போது வாசகர்கள் பின்வரும் கருத்துக்களை முன்வைத்தனர். நூலக வளாகத்துள் அமைந்திருக்கும் இராணுவமுகாமை அகற்றுதல், நூலகத்துக்கெனத் தனியான பாதை ஒன்றை அமைத்தல், வட்டக்கச்சி, ஸ்கந்தபுரம், முரசுமோட்டை ஆகிய பிரதேச நூலகங்களின் பௌதிக ஆளணி வளங்களை மேம்படுத்தி நூலகங்களைச் சீராக இயங்கச் செய்தல், பாரதிபுரம் பிரதேசத்தை மையமாகக் கொண்டு நூலக சேவை ஒன்றை ஆரம்பித்தல் போன்றவையே அவையாகும். கலந்துரையாடலில் நிறைவாக உரையாற்றிய பிரதேச சபைச் செயலாளர் தவசோதி, விரைவில் மலசலகூடங்கள் அமைக்கப்படும் என்பதுடன் இராணுவத்துடன் கலந்துரையாடி நூலகத்துக்கான தனிப்பாதை திறக்கப்படும் என்றும் நிழற்பட இயந்திரம் ஒன்று விரைவில் நூலகத்துக்கு வழங்கப்படுமெனவும் வாசகர்கள் தமக்குத் தேவையான நூல்களின் பிரதிகளைப் பிரதி செய்யும் வச[illegible] வழங்கப்படும் என[illegible]த்தார். (க-301)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் திடீர் சுகவீனமாகி வைத்தியசாலையில்

## கொத்மலை மாவட்ட வைத்திய அதிகாரி

கொத்மலை, ஜூன் 8

கொத்மலை, நியன்கம்தொர பிரதேசத்தில் இயங்கிவரும் ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரியும் 150 ஊழியர்கள் கடந்த வாரம் திடீர் சுகவீனம் அடைந்து கொத்மலை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இவர்களுள் 130 பேர் சிகிச்சை முடிந்து வெளியேறியுள்ளனர் எனவும், 20 பேர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இவர்கள் திடீரென சுகவீனமுற்றதற்கான காரணம் இதுவரை தெரியவில்லை. அவர்களது உணவு அல்லது குடிதண்ணீரால் இது நிகழ்ந்திருக்கலாம் எனவும் பொதுசன சுகாதார வைத்தியப் பிரிவு தெரிவித்துள்ளது.

சுகவீனமுற்றவர்களில் சிலர் வைத்தியசாலைக்குச் செல்லாமலே வீடுகளுக்குச் சென்றுள்ளனர். இவர்களுடன் சேர்த்து மொத்தமாக சுமார் 200 பேர் பாதிக்கப்பட்டிருக்கலாம். சுகவீனமுற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்களுக்கு வாந்தி, தலைச்சுற்று, மயக்கம், தசைப்பிடிப்பு, நெஞ்சுவலி ஆகிய நோய்க்குறிகள் இருந்தன என கொத்மலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் இஷிணி முனீர் தெரிவித்தார்.

இந்தத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு இவ்வாறு அடிக்கடி சுகவீனம் ஏற்படுவதற்கான காரணத்தைக் கண்டறியப் பொதுசன சுகாதார வைத்தியர் அலுவலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. (ச)

# நீர் விநியோகத்திட்டப் பணிகள் 18 மாதங்களில் நிறைவடையும்

திருகோணமலை, ஜூன் 8

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட நீர்விநியோகத்திட்டப் பணிகளும், கந்தளாய் நீர் சுத்திகரிப்பு நிலைய நிர்மாணப் பணிகளும் இன்னும் பதினெட்டு மாதங்களில் பூர்த்தியடைந்துவிடும். அதற்குப் பின்னர் திருகோணமலை மாவட்ட சகல பிரதேசங்களுக்கும் 24 மணிநேரமும் குடிதண்ணீர் விநியோகம் இடம்பெறும் என்று தேசிய நீர்விநியோகம் மற்றும் வடிகால் சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த இரு திட்டங்களும் 4,587 மில்லியன் ரூபா செலவில் பிரான்ஸ் - இலங்கை அரசுகளால் கூட்டாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இந்தத் திட்டங்கள் நிறைவடைந்ததும் திருகோணமலை, குச்சவெளி, சாம்பல்தீவு, தம்பலகாமம், கிண்ணியா, கந்தளாய் ஆகிய பிரதேசங்களுக்கு 24 மணிநேரமும் குழாய்நீர் விநியோகம் இடம்பெறும் என்றும் சபையின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்போது திருகோணமலை நகருக்கு பன்னிரெண்டு மணிநேர நீர் விநியோகமே சுழற்சி முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கிண்ணியாவுக்கு ஆறு மணி நேரமும் தம்பலகாமத்துக்கு 3 மணிநேரமும் கந்தளாய்க் குளத்திலிருந்து நீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ரூபா ஒரு கோடி செலவில் பாடசாலைகளுக்கு இசைக் கருவி

மட்டக்களப்பு,ஜூன் 8

மட்டக்களப்பு மாவட்டத்தில் 40 பாடசாலைகளுக்கு சுமார் ஒரு கோடி ரூபா செலவில் மேலைத்தேய இசைக்கருவிகளை வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை, மட்டு.இந்துக் கல்லூரி ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

கல்வி அமைச்சின் அழகியற் பிரிவும் மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகமும் இணைந்து மட்டக்களப்பு அழகியற் கற்கை நிறுவனத்தினூடாக இந்த இசைக் கருவிகளை வழங்கின.

மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சா. பவளகாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மீள்குடியேற்ற அமைச்சின் இணைப்பாளர் திருமதி ருத்ரமலர் ஞானபாஸ்கர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். (ச-21)

# புலிகளின் ஆயுதக் களஞ்சியம் தொப்பிகலையில் கண்டுபிடிப்பு

தொப்பிகலையில் விடுதப் புலிகளின் களஞ்சியமொன்று விசேட விசாரணைப் பிரிவுப் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆயுதக் களஞ்சியம் நிலத்துக்கு அடியில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் காணப்பட்டது. அத்துடன், விசேட உளவாளி ஒருவரின் தகவலொன்றையடுத்தே இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். அங்கிருந்த ஆயுதங்களில் பிரதானமாக தோட்டாக்கள் 500க்கும் அதிகமாக இருந்தன. அத்துடன், டி-56 ரகத் துப்பாக்கிகளுக்கான பெருமளவான தோட்டாக்கள், மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் ஆகியனவும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

ஆயுதங்கள், மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் என்பன கறுப்பு பொலித்தீன் பையினால் சுற்றப்பட்டிருந்த நிலையிலேயே புதைக்கப்பட்டிருந்தன. கண்டெடுக்கப்பட்டபோது அவை நல்ல நிலையில் காணப்பட்டன எனவும் தெரியவந்துள்ளது.

ஆயுதக்களஞ்சியத்தின் அருகில் விடுதலைப் புலிகள் பயன்படுத்திய பங்கர் ஒன்று காணப்பட்டது என்றும் பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். (ச-21)

## அம்பாறை மாவட்ட அபிவிருத்தி

# பிள்ளையானும் பியசேனவும் இணைந்து செயற்பட இணக்கம்

அம்பாறை, ஜூன் 8

அம்பாறை மாவட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளில் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.எச்.பியசேனவும் ஒருமித்துச் செயற்படுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் பியசேனவுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமை முதலமைச்சரின் மட்டக்களப்பு இல்லத்தில் இடம்பெற்றது.

இந்தச்சந்திப்பின்போது, அம்பாறை மாவட்ட அபிவிருத்தி தொடர்பான பல்வேறு விடயங்கள் குறித்து முதலமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினரும் கலந்துரையாடினர். அத்துடன், கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றமானது அம்பாறை மாவட்டத்தில் ஏற்படுத்தவுள்ள சாதக - பாதகங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

தாண்டியடிப் பகுதியில் 15 வருடங்களுக்கும் மேலாகத் திறக்கப்படாமலுள்ள அஞ்சல் அலுவலகக் கட்டடத்தின் அவலநிலை குறித்து இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் பியசேன முதலமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். இதனையடுத்து இந்தக் கட்டடத்தை மிக விரைவில் திறப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதென முதலமைச்சர் சந்திரகாந்தன் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை, திராய்க்கேணி, அலிக்கம்பை கிராமம், திருக்கோவில், காரைதீவு ஆகிய பகுதிகளின் குறைபாடுகள் பற்றியும், மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்திகள் குறித்தும் முதலமைச்சரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

காரைதீவு, திருக்கோவில் வைத்தியசாலைகளின் குறைபாடுகளை முடிந்தளவு நிறைவேற்றித் தருவார் என நாடாளுமன்ற உறுப்பினர் பியசேனவிடம் முதலமைச்சர் சந்திரகாந்தன் உறுதியளித்துள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியுள்ள பியசேன பின்னர் அரசுப் பக்கம் மாறியமை குறிப்பிடத்தக்கது. (ச)

## இடையூறை அகற்று......




மட்டக்களப்பு மாநகரசபைப் பிரதேசத்தில் வீதியோரங்களில் நடைபெற்றுவரும் வியாபார நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துமாறு கோரி பொதுச்சந்தைக்கு முன்னால் பெருமளவான வர்த்தகர்கள் ஒன்றுதிரண்டு நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (21)

# போஞ்சி விதை நுவரெலியாவில் உற்பத்தி

நுவரெலியா, ஜூன் 8

மத்திய மாகாணத்துக்குத் தேவையான போஞ்சி விதைகளை நுவரெலியா மாவட்டத்தில் உற்பத்திசெய்ய மத்திய மாகாண விவசாயத் திணைக்களம் ஏற்பாடுசெய்துள்ளது. தேசிய மட்டத்தில் வருடாந்தம் 2 லட்சம் கிலோ போஞ்சிவிதை தேவை. தற்போது 18,000 கிலோ கையிருப்பில் உள்ளது என மத்திய மாகாண விவசாய அமைச்சர் நிமால் பியதிஸ்ஸ தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்தில் உகந்த கால நிலை உள்ளதால் விவசாயிகளிடமிருந்து தரமான போஞ்சி விதைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும். அதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களைவிட இந்த வருடம் மத்திய மாகாணத்தில் உள்ள விவசாயிகளிடமிருந்து தரமான போஞ்சி விதைகள் சந்தைப்படுத்தப்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# அரசு-மக்கள் உறவுப் பாலம் கிராம உத்தியோகத்தர்களே

வரக்காப்பொலை, ஜூன் 8

அரசின் கொள்கை, கோட்பாடுகள், தீர்மானங்கள், மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மக்கள் மத்தியில் எடுத்துச்செல்லும் உறவுப்பாலமாக கிராம உத்தியோகத்தர்களே திகழ்கின்றனர் என பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யூ.டி.ஜே. செனவிரட்ன தெரிவித்துள்ளார். கேகாலை மாவட்ட கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்காக கேகாலை நகர மண்டபத்தில் நடைபெற்ற பட்டறையில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் இவர் மேலும் தெரிவித்ததாவது, பல்வேறு அர்ப்பணிப் புகளுக்கு மத்தியில் கடமையாற்றிவரும் கிராம உத்தியோகத்தர்களின் சேவையைப் பாராட்டி அவர்களுக்கு அதி உயர்ந்த நிலை பெற்றுக்கொடுக்கப்படும். கிராம உத்தியோகத்தர்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தமது பணிகளை முன்னெடுக்கின்றனர். இதனால் அவர்கள் என்றும் பாராட்டப்பட வேண்டியவர்கள்- என்றார். (ச)

# பொலிஸ்குழு மீது தாக்குதல்


வெல்லவாய,ஜூன் 8

ரோந்துசென்ற பொலிஸார்மீது இனந்தெரியாதவர்கள் நடத்திய தாக்குதலில் காயமடைந்த கான்ஸ்டபிள் ஒருவர் வெல்லவாய மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக் கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

தாக்குதல் சம்பவத்தின் பின்னர் சந்தேக நபர்கள் தப்பியோடிவிட்டனர். தாக்குதலுக்கான காரணம் தெரியவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன அழுத்தத்தைப் போக்கும் மாதுளம் பழச்சாறு



அலுவலகத்தில் பணிகள் காரணமாக மன அழுத்தம் ஏற்படுகிறதா? சிவப்பு நிற முத்துக்கள் கொண்ட மாது ளம் பழச்சாறை அருந்தினால் மன அழுத்தம் குறைந்து விடும் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

பழச்சாறு குடிப்பதால் மன இறுக்கம் மறைந்து உற்சாகம் தொற்றிக் கொள்ளும். வேலைகளைத் தொடர்ந்து உற்சாகமாக செய்யலாம்.

மாதுளம் பழச்சாறு குடிப்பதால், தீவிரமாகத் துடிக்கும் இதயத்துடிப்பைச் சரிசெய்து இயல்பு நிலைக்குப் கொண்டு வருகிறது என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

பழச்சாற்றைக் குடிப்பதற்கு முன்னரும், குடித்த பின்னரும் நாடித்துடிப்பு கணக்கிடப்பட்டது. மாதுளம் பழச்சாறு குடித்த நபர்கள் உற்சாகத்துடன் ஆர்வமாக பணியாற்றியதை கண்டறிய முடிந்தது.

பல மணிநேரம் தொடர்ந்து வேலை செய்தபோதும் மன அழுத்த உணர்வுகள் அவர்களுக்கு இல்லை.

## விநோத பறவை



பார்ப்பதற்கு அழகாகவும் பல விதமான ஒலி எழுப்பும் இந்த பறவையின் பெயர் லோ. இந்த லோ பறவைகள் ஆஸ்திரேலியா காட்டு பகுதியில் பெருமளவில் காணப்படுகிறது.

## அழிவின் விளிம்பில் நைட்டிங்கேல் பறவையினம்




பறவைகளில் மிகவும் அரிதானது நைட்டிங்கேல். வசீகர குரல் கொண்டது. இதன் அழகையும் குரலையும் வர்ணித்து இங்கிலாந்து கவிஞர் ஜான் கீட்ஸ் எழுதிய கவிதை உலகப் புகழ்பெற்றது.

இந்த அரிய பறவையினம் அழியும் தருவாயில் உள்ளதாகவும் இன்னும் 30 ஆண் டுகளில் இது இருந்ததற்கான சுவடே இல்லாமல் போய்விடும் அபாயம் உள்ளதாகவும் பறவையின ஆராய்ச் சியாளர்கள் தெரிவித்துள்ளனர். அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்தத் தகவல் உறுதியாகி உள்ளது. இதுகுறித்து ஆராய்ச்சியாளர்கள் மேலும் கூறியதாவது:

கடந்த 40 ஆண்டுகளில் நைட்டிங்கேல் பறவை இனம் 90 வீதம் அழிந்துவிட்டது. காடுகள் அழிக்கப்படுவதும் அதன் விளைவாகச் சுற்றுச்சூழல் மாசுபடுவதும் இதற்கு முக்கிய காரணம். இதுதவிர மன்ட்ஜாக் எனப்படும் காட்டு மான் வகைகளாலும் நைட்டிங்கேல் பறவைகள் பாதிக்கப்படுகின்றன. இவை இலங்கை, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளில் இருந்து இங்கிலாந்துக்கு 1925 ஆம் ஆண்டுகளில் இடம் பெயர்ந்தவை.

நைட்டிங்கேலின் கூடுகளை இவை அழித்து விடுகின்றன. இதன் காரணமாக நைட்டிங்கேல் பறவையினம் மெல்ல அழிந்து வருகிறது என ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். நைட்டிங்கேல் பறவைகளைப் பாதுகாக்கும் நோக்கில் அமைப்பு ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

## சாதனைகளைப் பகிர்ந்து கொள்ள ஓர் இணையம்



சாதனைகளைப் பகிர்ந்துகொள்ள நாம் சச்சின் டெண்டுல்கராக இருக்க வேண்டும் என்றில்லை. நாம் செய்து முடித்த சின்ன சின்ன செயல்களைக் கூட நண்பர்களோடு பகிர்ந்து கொள்ளலாம்.மனதிற்கு இனிய பயணம் மேற்கொண்டிருந்தாலோ, புதிய ஊருக்கு சென்று வந்திருந்தாலோ உடனே அவை பற்றிய அனுபவத்தை நண்பர்களோடு பகிர்ந்து கொள்ளத் துடிப்போம் அல்லவா.

பேஸ்புக்கில் இதைத் தானே செய்து கொண்டிருக்கிறோம் என்கிறீர்களா? இப்போது இந்தப் பகிர்வை இன்னும் கூட அழகாக இன்னும் சுவையாகச் செய்யலாம்.


அதாவது நமது சாதனைகளை, நாம் செய்து முடித்தவற்றை அட்டகாசமான முறையில் பேஸ்புக் நண்பர்களோடு பகிர்ந்து கொள்ளலாம். இந்த செயல்கள் வழக்கமான பேஸ்புக் சுவர் செய்தியாக தோன்றாமல் உலக வரைபடத்தின் மீதேறி நாம் தகவல் தெரிவிப்பது போல கண்ணை கவரும் வகையில் தோன்றும்.

நாம் எந்த இடத்திலிருந்து செயல்பட்டோமோ அந்த இடத்தில் இருந்து தகவல் தெரிவிப்பது போல இந்தப் பகிர்வு அமைந்திருக்கும். வரைபடத்தில் அந்தக் குறிப்பிட்ட இடத்தில் பலூன் போன்ற ஒரு குறி தோன்றும். அதில் கிளிக் செய்தால் உங்கள் செயல்களைத் தெரிந்து கொள்ள முடியும்.

இப்படி தனியாகவும் நமது செயல்களைப் பகிர்ந்து கொள்ளலாம் அல்லது குறிப்பிட்ட அந்த நேரத்தில் யாரெல்லாம் உடனிருந்தனரோ அவர்கள் பெயர்களையும் சேர்த்துப் பகிர்ந்து கொள்ளலாம்.

கூகுள் வரைபட சேவை உதவியோடு இந்தச் சாதனை அறிவிப்புச் சேவையை www.ddiddit.com இணையதளம் வழங்குகிறது. பேஸ்புக் கணக்கு மூலமே இந்தச் சேவையைப் பயன்படுத்தலாம். பேஸ்புக் சார்ந்த எத்தனையோ பயனுள்ள சேவைகளில் இதுவுமொன்றாகும்.

## மாமூத் யானையின் எலும்பிலிருந்து புரதம் கண்டுபிடிப்பு



6 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த யானையின் எலும்பில் இருந்து விஞ்ஞானிகள் புரதத்தை எடுத்து சாதனை படைத்து உள்ளனர்.

இந்தப் புதிய சோதனை முன்னைய காலப் படிவங்களை அடையாளப்படுத்தி வகைப்படுத்த உதவும்.

பல லட்சம் ஆண்டுக்கு முந்தய மாமூத் யானை அதிக முடிகளுடன் நீண்ட தந்தங்களைக் கொண்டிருந்துள்ளன. 1990ஆம் ஆண்டில் நோர்போக் முகடுகளில் மாமூத் எலும்புக்கூட்டை ஆய்வாளர்கள் கண்டுபிடித்தனர்.

உயிரி தொல்லியல் ஆய்வாளர்கள் அதிக சக்தி வாய்ந்த ஸ்பெக்ட்ரோ மீற்றரைப் பயன்படுத்தி சோதனை செய்தபோது அந்தப் படிவத்தில் இருந்து புரதத்தினை எடுக்க முடிந்தது.

உலகில் யானை இனம் தோன்றியதற்கு முழு உதாரணமாகத் திகழும் மாமூத் யானை எலும்புக்கூடு நார்விக்கின் நோர்போக் அருங்காட்சியகம் மற்றும் தொல்லியல் சேவைப்பகுதியில் பாதுகாக்கப்படுகிறது.

யார்க் பல்கலைகழகத்தின் தொல்லியல் துறை போராசிரியர் மாத்யூஸ் காலின்ஸ் கூறுகையில்,6 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னைய யானையின் புரத ஆய்வு மகத்தானது. பல ஆண்டுகளுக்கு முன்னர் பழமைவாய்ந்த மாமூத்தின் எலும்பில் இருந்து புரதம் எடுக்க முடியும் என்பதை நம்பவில்லை. தற்போதைய ஆய்வு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது - என்றார்.

## செயற்கைக் கடற்கரை



ஜப்பானில் உருவாக்கப்பட்டுள்ள இந்த செயற்கைக் கடற்கரை மிகவும் அழகாக உள்ளது. பார்ப்பதற்கு இயற்கையான கடற்கரை போலவே காட்சியளிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
முன்யோசனையுடன் செயற்படாததால், சில விடயங்களில் பிரச்சினையைச் சந்திக்கலாம். உங்களுடன் தொலைபேசியில் பேச விரும்பும் ஒருவரிடம் நீங்கள் பேச விரும்பாமல் தவிர்க்கலாம். உறவினர்கள் திடீர் வருகையால் உங்களின் வேலைகளில் மாற்றம் செய்யலாம். குறுகிய தூரப் பயணம் செல்லலாம்.

**இடபம்:**
சிறிதும் பயனில்லாத விடயங்களில் தலையிட்டு, மன உளைச்சல்களுக்கு ஆள்படலாம். நீங்கள் செல்லும் இடத்தில் விரும்பாத ஒருவரைச் சந்திக்கலாம். உறவினர்கள் அல்லது சக ஊழியர்களுக்காக உங்களின் கைப்பணத்தைச் செலவிடலாம். வேலை நெருக்கடிகளால் வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும். மறைமுகமான போட்டிகளைச் சந்திக்கலாம்.

**மிதுனம்:**
எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறும் நாள். நீண்ட நாளைய பிரச்சினை ஒன்றுக்கு தீர்வு காண்பீர்கள். மாமன், மைத்துனர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரலாம். குறைந்த ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த காரியம் ஒன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம். பிள்ளைகளால் மகிழ்ச்சி, சந்தோஷம் உண்டு.

**கடகம்:**
குடும்பப் பெரியவர்களிடம் கலந்து ஆலோசித்து சில காரியங்களைச் செய்வீர்கள். சில வேலைகளில் ஆரம்பத்தில் தடை ஏற்பட்டாலும், பின் விறுவிறுப்பாக முடிவுக்கு வரும். உல்லாசமாக பொழுதுபோக்குவதில், விரும்பிய உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். ஒரு செலவை நினைத்து கவலைப்படும் நேரத்தில் மற்றொரு செலவு உண்டாகும்.

**சிங்கம்:**
தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். உறவினர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் நல்ல விதமாக முடிவுக்கு வரலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தேடி வரலாம். மற்றவர்கள் கடினமாக நினைக்கும் வேலை ஒன்றை நீங்கள் எளிதாகச் செய்வீர்கள். அரசியல்வாதிகள் பரபரப்பாகச் செயற்படலாம். புதிய அனுபவம் ஒன்றைப் பெறுவீர்கள்.

**கன்னி:**
மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்பதைப் பற்றி கவலைப்படாமல், நீங்கள் நினைத்ததைச் செய்ய முற்படுவீர்கள். தொழில் ரீதியாக சிலர் உங்களை விமர்சிக்கலாம் அல்லது பாராட்டலாம். முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். நண்பர்களுடன் ஒரு விடயத்திற்காக வாக்குவாதம் செய்யலாம். வீட்டுச் செலவுகள் அதிகரிக்கும்.

**துலாம்:**
மனதில் நல்ல சிந்தனைகள் குடிகொள்ளும் நாள். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வரலாம். உறவினர் ஒருவருடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீரும். பிரியமானவர்கள் கேட்ட பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். பணிபுரிவோர் மேலதிகாரிகளிடம் வாக்குவாதம் செய்யவேண்டாம். பணவரவுகளைப் பெறலாம்.

**விருச்சிகம்:**
பெண்கள் வழியில் உதவிகள் கிடைத்து பெருமைப்படுவீர்கள். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். நண்பர் ஒருவர் கேட்ட உதவியை மறுக்காமல் செய்வீர்கள். நினைத்தது நடக்க வேண்டும் என பிரார்த்தனை மேற்கொள்வீர்கள். கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரும். தம்பதியரிடையே பாசம் அதிகரிக்கும்.

**தனுசு:**
எதேச்சையாகச் செய்த சில காரியங்கள் நல்ல விதமாக முடியலாம். நண்பர்கள் அல்லது முன்பின் பார்த்திராத ஒருவருக்காக வெளியிடங்களில் காத்திருக்கலாம். மருத்துவச் செலவுகளைச் சந்திக்கலாம். குறைந்த செலவில் முடியும் என நினைத்த வேலை ஒன்றுக்கு அதிகமாகச் செலவாகி விடலாம். கேளிக்கை, கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும்.

**மகரம்:**
சிலர் உங்களை விமர்சிக்கலாம். உங்களுக்கு வேண் டிய ஒருவர் மீதுள்ள கோபத்தை சிலர் உங்களின் மீது காட்டலாம். பஸ் பயணங்களுக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம். நண்பர்களுடன் மனக்கசப்பு ஏற்படலாம். விளையாட்டாகச் செய்த காரியம் ஒன்று விபரீதமாக முடியலாம். நீங்கள் செய்த வேலை ஒன்றை மற்றொருவர் தான் செய்ததாகக் காட்டிக் கொள்ளலாம்.

**கும்பம்:**
நண்பர்கள் சிலர் உங்களை பாராட்டிப் பேசி காரியம் சாதிக்கலாம். கடந்த காலத்தில் உங்களை கண்டு கொள்ளாமல் இருந்த ஒருவர், இப்போது உதவி நாடி வரலாம். மனைவி வழியில் பெருமைப்படும் வகையிலான உதவிகள் கிடைக்கும். அரசியல்வாதிகள் வெளியூர் பயணங்கள் செல்லலாம். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவீர்கள்.

**மீனம்:**
மற்றவர்களின் விமர்சனங்களையும் அறிவுரையாக ஏற்றுக் கொள்வீர்கள். சோர்வு, சோம்பல் இல்லாமல் எந்த வேலையையும் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். தொழில் கூட்டாளிகளை அனுசரித்துச் செல்ல வேண்டும். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் கலந்து கொள்ளலாம். பிள்ளைகள் விடயத்தில் அதிக பாசமாக நடந்து கொள்வீர்கள்.

# யாழ். நகரை அச்சுறுத்தும் கழிவகற்றல்

ஒரு பிரதேசத்தின் முன்னேற்றம், அதன் சுகாதாரம் மற்றும் கல்வியிலேயே முக்கியமாகத் தங்கி உள்ளது. யாழ். மாநகரத்தைச் 'சிங்கப்பூர்' ஆக்குவதாகக் கூறி அரியணை ஏறியவர்களுக்கு இது புரியவில்லை. ஏனெனில், யாழ். மாநகரத்துக்குள் 'கழிவகற்றல்' என்பது மிக மோசமான நிலையிலேயே உள்ளது.

யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட பகுதி நிர்வாக ரீதியாக 23 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சுத்திகரிப்புப் பகுதி இவற்றைத் தமது தொழிற்பாட்டுக்காக 7 வலயங்களாகப் பிரித்துள்ளது. நல்லூர், அரியாலை, பாசையூர், குருநகர், யாழ்.பஸார், வண்ணார்பண்ணை, நாவாந்துறை ஆகிய இந்த வலயங்களில் பஸார் மற்றும் குருநகர் வலயங்களில் இருந்தே அதிகளவான கழிவுகள் தினந்தோறும் சேருகின்றன.

இந்த 7 வலயங்களில் 18,380 வீடுகளில் 82,009 மக்கள் வசிக்கின்றனர். இந்த வலயங்களில் இருந்து தினந்தோறும் சராசரியாக 60 டிரக்டர் லோட்டுக்குக் குறையாத அளவுக் குப்பைகள் அகற்றப்படுகின்றன. ஆனாலும், முழுமையான கழிவகற்றல் நடைபெறுவதாகத் தெரியவில்லை. வாகன வசதியின்மை என்பதே சபை இதற்குக் கூறும் முக்கிய பதிலாக இருக்கின்றது.

### கழிவகற்றப்படும் ஒழுங்கு

இந்தப் பிரதேசங்களில் வீதிகள் கூட்டித் துப்புரவு செய்யப்படும் குப்பைகள் தற்காலிக சேகரிப்புப் பகுதியில் சேகரிக்கப்பட்டு டிரக்டரில் ஏற்றி அகற்றப்படுகின்றன. வீட்டுக் கழிவுகள் வாரம் இரண்டு தடவை அகற்றப்படுகின்றன. இந்த ஒழுங்குமுறை உத்தரவு களில் இருக்கும் போதும் அது ஒழுங்காக நடை பெறுவதில்லை என்று மக்கள் குறைப்படுகின்ற னர்.

சபையால் தெருக்கள், வீடுகள், சந்தை, வைத்திய சாலை, ஹோட்டல், பூங்கா தொழிற்சாலைகள் போன்றவற்றில் இருந்து சேகரிக்கப்படும் கழிவுகள் அகற்றப்படும் முறையிலும் பெரும் குறைபாடு காணப்படுகிறது. குப்பைகளையும் கழிவுகளையும் ஏற்றிச் செல்லும் டிரக்டர்கள் மூடிய பெட்டிகளைக் கொண்டிருப்பதில்லை. இதனால் வீதியால் செல்வோருக்கும் பெரும் இடையூறு காணப்படுகிறது. தற்போது காற்றுக்காலம் என்பதால் குப்பையின் துகள்கள் வீதியால் செல்வோரைத் தாராளமாக மூக்கைச் சுழிக்க வைக்கின்றன. இதுவே வைத்திய சாலைக் கழிவாக இருந்தால் மக்களுக்கு நோய்த்தாக்கம் ஏற்படக் கூடிய வாய்ப்புகளும் அதிகம் இருக்கிறது. இந்த நிலைமையில் யாழ்ப்பாணம் சிங்கப்பூர் ஆகுமாம் என்பது வேடிக்கைக்குரியதே!

### கழிவு அழிப்பு

சேகரிக்கப்பட்ட கழிவுகளை எரியூட்டி அழிக்கும் நடைமுறையே மாநகர சபையால் இப்போது நடைமுறைப்படுத்தப்படுகிறது. இது பொருத்தமற்றது. ஏனெனில் பிளாஸ்ரிக், பொலித்தீன் போன்றவற்றை எரிக்கும் போது CO, $SO_2$ போன்ற வாயுக்கள் வெளியேறி சூழலை மாசுபடுத்தும். எனவே, கழிவுகளைச் சுகாதார முறைப்படி பள்ளங்களை நிரப்புதலுக்கும் பசளை தயாரிப்புக்கும் உட்படுத்துவதே சிறந்த வழிகள். இங்கும் இவை நடைமுறையில் இருந்தாலும் அவை திருப்திகரமான முறையில் நிறைவேற்றப்படுவதாகத் தெரியவில்லை.

குப்பைகள் வாகனங்களில் ஏற்றப்படும்போது உக்காத பொருள்களும், சேதனப் பசளை ஆக்கப்படக் கூடிய கழிவுகளும் வேறுபடுத்தி ஏற்றப்படல் முறைப்படி வேறுபடுத்தலுக்கு உட்படுத்தப்படாமல் பெரும்பாலும் கழிவுகள் ஒன்றாகக் கொட்டி ஏற்றப்படுகின்றன.

### நிலம் நிரப்பல்

பள்ளமான காணிப்பரப்புக்ளைத் தெரிவுசெய்து அங்கு குப்பைகளைக் கொட்டி அதன்மேல் உடனடியாக 9 அங்குல உயரத்துக்குக் குறையாத அளவு மண் போட்டுப் படையாக மூடும் முறை ஒன்று உள்ளது. ([illegible]வ்வாறு மூடாவிட்டால் இலையான் குடம்பி வெளியேறும்). பின்னர் மறுமுறை குப்பை கொட்டப்படும். மீண்டும் 9 அங்குலம் மண்படை பரவப்படும். இப்படியாக ஏற்ற அளவு மாறி மாறிப் போடப்பட்டு நிரவும் முறையே சுகாதார முறையிலான நிலம் நிரப்பல். இவ்வாறு நிரப்பப்படும் காணிப் பகுதிகளில் காலப் போக்கில் கட்டட நிர்மாணிப்பணிகளைக்கூட மேற்கொள்ள முடியும். கொழும்புப் புறநகர்ப்பகுதியில் இப்படியான நிலங்களிலேயே பெருமளவு கட்டடங்கள் தற்போது கட்டி எழுப்பப்பட்டுள்ளன.


இந்த முறையிலான கழிவகற்றல் இங்கும் மேற்கொள்ளப்படுகிறது. ஆனால், உரியமுறைப்படி மண்போட்டு நிரவுதல் நடைபெறுவதில்லை. காக்கை தீவுப்பகுதியில் கொட்டிப் பரவப்பட்ட கழிவுகளால் அந்தப்பகுதி மிகவும் சுகாதாரச் சீர்கேட்டுடன் திகழ்வதை யாவரும் அவதானிக்க முடியும். அதன் அண்மையில் மக்கள் குடியமர்ந்ததால் இப்போது அங்கு குப்பை கொட்டுவதை நிறுத்திவிட்டார்கள். தற்போது சண்டிலிப்பாய் பிரதேச சபைக்குச் சொந்தமான கல்லூ[illegible]டாய்ப் பகுதியில் கழிவுகள் கொட்டப்படுகின்றன. அங்கும் பாதுகாப்பான முறைகள் எவையும் பின்பற்றப்படாமலேயே குப்பை கொட்டப்படுகின்றது.

### தவறுகள்

1) தெருக்களில் " கழிவுகள் சேகரிக்கும்" பகுதியோ/ தொட்டியோ இல்லை. எனவே மூலை மூடுக்குகளிலும், வீடுகளின் மதிலோரங்களிலும் குப்பைகளைக் குவிப்பதால் அயலவர்களுக்கிடையே சண்டைகள் ஏற்படுகின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றன.

2) வாரத்தில் இரு தடவை வீட்டுக்கழிவுகள் எடுக்கும் ஒழுங்குகள் இருந்தபோதும் இது பல இடங்களில் ஒழுங்காக நடப்பதில்லை. குப்பை அள்ளுபவர்கள் வீட்டு உரிமையாளர்களிடம் பணத்தை எதிர்பார்ப்பதுடன், சில சந்தர்ப்பங்களில் கிடைக்கும் பணத்தின் பெறுமதிக்கு ஏற்பவே தெ[illegible]களில் குப்பை அகற்றலை மேற்கொள்கிறார்கள். இதற்குரிய மேற்பார்வையாளர்க்ள் என்ன செய்கிறார்களோ தெரியாது.

3) குப்பைகள் உக்கக்கூடியவை/ உக்கமுடியாதவை என (தாவரக்கழிவு/ சமையல் கழிவு, கண்ணாடி, உலோகம், பொலித்தின்/ பிளாஸ்ரிக்) தரம் பிரிக்கப்படாமல் ஒன்றாகவே ஏற்றப்படுகின்றன.

4) குப்பை சேகரிக்கும் வாகனம் மூடிய வாகனமாகக் காணப்படாமையால் தெருவில் செல்பவர்கள் மிகப்பெரிய அசௌகரியத்துக்கு உள்ளாகிறார்கள்.

5) குப்பை சேகரிக்கும் வாகனப் பராமரிப்பும் திருப்திகரமாக இல்லை. அத்துடன், வாகனங்களுக்குத் தட்டுப்பாடும் காணப்படுவதால் சில நேரங்களில் தெருக்களில் குப்பைகள் நீண்ட நாள்களுக்கும் துர்நாற்றத்துடன் சேர்ந்து கிடக்கின்றன. மழைக் காலங்களில் இது பெரும் சீரழிவாகக் காணப்படுகின்றது.

6) கல்லுண்டாய்ப் பகுதியில் கொட்டப்படும் குப்[illegible]பகள் ஒழுங்கான முறையில் மண்ணால் மூடப்படாமையால் அந்தப் பிரசேதம் முழுவதும் மாசுபட்டுக் காணப்படுகிறது. பொலித்தீன் பைகளும், குப்பைகளும் அங்குமிங்கும் பறந்து திரிவதால், அத்தெரு ஓரம் முழுவதும் இரு மருங்கிலும் பொலித்தீன் பைகளை யும் கழிவுகளையும் காணக்கூடியதாக உள்ளது. இதனால் ஈயும் காகமும் தாராளமாகப் பறந்து திரிகின்றன.

நாய்களும் குப்பையைக் கிளறி வீதிக்குத் தள்ளுகின்றன. அந்தப் பகுதியால் செல்லும் அனைவரும் மூக்கைச் சுழித்தவாறும் அருவருத்தவாறுமே செல்கின்றனர். கடல் பிரதேசமாகக் காணப்படுவதால் நிலப்பரப்பு மட்டுமன்றி நீர்ப்பரப்பும் மிகப்பெரிய மாசுக்கு உட்படுகின் றது. மழைக்காலங்களில் அந்தப் பிரதேசத்தில் நீர் சேரும்போது நிலைமை மேலும் மோசமாகின்றது.

7) கழிவுகளைப் பசளையாக்கும் முயற்சியைத் தற்போது காக்கைதீவில் ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனாலும் அது போதிய வசதிகளுடன் திருப்திகரமாக இல்லை என்பதும் குறைபாடாகக் காணப்படுகிறது. மக்கள் இயற்கைப் பசளையைத் தயாரிப்பதற்கான ஊக்குவிப்பை மேற்கொள்ள வேண்டும். (வெலிகம பிரதேசத்தில் பசளை தயாரிப்பிற்கான ஊக்குவிப்புகள் நடைபெறுகின்றன. அரச சார்பற்ற நிறுவனங்களும் பங்காற்றுகின்றன. பாடசாலைகளுக்கு இடையே கூடப் போட்டிகள் நடத்தியும் பசளை தயாரிப்பை ஊக்குவிக்கின்றார்கள். அங்கு மக்கள் குப்பையைத் தேடித் திரிவதைக் காணக்கூடியதாக உள்ளது.)

**வைத்தியசாலைக் கழிவுகள்**

கழிவகற்றலில் வைத்தியசாலைக் கழிவுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. அதிலும் யாழ். போதனா வைத்தியசாலைக் கழிவுகள் அகற்றப்படுதலில் பெரும் குறைபாடுகள் காணப்படுகின்றன. தொற்றுக்குள்ளான சுகாதாரக் கழிவுகள் ஆபத்தானவை. அவை அவற்றுக்கான குறியீட்டுக்குரிய பைகளில் இடப்பட்டு உரிய முறையில் அகற்றப்பட வேண்டும். ஊசிகள், நோயாளரது இரத்தம், சலம், சளி, மலம் போன்ற கழிவுகள் உடற்பாகங்கள் , காயங்களின் சுத்திகரிப்புப் பொருள்கள், இரசாயனப் பொருள்கள், இழைய நஞ்சுக் கழிவுகள் போன்றன மிகவும் ஆபத்தானவை. இவை மிகவும் கவனமாக அகற்றப்படல் வேண்டும். இவையும் குப்பையோடு குப்பையாகக் கல்லுண்டாயில் கொட்டப்படுமானால் யாழ். மக்களுக்கு இதைவிடப் பெரிய ஆபத்து ஒன்றுமில்லை. இவற்றில் சில கழிவுகள் வைத்தியசாலையில் எரியூட்டிப் பின்னர் அகற்றப்பட்டாலும் உரிய முறையில் எரியூட்டப்படுவதில்லை என்ற குறைபாட்டைத் தவிர்க்க முடியாது.

வைத்தியசாலைக்கு எரிகூடம் அவசியம். ஆனால் உரிய எரிகூடம் இல்லாதது பெரும் குறையே. ஏனெனில் இந்தக் கழிவுகள் ஆயிரத்துக்கு மேற்பட்ட பாகை வெப்பநிலையில் எரியூட்டப்படும் பொழுதே முழுமையான அழிவுக்குள்ளாகும். இங்கோ அப்படி எதுவும் நடப்பதில்லை.

எனவே, கழிவகற்றலில் இப்படியான குறைபாடுகள் காணப்படுமானால், யாழ் மக்களின் வாழ்க்கை கேள்விக்குறி ஆகும் என்பதில் ஐயமில்லை. யாழ். மாநகர சபை, சுகாதாரத்துறை, கல்வித்துறை, மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பது அவசியமாகிறது.

**பஞ்சவர்ணன்**



# சித்தர்களின் சிந்தனை



"அங்கே என்ன ஒரே கூட்டம் "என்று ஒருத்தர் கேட் டார்.

"அதுவா? அந்த வீட்டில் ஒரு வயசானவர் இருந்தாரல்லவா; அவர் மூச்சுவிட மறந்துவிட்டாராம்'' இது இன்னொருத்தருடைய வேடிக்கையான பதில்.

இவரும் ஒருநாள் அப்படி மறந்து விடப்போகிறவர் தான். இருந்தாலும் இப்போது அதை நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருக்க இவர் தயாராக இல்லை.

மூச்சு என்றால் என்ன? அது ஒரு சாதாரண விஷயமா?அது போய்விட்டதென்றால் இந்த உலகத்திலே இனிமேல் அவருக்கு வேலை இல்லை என்று தானே அர்த்தம்.

மனித உடம்பிலே மூச்சு எப்படி இயங்குவது? உள்ளே போய் வரும். ஒரு கட்டத்திலே உயிர் உடம்பை விட்டுப் பிரிந்து விடுகிறது. அப்படி என்றால் உயிரையும் உடம்பையும் அதுவரைக்கும் ஏதோ ஒன்று இணைத்து வைத்திருக்கிறது. அது என்னவாக இருக்கும்?இது சம்மந்தமான ஆராய்ச்சி நிபுணர்கள் யார் தெரியுமா? அவர்கள் தான் சித்தர்கள்

உடம்புக்குள்ளே இருக்கிற இரகசியங்களை அவர்களைவிடப் பெரிதாக வேறு யாரும் சொல்லமாட் டார்கள்.

மனித உடம்புக்குள்ளே 72000 நாடி நரம்புகள் இருக்கின்றன என சித்தர்கள் கணக்குச் சொல்கிறார்கள். இதில் முக்கியமானது எத்தனை என்று கேட்டால் இருபத்தினான்காம்.

இந்த இருபத்தினான்கில் அப்படி என்ன விசேஷம்? இந்த இருபத்து நான்கு நாடி நரம்புகளும் மற்ற நரம்புகள் மாதிரி இல்லாமல் எப்போதும் தூக்கத்திலேயே அதாவது உறக்கத்திலேயே இருக்கின்றனவாம்.

இந்த இருபத்தினான்கு நாடி நரம்புகளிலே 10 நாடிகள் மேல் நோக்கி இருக்கும். மீதி நான்கும் நான்கு பக்கத்துக்கு இரண்டு இரண்டாகப் பிரிந்து பாம்பு போன்று சுற்றி வளைத்து இருக்கும்.

இப்படி இருக்கின்ற இதில்தான் உயிரினுடைய ஜீவ ஆற்றல் அறிதுயில் செய்கின்றது. இந்த இருபத்தினான்கு நாடிகளிலும் 10 மிகவும் முக்கியம். அந்தப் பத்தில் மூன்று மிக முக்கியம். இந்த மூன்றுக்குள்ளேதான் இந்த இரகசியமான உறக்கம் மறைந்து இருக்கிறது.

இந்த மூன்றும் நம் உயிரை உடம்போடு இணைத்து இயங்கவைக்கின்றன. இந்த நாடிகளுடைய மூன்று வாயுக்களுக்கும் மூன்று பெயர்கள் உண்டு.

இடது நாசியில் இழைகிற மூச்சு இடகலை, வலது நாசியிலேயே இயங்கிற மூச்சு பின்கலை, சுழுமனை என்பது இரண்டு நாசியிலேயேயும் வந்து போய் இயங்கு கின்ற சுவாசம்.

இந்த மூன்று மூச்சுக்களின் இயக்கத்தைப் பற்றி நம் சித்தர்கள் சொல்லியிருக்கின்ற இரகசியத்தை எல்லாம் வெளிநாட்டுக்காரர்கள் ஆராய்ச்சி செய்துள்ளார்கள்.

இரண்டு கண்களையும் அமுக்கினால் கண்ணீர் வர வேண்டும். அவ்வாறு வரவில்லை என்றால் அந்த உடம்புக்கு பத்து நாளில் முடிவு வந்துவிடும், ஆகாயத்திலே இருக்கும் நட்சத்திரம் பார்வைக்குத் தெரியவில்லை என்றால் 5 நாளிலே மரணம், மூக்கு நுனி தெரியவில்லை என்றால் மூன்று நாளிலே முடிவு, இப்படியெல்லாம் சொல்கிறது சித்தர் இலக்கியம்.

இதுமாதிரி அறிவுரை ஏதாவது தெரிந்தால் உடனே சித்தர்கள், மூச்சு இயக்கத்தைச் சரிசெய்து கொள்வார்களாம். நாமெல்லாம் இதை முடிந்த அளவுக்குப் புரிந்து கொண்டால் நீண்டநாள் ஆரோக்கியமாகவும் சௌக்கியமாகவும் இருக்கமுடியும்.

இந்தத் தகவலைக் கேட்டுவிட்டு உடனே உங்கள் மூச்சு எப்படி ஓடிக் கொண்டிருக்கிறது என்று பார்த்துவிட்டு தப்பாக ஏதாவது புரிந்து கொண்டு பயப்படாதீர்கள்.

ஒருத்தர் அப்படித்தான் ஓடிவந்து "ஐயா! எனக்கு மூச்சு வித்தியாசமாக ஓடுகிறது. அதனால் பயமாக இருக்கிறது'' என்றார். "எப்படி ஓடுகிறது'' என்று கேட்டதற்கு, "வாய் வழியாக மூச்சு ஓடிக்கொண்டிருக்கிறது'' என்றார். அவருடன் கொஞ்ச நேரம் கதைத்துப் பார்த்ததற்குப் பிறகுதான் அவருக்கு கடுமையான ஜலதோசம். அதுதான் மூச்சு அடைபட்டுப் போய் வாய் வழியாக சுவாசித்துக் கொண்டிருக்கிறார் என்ற விஷயம் புரிந்தது.

**கோ. சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



உதயன் வெளியீடான
**கல்விச்சுடர்**
தரம் 05 மாணவர்களை இறுதிப்பரீட்சைக்கு
தயார்படுத்துவதற்கான விசேட தொடர் வெளியீடு

ஆசிரியர்
கே. சுதர்சன்



பரீட்சை இலக்கம்: 4


## தரம் 05 புலமைப் பரிசில் படிமுறைப் பரீட்சை - 2011

பெயர்/சுட்டெண்:........................ **வினாத்தாள்-1** நேரம்: 45 நிமிடங்கள்

எல்லா வினாக்களுக்கும் விடைதருக.

✱ 1-33 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றினுள் சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க்கீறிடுக.


01. இதிலுள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை இரண்டு கூட்டங்களாகப் பிரிக்கலாம்.




இக் கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

1) A, C / B, D  2) A, B / C, D  3) A, D / B, C

02. இக்கட்டங்களினுள் காட்டப்பட்டுள்ள கருவிகளை இரண்டு கூட்டங்களாகப் பிரிக்கலாம்.




இக்கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.


1) P, S / Q, R  2) P, R / Q, S  3) R, P / S, Q

✱ 3 ஆம், 4 ஆம் வினாக்களில் பொருத்தமற்ற உருவைத் தெரிவுசெய்க.

03. 1) 2) 3)



04. 1) 2) 3)



05. இப்பாடலில் விவரிக்கப்பட்டுள்ள விலங்கு எது? பொருத்தமான உருவின் கீழ்க்கீறிடுக.


காட்டில் இராசாவாம்
கர்ச்சிக்கும் குணமுடையதாம்
கொடிய ஊனுண்ணியாம்.



1) 2) 3)

06. இப்பாடலில் விவரிக்கப்பட்டுள்ள பழம் எது?

ஏழைகளின் அப்பிளாம்
இதரை, மொந்தன் எனப் பலவகையாம்
உணவின் பின் உண்ணச் சிறந்ததாம்.



1) 2) 3)

✱ விமலா, கமலா, லீலா ஆகியோர் நாணயங்கள் சேகரிப்பவர்கள்.
- மூவரிடமும் தற்போது 85 நாணயங்கள் உள்ளன.
- ஒவ்வொருவரிடமும் 20 இற்கும் மேற்பட்ட நாணயங்கள் உள்ளன.
- மூவரிடமும் உள்ள நாணயங்களின் எண்ணிக்கை சமனானதன்று.

07. விமலாவிடம் 37 நாணயங்கள் இருப்பின், கமலாவிடம் இருக்கக்கூடிய நாணயங்களின் எண்ணிக்கை யாது?
1) 27  2) 29  3) 31


08. கமலாவிடமும் லீலாவிடமும் உள்ள நாணயங்களின் கூட்டுத்தொகை 58 எனின், விமலாவிடம் உள்ள நாணயங்கள் யாதாக இருக்கலாம்?
1) 19  2) 23  3) 27

✱ 9ஆம், 10ஆம் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.


09. மயிலுக்கு போத்து போன்று நரிக்கு ......................
1) அலவன்.  2) ஓரி.  3) பாட்டி.

10. குரங்கிற்கு மந்தி போன்று குதிரைக்கு ..................
1) பிணை.  2) வடவை.  3) அளகு.

✱ 11ஆம், 12ஆம் வினாக்களில் காட்டப்பட்டுள்ள எண்கோலங்களை அவதானித்து வெற்றிடத்திற்குப் பொருத்தமான பெறுமானத்தைத் தெரிவுசெய்க.

11. 


1) 2  2) 3  3) 4


12. 


1) 44  2) 48  3) 40

13. சதுரவடிவக் காணியைச் சுற்றி சம அளவிலான தூரத்தில் தடிகள் நடப்பட்டுள்ளன. ஒரு பக்கத்தில் இருந்து பார்க்கும்போது 38 கம்பங்கள் காணப்படுமாயின், காணியைச் சுற்றிவர நடப்பட்டுள்ள கம்பங்களின் எண்ணிக்கை யாது?
1) 156  2) 152  3) 148

14. கண்ணனின் வயது கோகுலனின் வயதின் அரைவாசியாகும். கோகுலனின் வயது கோபியின் வயதின் அரைவாசியாகும். மூவரினதும் வயதுகளின் மொத்தம் 35 ஆண்டுகள் எனின், கோபிக்கு எத்தனை வயது?
1) 15  2) 18  3) 20


15. அருகே உள்ள பெரிய சதுரமுகிக் கோடுகள் வழியே வெட்டினால் மொத்தம் எத்தனை சிறிய சதுரமுகிகள் கிடைக்கும்?
1) 18  2) 21  3) 27





16. அருகில் உள்ளது தளவாடியில் தெரியும் மணிக்கூடு ஒன்றாகும். அதன் உண்மையான நேரம் யாது?
1) பி.ப 9.00  2) பி.ப 3.00  3) மு.ப 3.15




✱ பின்வரும் தொடர்புகளில் ஒவ்வோர் உருவிற்கும் ஒரு பெறுமானம் உண்டு. அதற்கேற்ப 17ஆம், 18ஆம் வினாக்களுக்கு பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.




17.  இன் பெறுமானம் யாது?
1) 7  2) 9  3) 8

18.  இன் பெறுமானம் யாது?
1) 14  2) 10  3) 12


19. அடுத்து வரவேண்டிய உருவின் இலக்கத்தை எழுதுக.



1)  2)  3)

20. பழங்கள், வாழைப்பழம், கதலி வாழைப்பழம் எனபவற்றுக்கிடையிலான தொடர்பைப் பின்வரும் படம் காட்டுகின்றது. அதில் X ஐக் குறிப்பது யாது?

1) வாழைப்பழம்.
2) பழங்கள்.
3) கதலி வாழைப்பழம்.




21. 10km நீளமான வீதியில் 250m இடைவெளிக்கு ஒரு கம்பம் நாட்டப்பட்டது. மொத்தமாக நாட்டப்பட்ட கொடிக்கம்பங்களின் எண்ணிக்கை யாது?

1) 40
2) 41
3) 39

✱ 22ஆம், 23ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களை வாக்கியங்களில் எவ்விதத்தில் பயன்படுத்தலாம் என்பதைக் குறிக்கும் விடையின் கீழ்க் கோடிடுக.

22. பாய்ந்து, ஓடி, பாடி
1) வினையெச்சம்.  2) பெயரெச்சம்.  3) பெயரடைமொழி.

23. தகதக, குடுகுடு
1) இணைமொழி.  2) இரட்டைக்கிழவி.  3) அடுக்குமொழி.

(17ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கண்ணில் வெண்ணெய்; மறு கண்ணில் சுண்ணாம்பா?

எதிர்கால உலகத்தை உருவாக்கும் தொழிற் சாலைகள்தான் பாடசாலைகள். ஒரு மாணவன் பாடசாலையில் புகட்டபடுகின்ற அறிவு, பண்பு, நடத்தை என்பவற்றை உள்வாங்கியே தன்னை தகவமைத்துக்கொள்கின்றான். அவனைச் செதுக்கு கின்ற பாடசாலையும் அங்கு போதிக்கின்ற ஆசிரியர்களும் சரிவர தம் பணியைச் செய்தால்தான் மாணவர்களின் ஆளுமை நல்ல முறையில் வளர முடியும். ஆனால் யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளில் நடக்கின்ற கூத்துகளைப் பார்த்தால் மாண வர்களுக்குச் சரியான வழிகாட்டியாக மாறவேண்டிய ஆசிரியர்கள், அதிபர்களில் சிலர் மட்டும் தம்முடைய சுயலாபத்தை மட்டுமே கருத்திற்கொள்கிறார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

அது வடமராட்சியிலுள்ள பிரபலமான மகளிர் கல்லூரி. அந்தப் பாடசாலையின் அதிபர் கண்டிப்பானவர். ஆசிரியர்களை ஓய்வுநேரத்தில் கூட 'கன்ரினில்' இருக்க விடமாட்டார்.

''நீங்கள் இஞ்சை ஆறுதலாக இருந்து ரீ குடிச்சுக்கொண்டு இருங்கோ. வகுப்பில பிள்ளையள் கத்திக் குழப்படி பண்ணிக்கொண்டிருக்குதுகள்'' என்று எடுத்த எடுப்பிலேயே வார்த்தைச் சவுக்கைச் சுழற்றுவார்.

''மேடம்! இப்ப எனக்கு 'பிறி டைம்'. மற்ற வகுப்பில பிள்ளைகள் கத்தினால் 'நான் என்ன செய்யிறது.?'' என்று ஆசிரியர்கள் யாராவது திருப்பிக் கேட்டால் அவருக்கு கோபம் வந்துவிடும்.

''பிறிப் பாடம் எண்டால் உடன கன்ரினுக்கோ ஓடிவாறது? ஒரு பொறுப்பு வேண்டாமோ? 'இன்ரேவிலுக்கு' வந்து ரீ குடிக்கலாம்தானே? நாளைக்கு உங்களைப் பார்த்துத் தானே பிள்ளையளும் கெடப் போகுதுகள்'' என்று தத்துவமழையைப் பொழியத் தொடங்குவார். இதைத் தாங்க முடியாமல் ஆசிரியர்கள் தமது ஓய்வுநேரத்தை விட்டு விட்டு, அன்றைக்கு விடுமுறை எடுத்திருந்த யாராவது ஒரு ஆசிரியரின் பாடத்தைக் கற்பிக்கச் சென்றுவிடுவார்கள்.

இப்படியெல்லாம் கண்டிப்பான அதிபரின் செயற்பாட்டில் அண்மையில் திடீரென ஒரு மாற்றம். எஸ்.எல்.ஈ.எஸ் பரீட்சைக்காக ஆசிரியர்கள் பரபரத்துக்கொண்டிருந்தார்கள். அந்தப் பரீட்சைக்குத் தோற்றும் நாலைந்து ஆசிரியர்களின் கையில் நூலகத்தின் திறப்பைக் கொடுத்து அங்கிருந்து நாள்முழுதும் பரீட்சைக்குப் படிக்குமாறு அன்புக் கட்டளை போட்டார். சாதாரணமாக ஒரு ஓய்வுப் பாட வேளையிலேயே கன்ரினில் ரீ குடிக்க விடாமல் விரட்டுகின்ற அதிபரா இப்படி? என்று ஏனைய ஆசிரியர்களுக்கு ஒரே ஆச்சரியம். 'சோழியன் குடுமி சும்மா ஆடாதே'.

இவ்வாறு பரீட்சைக்காக கடமை நேரத்தில் ஆசிரியர்களை அவர்களின் சொந்தத் தேவைக்காக பயன்

## கோணல் கோலங்கள்

படுத்த அதிபர் அனுமதி கொடுத்தமைக்கு என்ன காரணம்? குறித்த பரீட்சைக்குத் தோற்றும் ஆசிரியர்களில் ஒருவர் அப்பகுதியில் நிர்வாகத் துறையில் அதிகாரம்கொண்ட ஒருவரின் மனைவி. பாடசாலைக்கு ஏதாவது பொருள்கள் தேவை என்றால் இந்த ஆசிரியை உடனேயே தருவித்துக் கொடுத்து விடுவார். அதுவும் தங்களுடைய சொந்தப் பொருளையல்ல; தனது கணவரின் அலுவலகத்திலிருந்து தான். குத்துவிளக்கோ, மல்ரி மீடியா புறஜெக்டரோ எது வேண்டுமானாலும்-இரவு எந்த நேரமானாலும் குறித்த அலுவலகத்தின் கதவுகளைத் திறந்து எடுத்துக் கொடுக்கும் அதிகாரம் இந்த ஆசிரியையின் கையில் இருந்தது. இதற்குப் பிரதி உபகாரமாகவே குறித்த ஆசிரியைக்கும் அவர் சார்ந்த நாலைந்து பேருக்கும் விசேட கற்றல் அனுமதியை அதிபர் வழங்கியிருந்தார் என்று பின்னர் தெரிவிக்கப்பட்டது.

அதிபரின் திடீர் கருணை மழையைக் கண்ட ஆசிரியர்கள் சிலர் அவரை அணுகி, ''மேடம்! நாங்களும் எஸ்.எல்.ஈ.எஸ் எக்ஸாமுக்கு படிக்க வேணும். லைப்பிரறிக்கு போய் நாங்களும் படிக்கட்டுமா?'' என்று பவ்வியமாகக் கேட்டிருக்கிறார்கள். ஆனால் அதிபரின் முகத்தில் மீண்டும் பழைய கடுமை புகுந்துகொண்டது.

''என்ன விளையாடுறியளோ? நீங்கள் படிக்க என்று போனால் இஞ்சை பிள்ளையள் முகட்டைப் பார்த்துக்கொண்டு இருக்கிறதோ? பேசாமல் போய்ப் படிப்பிக்கிற அலுவலைப் பாருங்கோ. வீடுகளிலை போய் உங்கடை படிப்பு விசயங்களைக் கவனியுங்கோ. பள்ளிக்கூட நேரத்தை உங்கட தேவைக்குப் பாவிக்க வேண்டாம்'' என்று உச்சஸ்தாயியில் கத்தினார். அந்தக் கத்தலில் வெருண்டுபோன ஆசிரியர்கள் வாய்மூடி மௌனிகளாக ''அப்ப அவையை மட்டும் என்னண்டு படிக்க விடுவியள்?'' என்ற கேள்வியையும் அடக்கிக்கொண்டு அகன்று விட்டார்கள்.

அவ்வளவுக்கு அதிபரின் கத்தல் சக்தி வாய்ந்தது. வழமையாகப் பாடசாலைக்கு நேரம் தவறாமல் வருகின்ற இசைப்பாட ஆசிரியை ஒருநாள் சற்றுப் பிந்தி வந்துவிட்டார். அவ்வளவுதான். அதிபருக்கு வந்ததே கோபம். இசை ஆசிரியையை ஒரு வாட்டு வாட்டிவிட்டார். அதிபரின் அர்ச்சனை முடியும் முன்னரே இசை ஆசிரியைக்கு நெஞ்சடைப்பு ஏற்பட்டு, மூர்ச்சையாகி, அவர் மந்திகையில் சிகிச்சை பெறும் அளவுக்கு நிலைமை மோசமாகிவிட்டது. (குறித்த இசை ஆசிரியை மயங்கி விழுந்தவுடன் ''நான் சும்மா தான் விசாரிச்சனான். அதுக்குப் போய் மயங்கி விழுந்திட்டா. நான் வேலையை 'ரிசைன்' பண்ணப்போறன்.'' என்று அதிபர் அழுது புலம்பியது வேறு கதை).


மாணவர்களின் கற்றல் நேரத்தை வீணடித்து, விடுமுறைகூடப் போடாமல் அரசு கொடுக்கின்ற சம்பளத்தில் தம்முடைய பதவியுயர்வுக்கான பரீட்சைக்கு தயார் செய்ய அதிபர் அனுமதி கொடுத்தது சரியா என்பது விவாதத்துக்குரியதுதான். அதைவிடத் தனக்குப் பிடித்த ஆசிரியர்களுக்கு ஒரு நடைமுறையும் பிடிக்காதவர்களுக்கு இன்னொரு நடைமுறையையும் நடைமுறைப்படுத்துவது அழகா? ஒரு கண் ணில் வெண்ணெய்யும் மறு கண்ணில் சுண்ணாம்பும் வைத்துக் கொள்வது எந்த விதத்தில் நியாயம்? ✱

**ஓடுகாலி**

---

*(16 ஆம் பக்கத் தொடர்ச்சி )*

✱ பின்வரும் படத்தின் உதவியுடன் 24ஆம், 25ஆம் வினாக்களுக்கு விடை தருக.




24. எள்ளுருண்டைகள் மூன்றினதும் இனிப்புகள் ஐந்தினதும் விலை யாது?
1) ரூபா 44.00 2) ரூபா 58.00 3) ரூபா 66.00

25. எள்ளுருண்டை ஒன்றினதும் இனிப்பு ஒன்றினதும் விலை யாது?
1) ரூபா 11.00 2) ரூபா 14.00 3) ரூபா 18.00

26. புதன்கிழமையில் ஆரம்பிக்கும் ஓர் ஓகஸ்ட் மாதத்தில் ஆகக்கூடியது எத்தனை புதன்கிழமைகள் காணப்படும்?
1) 4 2)5 3) 6

27. 2010 ஆம் ஆண்டு ஒரு நெட்டாண்டு அல்ல. ஆகவே, அவ்வாண்டின் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி திங்கட்கிழமை ஆயின், அம்மாதத்தின் இறுதி நாள் என்ன கிழமை?
1) புதன். 2) வெள்ளி. 3) வியாழன்.

✱ கீழே உள்ள சக்கரங்களைப் பார்த்து அதன் கீழுள்ள 28ஆம், 29ஆம் வினாக்களுக்கு விடை தருக.
P இன் சுற்றளவு - 9cm
Q இன் சுற்றளவு - 15cm
R இன் சுற்றளவு - 3cm
S இன் சுற்றளவு - 12cm




28. S சக்கரம் 5 தடவைகள் சுற்றினால் R சக்கரம் எத்தனை தடவை சுற்றும்?
1) 18 தடவைகள்.
2) 20 தடவைகள்.
3) 60 தடவைகள்.

29. P சக்கரம் ஒரு தடவை சுற்றினால் R சக்கரம் எத்தனை தடவைகள் சுற்றும்?
1) 3 தடவைகள்.
2) 2 தடவைகள்.
3) 9 தடவைகள்.

✱ 30ஆம், 31ஆம் வினாக்களில் பழமொழிகளின் கருத்தினை நன்கு விவரிக்கும் விடையின் கீழ்க் கீறிடுக.

30. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை.
1) ஒருவரது நிலையை அறிந்து பிச்சை கொடு.
2) திருப்தியற்ற மனநிலை.
3) நாம் மனம் வைத்தால் எதையும் செய்யலாம்?


31. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
1) காற்று நல்ல பயனுடையது.
2) சந்தர்ப்பத்தைத் தவறவிடக்கூடாது.
3) அதிக ஆசை வைக்கக்கூடாது.

32. நீல நிறத்தையும் மஞ்சள் நிறத்தையும் சேர்க்கும்போது உண்டாகும் வர்ணம்.
1) கறுப்பு. 2) பச்சை. 3) ஊதா.

33. சிவப்பு நிறத்தையும் நீலநிறத்தையும் சேர்க்கும்போது வரும் வர்ணம்,
1) பச்சை. 2) நீலம். 3) ஊதா.

✱ 34-40 வரையான வினாக்களுக்கு சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.


34. கீழே காணப்படும் தச்சன் பயன்படுத்தும் உபகரணத்தின் பயன்பாடு யாது?
..............................................




35. 
மேசன் பயன்படுத்தும் அருகில் காணப்படும் உபகரணத்தின் பயன்பாடு யாது?
..............................................

36. இக்கூம்புக்கு எத்தனை முகம் உண்டு?
..............................................



37. 
இந்த உருளைக்கு எத்தனை விளிம்பு உண்டு?
..............................................

38. இந்த மின்குமிழ் ஒளிராமைக்கான காரணம் யாது?
..............................................
..............................................




39. இலங்கையின் தற்போதைய பிரதம மந்திரி யார்? ..............................

40. இலங்கையின் தற்போதைய சபாநாயகர் யார்? ..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண வாழ்த்துக்கள்

Happy Marriage life



*Richard & Yalini*

கடந்த 18.05.2011 அன்று திருமண பந்தத்தில் இணைந்த எமது நண்பர் **றிச்சட்-யாழினி** தம்பதியைத் தமது திருமண வாழ்க்கையில் சகல சௌபாக்கியங்களையும் இனிதேபெற்று சீரும் சிறப்புடனும் இறையருள் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

யாழ்ப்பாணம். நண்பர்கள்.

(49,20,52)

## சைக்கிள் மோதி மாணவன் சுயநினைவிழந்தார்

இரு சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில்பாடசாலைமாணவன் சுயநினைவை இழந்துள்ளார்.

தவசிகுளத்தைச் சேர்ந்த கோபால் தர்சன்(வயது- 16) என்னும் மாணவனே சுயநினைவிழந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ச-207

# 3 ஆவது பிறந்ததின வாழ்த்து



08 06 2011

Happy Birthday

சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த உதயகுமார் - ஜீவசுதா தம்பதியரின் செல்வப் புதல்வி *டிலாஜினி* தனது மூன்றாவது பிறந்த நாளை அவரது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, சித்தாமார், அம்மப்பா, அம்மம்மா, அத்தைமார், மாமாமார், மச்சாள்மார், மச்சான்மார், பெரியப்பா, பெரியம்மா, அன்ராமார், உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை. தகவல்: அப்பா,அம்மா.



டிலாஜினி

(..22.24)

ஓம் பிரம் விஷ்வப் பிரம்மனே நம

# புதுகடைத் திறப்புவிழா அழைப்பு

# சுபா நகை மாளிகை



அன்புடையீர்...!

இன்று 08.06.2011 புதன்கிழமை முற்பகல் 10.49- 11.45 வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் சுபா நகை மாளிகை எனும் ஸ்தாபனம் திறந்து வைக்கப்படும். அத்தருணம் வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**உரிமையாளர்: யோ.சதீசன்**

**பிரதான வீதி,**
**தண்ணீரூற்று, முள்ளியவளை.**
**(தண்ணீரூற்று சந்தை முன்பாக)** (49,22,25)

# 1 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

## சோபிகா 08.06.2011



லண்டனில் வசிக்கும் தயாபரன்-நிரோனி தம்பதியரின் செல்வப்புதல்வி சோபிகா இன்று (08.06.2011) புதன்கிழமை தனது முதலாவது பிறந்தநாளை வெகுவிமரிசையாகத் தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, சித்தா, பெரியப்பாமார், பெரியம்மாமார், அத்தைமார், மாமாமார் மற்றும் உறவினர், நண்பர்கள் அனைவரும் சோபிக்குட்டியை வீரபத்திரர் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

HAPPY BIRTHDAY

நுணாவில் மேற்கு, சாவகச்சேரி. (49,19,50) தங்கேஸ்வரன் குடும்பம்.

சிவமயம்
அன்னை மகாமாரி துணை


# ஊர்காவற்றுறை - புளியங்கூடல் - செருத்தனைப்பதி

# அருள்மிகு ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தானம்

# கரவருஷ பெருந்திருவிழா - 2011



ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத்தாளைப் புவி அடங்கக்
காத்தாளை அங்குச பாசாங்குசமுங் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே



**09.06.2011 வியாழக்கிழமை**
காலை 7 மணிக்கு மஹா கணபதி ஹோமம். தொடர்ந்து காயத்திரி ஹோமம் நவக்கிரக ஹோமம் ஆகியன நடைபெறும். மாலை கொடியேற்றத்துக்கான பூர்வாங்க கிரியைகள் நடைபெறும்.

**10.06.2011 வெள்ளிக்கிழமை**
கொடியேற்றம் மு.ப. 10 மணிக்கு

**13.06.2011 திங்கட்கிழமை**
உற்சவ மூர்த்திக்கான விஷேட சங்காபிஷேகம்

**17.06.2011 வெள்ளிக்கிழமை**
பகல் கைலாச வாகனம், வேட்டைத்திருவிழா, இரவு பெரிய சப்பறம்

**18.06.2011 சனிக்கிழமை**
காலை 8 மணிக்கு தேர்த் திருவிழா

**19.06.2011 ஞாயிற்றுக்கிழமை**
காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழா, மாலை 5 மணிக்கு கொடியிறக்கம், அதைத் தொடர்ந்து நவ சந்தி விஷேட உற்சவம்

**20.06.2011 திங்கட்கிழமை**
பகல் விஷேட சங்காபிஷேகம் மாலை சண்டேஸ்வரர் உற்சவம்

யாழ்ப்பாணத்துக்கு அணித்தாக உள்ள வேலணைத் தீவின் தலைப்பட்டணமான ஊர்காவற்றுறைக்கு தென் கிழக்குத் திசையில் மருத நிலமும் நெய்தல் நிலமும் ஒன்று சேருமிடத்தில் அமைந்திருக்கும் புளியங்கூடல் கிராமத்தில் இன்றைக்கு 250 ஆண்டுகளுக்கு முன் தோன்றி அருள் ஒளி பாலிக்கும் பாமர மக்களின் இஷ்ட தெய்வமாகிய ஸ்ரீ மகாமாரி அம்பாளின் இந்தாண்டு பெரும் திருவிழா 09.06.2011 வியாழக்கிழமை விசேட ஹோமங்களுடன் ஆரம்பமாகி நடைபெறும்.

குறிப்பு: இந்தாண்டு பெருவிழாவைத் தொடர்ந்து பாலஸ்தாபன கும்பாபிஷேகம் செய்து மூலமூர்த்திக்கான கருவறை ஆலயம் புதிய கருங்கல் கோயில் அமைக்கப்பட்டு 2012 ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற அம்பிகையின் திருவருள் கூடியுள்ளதால் இப்பெரும் திருப்பணிக் கைங்கரியத்தில் யாவரும் பங்குபற்றி இந்தப்பணி சிறப்புடன் நிறைவுற ஒத்துழைப்பு வழங்குமாறு பணிவன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

உற்சவ காலங்களில் அடியார்கள் யாவரும் சைவசமய ஆசார சீலர்களாக தமிழ்ப்பண்பாட்டு உடை அணிந்து வருகை தந்து அம்பிகையின் பேரருள் பெற்று ஏகுமாறு பணிவன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

'அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாம்'


அம்பிகையின் அரும்பணியின் கீழ்
து.சிவஞானச்செல்வம், ஆலய அறங்காவலர்.

செருத்தனைப்பதி, புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை.

(சி-472) (48,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவில் சைவத்தை வளர்க்க முதன் முதலில் தோற்றம் பெற்ற சைவப்பிரகாச வித்தியாலயம்



சுதேசிகள் வருகையால் இந்த நாட்டில் கிறிஸ்தவமதம் பரவக் காரணமாக இருந்த காலகட்டத்தில் இந்து மதத்தைச் சேர்ந்த மக்கள் தமது சமயத்தை அதன் கோட்பாடுகளைக் கடைப்பிடிப்பதில் பல்வேறு சிக்கல்கள் இருந்தன. இந்தச் சூழலில் கத்தோலிக்கப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு கல்வியுடன் கத்தோலிக்க மதத்தையும் வழங்கும் முனைப்புகளுக்கு எதிராக சைவப்பாடசாலைகளை உருவாக்க சைவ மதப் பெரியார்கள் எடுத்திருந்த முயற்சிகள் அளப்பரியன. அதன் பயனாகவே எமது பிரதேசத்தில் சைவப் பாடசாலைகள் தோற்றம் பெற்றன.

அந்தவகையில் உருவான முதலாவது சைவப் பாடசாலையோ 1922 இல் தோற்றுவிக்கப்பட்ட நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித்தியாலயமாகும். நெடுந்தீவு மேற்கு நெழுவினி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தை அண்மித்து இந்தப் பாடசாலை அமைந்துள்ளதால் பிள்ளையார் கோயில் பள்ளிக்கூடம் என்ற செல்லப் பெயரும் இதற்கு உண்டு.

நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி வேலுப்பிள்ளை என் பவருடன் இங்குள்ள சைவப் பெருமக்கள் சைவ சமயப் பாடசாலை ஒன்றை ஆரம்பித்து தமது பிள்ளைகளுக்கு சைவமதக் கொள்கைகளையும் அனுட்டானங்களையும் முறையாகப் பயிற்றுவித்து சமய வளர்ச்சியைக் கட்டிக் காக்க வேண்டும் என்பதனால் அனலைதீவு சதாசிவம் பாடசாலையின் தலைமை ஆசிரியராக இருந்த வேலுப்பிள்ளையுடன் தொடர்பு கொண்டு அவரது தலைமையிலேயே தொடர்ந்தும் இப் பாடசாலை இயங்க ஒத்துழைப்பையும் வழங்கினார்கள்.

இவருக்கு உதவியாக வே.இராமநாதன், சி.இளையதம்பி, கா.சுப்பிரமணியம் ஆகியோரும் ஆசிரியர்களாகக் கடமையாற்றினார்கள். பாடசாலைக்கென புதிய கட்டடம் அமைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்காக முன்னின்று செயற்பட்டவர் அம்பலவாணர் கணபதிப்பிள்ளை. இவரே பாடசாலையின் பராமரிப்பு விடயங்களைக் கவனித்து வந்தார்.

ஆரம்ப காலத்தில் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதில் சிரமங்கள் இருந்துள்ளன. பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட பிடியரிசி முறையும் பாடசாலைக்கு உதவியாக இருந்துள்ளது. முதலாவது தலைமை ஆசிரியர் வேலுப்பிள்ளை சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரிக்கு மாற்றமாகிச் சென்றபோதும் இந்தப் பாடசாலையின் வளர்ச்சியிலும் தேவைகளிலும் அக்கறை கொண்டிருந்தார். அதற்கெனத் தனது சம்பளத்தில் ஒரு தொகையை இந்தப் பாடசாலையின் நலனுக்காக வழங்கிக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

முதலாவது தலைமை ஆசிரியரும் அவரைத் தொடர்ந்து தலைமை ஆசிரியர்களாகப் பொறுப்பேற்ற இ.சுவாமிநாதர், நீ.சேதுபதி, வி.இராமலிங்கம், நா.பசுபதிப்பிள்ளை, க. கணபதிப்பிள்ளை, ஆ. கந்தையா, சு. இராமசாமி, இ.சுப்பிரமணியம், இ. வேலுப்பிள்ளை, சு. குமாரவேலு, நா.சங்கரப்பிள்ளை, ச. கணேசதாசன் சு. நடராசலிங்கம், செல்வி க.தம்பிப்பிள்ளை, திருமதி. பா.இராமநாதன் ஆகியோர் அதிபர்களாகவும் ஆசிரியர்களான திருமதி. நவயோகம், நாகேந்திரநாதன், செ. மகேசு, க.அரசரட்ணம், திருமதி ரெஜினா செல்வராணி, திருமதி தனேஸ்வரி அலோசியஸ், திருமதி பவுஸ்ராதேவி அரசரட்ணம், செல்வி. மனோகரி சோமசுந்தரம், திருமதி ப. யோகராணி, வே. புஸ்பராணி, க. கயிலாயபிள்ளை, திருமதி க.காமாட்சி, திருமதி இ.பேரம்பலம், திருமதி ஜெயவதி கணேசன் ஆகியோரும் தமது பதவிக் காலங்களில் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக மேலதிக வகுப்புக்களையும் நடத்தி, மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறவும் எதிர்காலத்தில் உன்னத மனிதர்களாகவும் ஒழுக்கம் மிக்கவர்களாகவும் வாழ வழிகாட்டிகளாக இருந்து அர்ப்பணிப்புடன் சேவையை வழங்கியிருந்தனர். இக்காலங்களில் போதிய வளங்களின் பற்றாக் குறையும் இருந்துள்ளன எனவும் கூறப்படுகின்றது. தற்போதய அதிபராகக் கடமையாற்றுபவர் ச.சத்தியவரதன். இவரது முயற்சியில் ஆய்வுகூடம், வகுப்பறைகள், விளையாட்டு மைதானம், நூலகம் என்பன கிடைக்கப்பெற்றன. கல்வித் திணைக்களம் பாடசாலையின் தேவைகளை நிறைவு செய்வதில் கூடிய கவனம் செலுத்தி வருவதுடன் வெளி நாடுகளில் உள்ள இந்தப் பாடசாலையின் பழைய மாணவர் சங்கம், கனடா ஒன்றியம் என்பனவும் அவ்வப்போது மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அக்கறைகாட்டுகின்றன.

2001ஆம் ஆண்டில் கிடைத்த ஜி.சீ.ஈ சாதாரணதர பெறுபேறுகளைத் தொடர்ந்து ஜி.சீ.ஈ உயர்தர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தப்பாடசாலையின் ஆரம்பகாலத்தில் பொருளாதார வளக்குறைவு காரணமாக தொடர்ந்தும் மேற்படி பாடசாலையை இயக்க இங்குள்ளவர்கள் அதிபர், ஆசிரியர்கள் மிகவும் சிரமப்பட்டனர். அதனால் இந்தப்பாடசாலையை கையேற்குமாறு மக்கள் சேர். பொன். இராமநாதனிடம் கோரிக்கை விடுத்தனர் அதற்கு அவரால் நிர்வகிக்கும் பாடசாலைகளின் எண்ணிக்கையைச் சுட்டிக் காட்டி இப்பாடசாலையைத் தமது நிர்வாகத்தின்கீழ் ஏற்க முதலில் அவர் மறுப்புத் தெரிவித்தார். எனினும் சைவப் பாடசாலைகளை நிர்வகிப்பதற்காக சைவ மதசார்பான சங்கம் ஒன்றை உருவாக்க விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்றுக் கொண்டு யாழ்ப்பாணம் சைவ வித்தியாவிருத்திச் சங்கம் என்ற அமைப்பை உருவாக்கி அரசில் பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர் இந்தப் பாடசாலையும் பின்னாளில் ஆரம்பிக்கப்பட்ட கிழக்குப் பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணிய வித்தியாலயமும் சங்கத்தில் பதிவு செய்யப்பட்டன. இந்தப் பாடசாலைகளே சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் முதலாம், இரண்டாம் இலக்கப் பாடசாலைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்வி, விளையாட்டுத் துறைகளில் கணிசமான வளர்ச்சியைப் பெற்றுவரும் இப்பாடசாலை சைவ சமயத்தைப் பேண வேண்டும் என்ற ஆரம்ப குறிக்கோளையும் சிறந்த முறையில் முன்னெடுக்கின்றது. பாடசாலையின் சமீபமாக உள்ள நெழுவினி சித்தி விநாயகர் ஆலயத்தின் நிகழ்வுகளில் கலந்து கொண்டு அதன் சிறப்புக்காக அதிபர், ஆசிரியர்கள்,மாணவர்கள் முழு ஒத்துழைப்பையும் வழங்கி வருவதுடன் வெள்ளிக்கிழமைகளில் விசேட பிரார்த்தனைகளிலும் கலந்து கொண்டு சமய வளர்ச்சிக்கான செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இங்கு கற்பித்த ஆசிரியர்கள் பசுபதிப்பிள்ளை சத்தியதேவி துரைசிங்கம், நா. கந்தையா ஆகியோர் இப் பாடசாலையின் பழைய மாணவர்கள். இங்கு முதன் முதலாக மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர்களாக பட்டம் பெற்றவர்களும் இவர்களே. கல்வியில் நூறு வீத சித்திகள், புலமைப் பரிசில்களில் நூற்றுக்கும் அதிகமான புள்ளிகள் பெறும் மாணவர்கள் என்பதுடன் தமிழ், ஆங்கில தினப் போட்டிகள் ,பண்ணிசைப் போட்டிகளில் கோட்ட, வலய மட்டத்தில் சிறந்த வெற்றிகளையும் பெற்றுள்ளது. தொடர்ந்தும் இவற்றில் முன்னிலை வகிக்க வேண்டும் என் பதில் ஆசிரியர்கள் ஆர்வ முடனுள்ளனர்.

**லக்ஸ்மன்**

பாடசாலையின் வளர்ச்சியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் என்.சிவா ஜீலிங்கம்தற்போ தைய நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், எஸ்.சிறிதரன்ஆகியோருடன் பழைய மாணவர்களும் தமது முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கி வருவதால் எதிர்காலத்தில்மேலும்சிறந்த கல்வியாளர்களும் விளையாட்டு வீரர்களும் உருவாகச் சைவப்பிரகாச வித்தியாசாலையின் பங்களிப்பு நிச்சயம் என்பது மக்களின் நம்பிக்கை. ★

# கலை வளர்ப்புடன் மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும் பங்களிப்பாற்றும் காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்

(சென்ற வாரத்தொடர்ச்சி)



காரைநகரப் பிரதேசத்தில் கலை வளர்ச்சிக்குச் சிறந்த பங்களிப்பு ஆற்றி வருகிறது கிழவன் காடு கலாமன்றம். அதுமட்டுமன்றி அறநெறிப்பாடசாலை ஊடாகச் சிறந்த அற ஆசார நீதிக்கருத்துக்களைப் போதித்து வருகின்றது. அந்த வகையில் அறநெறி, சமயம் ஆகிய பாடங்களை செல்வி எஸ்.சுகந்தியும் சங்கீதத்தினை நுண்கலைமாணி திருமதி சத்தியாம்பாள் சிறிதரனும், பண்ணிசையினை திருமதி எஸ். சிவசத்தியும் நடனத்தை செல்வி எஸ்.சியாமளாவும் மிருதங்கத்தை சங்கீதரத்தினம் மா.சிதம்பரநாதனும், சித்திரத்தை சி.மதியழகனும், வயலினைச் செல்வி கலாசக்தி நவரத்தினமும் கற்பித்து வருகின்றனர்.

இந்த மன்றத்தினால் மிருதங்க அரங் கேற்றம் மற்றும் கலை விழாக்கள் கடந்த ஆண்டு நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் இடம்பெற்றது. அத்துடன் கலைக்கண்காட்சி நடத்தல் மற்றும் சமயம், கலைகள் சம்பந்தமான சுற்றுலாக்களுக்கு மாணவர்களை அழைத்துச் செல்லல் போன்றவற்றை மன்றம் மேற்கொண்டு வருகின்றது.

யாழ்.மாவட்டத்தில் சிறப்பாகவும் ஒழுங்காகவும் இயங்கும் மன்றமாகத் தெரிவுசெய்யப்பட்டு மன்ற மாணவர்களுக்குச் சீருடைகளும், சுருதிப் பெட்டிகளும் இந்து கலாசாரத் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளதுடன் தளபாடக் கொள்வனவுக்கும் ஒரு தொகைப் பணத்தையும் வழங்கி உள்ளது. இங்கு கலைகள் போதிக்கும் ஆசிரியர்களுக்கு மிகச் சிறிய தொகையே சம்பளமாக வழங்கப்பட்டாலும் அவர்களது சேவை மிகப் பெரியது.

**டர்ஸிகன்**

தன்னால் இயன்ற பணிகளை காரைநகர்ப் பிரதேச மாணவர்களுக்கும் மக்களுக்கும் ஆற்றிவரும் இந்த மன் றம் மேலும் பல்வேறு சிறப்பான பணிகளை முன்னெடுப்பதற்கு நிதிவளம் போதாமல் உள்ளது. புலம்பெயர்ந்து வாழும் எம்மவர்களும் கொடை வள்ளல்களும் இந்த மன்ற வளர்ச்சிக்கு உதவி புரிவார்களேயானால் காரைநகர்ப் பிரதேச மக்களின் கலை வளர்ச்சி மேலும் அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தீர்வு கிடைக்கும் வரையில் ஒதுங்கமாட்டேன் என்கிறார் டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 08

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இதய சுத்தியுடன் கரம் கோர்க்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற கொக்காவில் தொலைத் தொடர்பு கோபுரத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ் மக்களின் அரசியல் உரிமை பிரச்சினைக்குத் தீர்வு காணும்வரை- எமது முயற்சிகள் வெற்றிகாணும் வரை அரசியலை விட்டுஒருபோதும் ஒதுங்கப் போவதில்லை. நான் சொன்ன கருத்துக்களையும், சுயலாபத் தமிழ் அரசியல் தலைமைகள் அன்றே ஏற்றுச் செயற்பட்டிருந்தால் தமிழ் மக்கள் இத்தனை துன்பங்களையும் அனுபவித்திருக்க மாட்டார்கள்.

கூட்டமைப்பினர் அரசுடன் பேசும் போது தமது சொந்த அலுவல்கள் குறித்து மட்டுமே பேசி வருகின்றனர். தாம் வெளிநாடு சென்று வருவதற்கான விசாக்களையும், தமக்கான சலுகைகள் குறித்துமே கோரிக்கைகளை முன் வைத்து வருகின்றனர்.

ஆனால் ஊடகங்களுக்கு அறிக்கை விடும்போது, மக்களை ஏமாற்றும் விதமான கருத்துக்களை விதைத்து வருகின்றார்கள். தமிழ் மக்களின் அரசியல் உரிமை குறித்து பேசிக் கொண்டிருப்பதாக கற்பனைக் கதைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள்- என்றார். (த-9)

# 750 கிலோ வாற்ஸ் வலுக்கொண்ட மின்பிறப்பாக்கி யாழ்.ஆஸ்பத்திரிக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 08

யாழ்.போதனா வைத்தியசாலைக்கென 750 கிலோ வாற்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய 30 மில்லியன் ரூபா பெறுமதியான புதிய மின்பிறப்பாக்கி ஒன்று கொழும்பிலிருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை எடுத்து வரப்பட்டு வைத்தியசாலையில் அதற்கென நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தில் நேற்று முன்தினம் வைக்கப்பட்டது.

இதனை இயங்க வைப்பதற்கான உபகரணங்கள் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டு ஒரு மாத காலப் பகுதியினுள் இதன் மூலம் மின்சாரம் வழங்கப்படவுள்ளதாக வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எஸ். ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

இது குறித்து மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு:-

நான்கு வருடங்களுக்கு முன்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கென அமெரிக்காவிலிருந்து 30 மில்லியன் ரூபாவுக்கு இந்த மின்பிறப்பாக்கி கொள்வனவு செய்யப்பட்டது.

பல்வேறு காரணங்களினால் அது இது வரை காலமும் கொழும்பில் வைக்கப்பட்டிருந்தது. தற்போது இங்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்திய சாலையில் இதுவரை காலமும் 200 கிலோவாற்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய இரண்டு மின்பிறப்பாக்கிகள் மூலமாக மின் வழங்கப்பட்டு வந்தது. எனினும் இதன் மூலமாக சகல பகுதிகளுக்கும் ஒரே நேரத்தில் மின்சாரம் வழங்க முடியாதநிலை காணப்பட்டது. இதனால் பெரும் இடர்பாடுகளை எதிர்கொண்டு வந்தோம். இந்த புதிய மின்பிறப்பாக்கி மூலமாக மின்சாரம் சீரான முறையில் கிடைக்கும் என்றார்.

இந்த மின்பிறப்பாக்கியை கொழும்பிலிருந்து எடுத்துவருவதற்கு சுமார் 8 லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-4)

# யாழ்.வலயப் பணிப்பாளர் நாளை நியமிக்கப்படுவார்

யாழ்ப்பாணம், ஜூன் 08

யாழ்ப்பாணக் கல்வி வலயத்துக்கான வலயக்கல்விப் பணிப்பாளர், நேர்முகப்பரீட்சையின் மூலம் நாளை வியாழக் கிழமை நியமிக்கப்படவுள்ளார்.

யாழ்ப்பாணக்கல்வி வலயத்தின் வலயக் கல்விப்பணிப்பாளராக இருந்த திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அண்மையில் ஓய்வுபெற்றுச் சென்றிருந்தார். இதனைத் தொடர்ந்து அந்த இடத்துக்கு இதுவரை யாரும் நியமிக்கப்படவில்லை.

அத்துடன் கிளிநொச்சி மற்றும் துணுக்காய் கல்வி வலயங்களுக்கும் கல்விப்பணிப்பாளர்கள் நியமனம் செய்யப்பட வேண்டியுள்ளது. எனவே இந்த 3 கல்வி வலயங்களுக்குமான வலயக் கல்விப் பணிப்பாளர்களைத் தேர்வு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை ஆளுநர் அலுவலகத்தில் நாளை இடம் பெறவுள்ளது.

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, வடமாகாண கல்விப் பணிப்பாளர், கல்வியமைச்சின் பதில் செயலர் ஆகியோர் நேர்முகப் பரீட்சையை நடத்தவுள்ளனர் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (த-15)

# வங்களாவடி குறிகாட்டுவான் படகுச் சேவையை ஆரம்பிக்குக

யாழ்ப்பாணம், ஜூன் 08

நயினாதீவு வங்களாவடித் துறைமுகத்தைப் புனரமைத்து குறிகாட்டுவானில் இருந்து வங்களாவடித்துறைமுகம் வரையான படகுச் சேவையைச் மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என நயினாதீவுமக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

இந்தத் துறைமுகத்தை அண்டிய பகுதிகளேமக்கள்குடியிருப்பு அதிகரித்தபகுதி என்பதால் வங்களாவடித் துறைமுகத்தின் பயன்பாடுகள் மீண்டும் இடம்பெற வேண்டும் என்பதில் பொதுமக்கள் ஆர்வம் காட்டுகின்றனர்.

கடந்த 1983 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்தத் துறைமுகமே நயினாதீவின் பிரதான துறைமுகமாக செயற்பட்டது என்பதுடன் பின்னாளில் இந்தத் துறைமுகம் மெல்ல மெல்லத் தனது செயற்பாட்டை இழந்ததாகவும் தெரிய வருகிறது.

இந்தத் துறைமுகத்தை புனரமைத்து அதன் ஊடாக வழமையான செயற்பாடுகளை முன்புபோல் மேற்கொள்ள வேண்டுமென இப்பகுதியிலுள்ள மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர். (த-7)

**இறைச்சிக் கோழி விற்பனை**

புறோயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
சுத்தம் செய்யப்பட்டது. 420/-

**விஜயகுமார்,**
**குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை**

**தேவை**

தமிழ், ஆங்கில Computer Type setting தெரிந்தவர்கள் தேவை. (Corel draw, Photo shop) முன் அனுபவமுள்ளவர்கள் மட்டும். தகுந்த சம்பளமும், வசதிகளும் கொடுக்கப்படும்.

**போஸ்கோ,**
252, பருத்தித்துறை வீதி,
(நல்லூர் கோயில் முன்பாக)
நல்லூர், யாழ்ப்பாணம்.
(சி/725)

**கல்வி**

A/L 2013, 2012 பௌதிகவியல், இணைந்த கணிதம் ஆகிய பாடங்கள் தனியாகவோ/ குழுவாகவோ கற்பிக்கப்படும்.
(1738) T.P: 0774233845

**தவறிவிட்டது**

ஜேசுதாசன் நெல்சன் பிரைட் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (922211370V) அளவெட்டி டியி லிருந்து உடுவில் செல்லும் வீதியில் நேற்று (06.06. 2011) மாலை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
T.P:0213211735, 0758860265

**2011 Aug உயர்தர வகுப்பு கணித, விஞ்ஞானப்பிரிவில் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து மாணவர்களுக்குமான அறிவித்தல்**

தங்களுக்குரிய பௌதிகவியல், இரசாயனவியல் பாடத்திற்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கினை எதிர்வரும் 10-06-2011 வெள்ளிக்கிழமை காலை 9.00 முதல் மாலை 3.00 மணி வரை யாழ் மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் பல கல்வியியலாளர்களும், பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் இணைந்து நடத்த ஒழுங்கு செய்துள்ளார்கள். மேலும்

* புதிய கைநூல் வெளியீடு
* வெற்றிகரமாகப் பரீட்சை எழுதும் நுட்பங்கள்
* பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட புதிய விடயங்கள்
* கடந்த கால வினாத்தாள்களின் ஆய்வு

என்பனவும் கருத்தரங்கில் இடம் பெற இருக்கின்றது.
மாணவர்கள் குறிப்புக்கள் எடுத்துக் கொள்வதுடன் தொடர்ந்து செயலமர்வில் பங்குபற்றவும் ஆயத்தமாக, 1999 ஆம் ஆண்டு பௌதிகவியல் கடந்த கால வினாத்தாள் தொகுதியுடன்

அன்று காலை குறித்த மண்டபத்துக்கு காலை 8.45 மணிக்கு முன்பாகச் சமுகமளித்து தங்கள் ஒத்துழைப்பை வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

THE JAFFNA SCIENCE CLUB
ஊடக அனுசரணை உதயன்
(9715)

**Soft View**
**Academy for Computing & IT**
**Center For Information Technology (Pvt) Ltd**

102, Main Street சிறைச்சாலை முன்பாக
Jaffna. 0212224885, 0779053545
MSOffice, DTP, Hardware, KidsProgram
Internet & Email, Type Setting, Web Designing, Video Editing, Graphic Designing, Computerized Accounting.
Note:- மாணவர் ஒவ்வொருவரும் தமக்குத் தேவையான நேரத்தை தேர்ந்தெடுக்கலாம்.
(7.30 a.m to 9.30 p.m)

**உடன் தேவை**

நல்லூர் செட்டித் தெருவில் அமைந்துள்ள பாமசி/பல்பொருள் விற்பனை நிலையத்துக்கு பெண் விற்பனை உதவியாளர் தேவை. அனுபவமுள்ள, பழக விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம். அருகிலுள்ளோர் விரும்பத்தக்கது.
(1748) தொடர்பு:- 0723301061

**தவறிவிட்டது**

NP-UX 9086 இலக்கமுடைய மோட்டார் சைக்கிளின் பின் இலக்கத் தகடு 03.06.2011 அன்று சீரணிச் சந்திக்கும் மாதகல் சென் யோசப் மகா வித்தியாலயத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
T.P: 0777238478, 0212240957 (1742)

**கண்டெடுக்கப்பட்டுள்ளது**

06.06.2011 திங்கட்கிழமை காலை சுன்னாகத்துக்கும் மருதனார் மடத்துக்கும் இடையில் கே.கே.எஸ். வீதியில் தங்க நகை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்.

S.R. சுபாஸ்கரன், நாவற்குழி கிழக்கு, கைதடி(தச்சன் தோப்பு, [illegible]
(1748) T.P: [illegible]


**கண்ணீர்க் காணிக்கை**



எமது பாடசாலை உப அதிபர்
**வே.சந்திரசேகர்** அவர்களின்
அன்புத் தாய்
**திருமதி சகுந்தலாதேவி வேலுப்பிள்ளை**
04.06.2011 அன்று இறைபதம் எய்திவிட்டார்.
அன்னாரின் குடும்பத் தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை. (49,19,20) ஆசிரியர் கழகம்.
(1729)

**நெஞ்சை விட்டகலாத முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



மலர்வு
10.08.1920

உதிர்வு
20.05.2010

அமரர்
**இளையதம்பி பொன்னுத்துரை**

திதி:08.06.2011

வையக வாழ்விலே வழிகாட்டிய ஐயாவே!
மெய்யது நீங்கி ஓராண்டு ஆகிலும்
பொய்யிலா நின் புகழ் நீண்டு நிலைத்திட
கையது கூப்பி கரம் தாழ் பணிகின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

காளிகோயிலடி,
ஏழாலை கிழக்கு. ஏழாலை.
(49,19,20)

**முதலாம் ஆண்டு நினைவலைகள்**

மலர்வு
14 . 06 . 1935



உதிர்வு
20 . 05 . 2010

**அமரர் கணபதிப்பிள்ளை இராசதுரை**

திதி: ஸப்தமி (08.06.2011)

எங்கள் அன்புத் தெய்வமே!
ஆண்டொன்று ஆனாலும்
ஆறாதையா உம் நினைவு.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.


ஸ்ரீலங்கா வீதி,
உடுவில், சுன்னாகம். (1736)

தகவல்:
திருமதி இ.புஸ்பமலர் (தவமணி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழருக்கு சம உரிமை வழங்க நடவடிக்கை எடுங்கள்

மன்மோகனிடம் தங்கபாலு வலியுறுத்து



சென்னை, ஜூன் 8

இலங்கைவாழ் தமிழர்களுக்கு சிங்களவர்களுக்கு இணையாக அரசியல், சமுதாய அங்கீகாரத்தை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்குக்கு தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் தங்கபாலு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

இலங்கையில் சிங்களவர்களுக்கு இணையாக தமிழர்கள் அரசியலிலும், தொழில், வேலை வாய்ப்புகளில் சமுதாயத்திலும் சம வாழ்வுரிமையைப் பெறும் வகையில் அங்கு அரசியல் சட்டத் திருத்தத்தை அமைக்க வேண்டும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், முன்னாள் மற்றும் தற்போதைய வெளியுறவு அமைச்சர்கள் ஆகியோர் அந்தநாட்டின் ஜனாதிபதி ராஜபக்ஷவை பல்வேறு சந்தர்ப்பங்களில் நேரில் சந்தித்து வலியுறுத்தினார்கள்.

அவர்களது வலியுறுத்தலை ஏற்பதாகவும், தமிழர்களுக்கு உரிய அரசியல் அந்தஸ்து அளிக்கப்படும் என்றும் ராஜபக்ஷ அப்போது உறுதியளித்து வந்துள்ளார். அதைத் தொடர்ந்து ஈழத்தமிழ்த் தலைவர்கள் மற்றும் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தை கூட்டி பலசுற்று கருத்தாய்வு செய்த இலங்கை அரசின் நடவடிக்கையால் தமிழர்கள் பிரச்சினை தீரும் என்ற நம்பிக்கை உலகளாவிய தமிழர்கள் மத்தியில் இருந்தது.

ஆனால் அதனைப் பொய்யாக்கும் வகையில் இலங்கையில் அதிகாரப் பரவல் என்ற அரசியல் மாற்றத்திற்கு இடமில்லை என்ற கருத்தை நேற்றுமுன்தினம் இலங்கை அரசு வட்டாரம் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இது உலகளாவிய தமிழர்கள் மத்தியில் குறிப்பாக இலங்கை வாழ் தமிழர்கள் உள்ளத்தில் மிகப் பெரும் வேதனைத் தீயை மூட்டும் நிகழ்ச்சியாகும்.

இந்தநிலையில் மத்திய அரசு சிறிதும் தாமதிக்காமல் நேரில் தலையிட்டு இலங்கைவாழ் தமிழர்களுக்கு உரிய அரசியல், சமுதாய அங்கீகாரத்தைப் பெற்றுத்தர உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக பிரதமருக்கு முக்கியமான கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (வ)

# காங்கிரஸ் உறுப்பினர் மீது டில்லியில் செருப்பு வீச்சு

ஊழலுக்கு எதிராக உண்ணாவிரம் மேற் கொண்ட ராம்தேவ் குறித்து டில்லியில் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய காங்கிரஸ் செய்தி தொடர் பாளர் ஜனார்த்தனன் துவிவேதி மீது செருப்பு வீசி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர் பாக மேலும் தெரியவருவதாவது:

நவ்சஞ்சார் என்ற ராஜஸ்தான் பத்திரிகையைச் சேர்ந்த சுனில் குமார் என்பவர் தாம் அணிந்திருந்த செருப்பை எடுத்து ஜனார்த்தனன் துவிவேதியைத் தாக்க வேகமாகப் பாய்ந்தார். உடனே அங்கிருந்த காங்கிரஸ் தொண்டர்கள் சுனில் குமாரை அடித்து, இழுத்துச் சென்றனர்.

இதையடுத்து டில்லி பொலிஸார் அவரை கைதுசெய்து விசாரணை நடத்தி வருகின்றனர். பின்னர் இதுதொடர்பாக காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் ஜனார்த்தனன் துவிவேதி கூறுகையில்:

திட்டமிடப்பட்டு தம் மீது நடத்தப்பட்ட சதி என தெரிவித்தார். (வ)

# பாபா ராம்தேவ் விவகாரம்; மத்திய அரசுக்கு நோட்டீஸ்

ஊழலுக்கு எதிராக உண்ணாவிரதம் நடத்திய பாபா ராம்தேவ் வலுக்கட்டாயமாக வெளியேற்றப் பட்டமை தொடர்பாக 2 வாரத்தில் பதில் அளிக்குமாறு மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

கறுப்பு பணம், லஞ்ச ஊழலை எதிர்த்து டில்லியில் உண்ணா விரதப் போராட்டம் நடத்திய பாபா ராம்தேவ் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டு ஹரித்துவார் ஆசிரமத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அவருடன் உண்ணாவிரதத்தில் பங்கேற்ற அவரது ஆதரவாளர்கள் நள்ளிரவில் குண்டுக்கட்டாக வெளியேற்றப்பட்டு டில்லிக்கு வெளியே விடப்பட்டனர்.

டில்லி அரசின் இந்த நடவடிக்கை தொடர்பாக விசாரணை செய்ய உச்ச நீதிமன்றம் தானாகவே முன்வந்து நேற்று முன்தினம் விசாரணை மேற்கொண்டது. அதன் பின்னர் விடுமுறை கால நீதிபதிகள் பி.எஸ்.சவுகான், சுவே டெண்டர் குமார் ஆகியோர் மத்திய உள்துறை அமைச்சகம், டில்லி தலைமை செயலாளர், பொலிஸ் ஆணையாளர் ஆகியோருக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டனர்.

பாபா ராம்தேவும், அவரது ஆதரவாளர்களும் நள்ளிரவில் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டமை தொடர்பாக 2 வாரத்துக்குள் பதில் அளிக்க வேண்டும் என்று அந்த நோட்டீசில் கூறப்பட்டுள்ளது. வழக்கு விசாரணையை அடுத்த வாரத்துக்கு ஒத்தி வைத்ததுள்ளனர். (வ)

# நீதிமன்றத்தில் அழகிரி ஆஜர்

மதுரை, ஜூன் 8

கடந்த ஏப்ரல் மாதம் தேர் தல் பிரசாரத்தின் போது மேலூர் ஆலயத்தில் ஏற்பட்ட தகராறில் மத்திய மதுரை மாவட்டம் மேலூர் தாசில்தார் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக மத்திய அமைச்சர் மு.க.அழகிரி நேற்று மேலூர் நீதிமன்றத்தில் ஆஜரா னார்.

சட்டப் பேரவைத் தேர்தலை முன்னிட்டு அழகிரி, மதுரை மாநகராட்சி துணை மேயர் பி.எம்.மன்னன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகளுடன் கடந்த முதலாம் திகதி மேலூர் அம்ப லக்காரன் பட்டியில் உள்ள ஸ்ரீ வல்லடிக்காரர் ஆலயத்துக்குச் சென்றார். அப்போது தாசில்தார் காளிமுத்துவுடன் வந்த தேர் தல் ஒளிப்படப் பிடிப்பாளரான கண்ணன் படம் எடுக்க முயன்றார்.

இதை தி.மு.கவினர் தடுத்த தோடு, ஒளிப்படப்பிடிப்பா ளரிடம் இருந்து கமராவைப் பறிக்க முயன்றதாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து தாசில்தார் கொடுத்த முறைப்பாட்டின் பேரில் மு.க.அழகிரி, துணை மேயர் பி.எம்.மன்னன், மேலூர் ஒன்றிய செயலாளர் ரகுபதி, ஒத்தப்பட்டி திருஞானம் ஆகி யோர் மீது கீழவளவு பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

எனவே இந்த வழக்குத் தொடர்பாக அழகிரி நேற்று நீதிமன்றத்தில் ஆஜரா னார்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## பொன்னுத்துரை சுப்பிரமணியம்

தோற்றம்: 17.07.1950 மறைவு: 20.05.2010

திதி: 08.06.2011

வாழ்க்கையில் நாம் உயர
நல்ல ஏணியாய் நீர் இருந்தீர்
நாம் உயர்ந்தவேளை
ஏன் மறைந்தீர் எம் தெய்வமே!
ஆண்டொன்று சென்றாலும்
ஆறாது எம் மனம்
மீண்டும் நீர் வர வேண்டும்
அதுவரை நாம் வழிமேல்
விழி வைத்துக் காத்திருப்போம்
எம் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய். (1741)

மனைவி – விசாலாட்சி
மற்றும் பிள்ளைகள்

# தி.மு.க.-காங்கிரஸ் உறவில் மாற்றமில்லை

குலாம் நபி ஆசாத்



திமுக.வுடனான உறவில் மாற்றமில்லை என்று மத்திய சுகாதார அமைச்சர் குலாம் நபி ஆசாத் தெரிவித்தார்.

டில்லியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர்களுடனான கலந்துரையாடல் கூட்டத்தில் பங்கேற்ற அவர் மேலும் கூறியதாவது:

2 ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு முறைகேடு வழக்கு விசர்ரணை விவகாரத்தால் தி.மு.க-காங்கிரஸ் இடையேயான உறவில் எந்தவித மாற்றமும் இல்லை. எமது உறவில் விரிசல் இல்லை. கருணாநிதி எம்முடன் இணைந்துதான் உள்ளார்.

சட்டப்பேரவைத் தேர்தலுக்கு முன், காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசுக்கு ஆதரவளிப்பது தொடர்பாக ஜெயலலிதா கருத்து தெரிவித்தது குறித்து கேட்கிறீர்கள். இது தொடர்பாக அ.தி.மு.க. தனது விருப்பத்தைத் தெரிவித்திருந்தது. ஆனால் அதை நாம் ஏற்கவில்லை. ஏனென்றால் சந்தர்ப்பவாதக் கூட்டணியை காங்கிரஸ் கட்சி விரும்பவில்லை. ஒரு கட்சி தோல்வியுற்றதால், வெற்றிபெற்ற மற்றொரு கட்சியின் பின்னால் செல்ல முடியாது என்றார்.

கருணாநிதியின் துயரில் பங்கேற்கிறோம். மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழியின் கைது நடவடிக்கையால், தந்தை என்ற முறையில் கருணாநிதியின் மனது எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கும் என்று புரிகிறது. அவர் மிகுந்த மன வேதனையில் இருக்கிறார். இந்த விடயத்தில் அவரது வருத்தத்தைப் பகிர்ந்து கொள்ள மட்டுமே முடியும்.

உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டுதல் படி, சி.பி.ஐ. இந்த வழக்கு விசாரணையை நடத்தி வருவதால் எங்களால் வேறொன்றும் செய்ய இயலாத நிலையில் உள்ளோம். இதில் மத்திய அரசுக்கு எந்தவித பங்கும் இல்லை. கொமன்வெல்த் போட்டி முறைகேடு தொடர்பான வழக்கில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சுரேஷ் கல்மாடியும் சிறையில் தான் உள்ளார் என்று கூறினார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்புக் கூறல் தொடர்பான ராஜபக்ஷ - பான் கீ மூன் கூட்டு உறுதிப்பாட்டை நல்லிணக்க குழு உறுதி செய்யாது

## சர்வதேச தரங்கள் இல்லாமையும் நடைமுறை குறைபாடுகள் உள்ளமையுமே காரணம்

நல்லிணக்க ஆணைக்குழு நடைமுறையில் ஆழமான குறைபாட்டை கொண்டுள்ளது. சுயாதீனம் மற்றும் பக்கசார்பற்றதன்மை, பாதிக்கப்பட்டவர்களை நடத்தும் விதம் வெளிப்படை தன்மை ஆகியவற்றில் அது சர்வதேசத் தரங்களை நிறைவு செய்யாமையால் பொறுப்புக்கூறும் செயற்பாடு தொடர்பான இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூன் ஆகிய இருவரும் செய்துகொண்ட கூட்டு உறுதிப்பாட்டை அதனால் நிறைவேற்ற முடியாது.

இவ்வாறு ஐ.நா. நிபுணர் குழு தன் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

*(நேற்றைய தொடர்ச்சி)*

இந்த விடயம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்குக் கைமாற்றப்படும் என அது உறுதிப்படுத்தியுள்ளது. இந்தக் சாத்தியத்தன்மையை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும் என்றிருந்த போதிலும், காணாமற்போனவர்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை முன்னெடுத்துச் செல்வதற்குப் புதிதாக மீளமைக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு திறன் உண்டா என்பதில் குழுவுக்கு ஆழ்ந்த ஐயப்பாடு உண்டு. தாம் 'சமூ கத்துக்குச் சேவை செய்வதற்காக சுயாதீனமாகச் செயற்படவேண்டும்' என ஆணைக்குழுவின் தலைவர் கூறியிருப்பதற்கு ஏற்ப அவர்களும் அதனை ஏற்றுக் கொண்டு, 'இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதன்மீது (ஆளுமை) செலுத்தும் சட்டத்துக்கான திருத்தம் இன்றி பயனுறுவிதத்தில் செயற்பட முடியாது என்பதால் அவர்கள் இது பற்றி அரசுக்குப் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பிப்பதற்கு ஏகமனதாக இணங்கியுள்ளனர்' என்பதையும் குழு கவனத்துக்கு எடுத்துள்ளது.

390. தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மூலச் சட்டம், தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் நலனைக் கண்காணித்து, தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்களைப் பரிசோதனைசெய்வதற்கான அதிகாரத்தை அதற்கு வழங்குகிறது. உண்மையிலேயே, தடுத்து வைத்தல் மற்றும் தடுத்துவைத்துள்ள இடம் பற்றி 48 மணித்தியாலங்களுக்குள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்க வேண்டும் என்பதையும் அதிகாரி ஒருவர் வேண்டுமென்றே அப்படி அறிவிக்கத் தவறும் பட்சத்தில் அதனைக் குற்றமாகக் காண்பதையும், அத்தகைய தடுத்துவைக்கப்பட்டுள்ள இடங்களுக்குள் புகுந்து அவற்றைப் பரிசோதனை செய்வதையும் அந்தச் சட்டம் தேவைப்படுத்துகிறது. யுத்தத்தின் இறுதிக் கட்டங்களைத் தொடர்ந்து தடுத்துவைக்கபட்டவர் எவரைப்பற்றியும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டதா என்பது தெளிவற்றதாக உள்ளது. இது தொடர்பாகப் புதிய ஆணைக்குழு அதன் ஆணையை உறுதியாகச் செயற்படுத்தவேண்டும். இப்படி அறிவிக்க வேண்டிய தேவை கிரமமாகப் புறக்கணிக்கப்பட்ட நிலையில் அப்படிச் செய்வது விசேடமாக முக்கியமானதோர் அரசியல் மனவுறுதியின் சமிக்ஞையாக இருக்கும். தடுத்து வைத்தல் பற்றி ஆணைக்குழுவுக்கு அறிவிக்கத் தவறியமைக்காக எச்சந்தர்ப்பத்திலும் எவரும் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதா என்பது பற்றி குழு அறியவில்லை.

### (ஊ) மரணத்தை உறுதிப்படுத்தும் செயற்பாடு

391. இலங்கையில் நடந்தேறிய யுத்தத்தின் இறுதி மாதங்களைத் தொடர்ந்து மற்றும் அதற்குப் பின்னரும் அவர்கள் உறவுகளுக்கு என்ன நேர்ந்தது என்பது பற்றிப் பலர் அறியாதிருப்பதோடு, அப்படி நிச்சயமற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வாரிசு, காணி உரிமைகள் மற்றும் மறுமணம் போன்றவற்றை உள்ளிட்ட பாதிக்கப்பட்டோரின் சொந்தக்காரர்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளை மரண உறுதிப்படுத்தல் இன்றித் தீர்ப்பது மிகக் கஷ்டமான காரியமாகும். யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் மரணமடைந்த அல்லது காணாமற்போன சாத்தியக்கூறைக் கொண்டதொரு சந்தர்ப்பத்தைச் சமாளிப்பதில் 1954 ஆம் ஆண்டின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவுச் சட்டம் போதியதாக இல்லை.

**ஐ.நா. செயலாளரிடம் நிபுணர் குழு வழங்கிய அறிக்கை**
**பகுதி - 35**

392. 2010 டிசெம்பர் மாதம், 2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க மரணப் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம், மரண அத்தாட்சிப் பத்திரங்களின் விநியோகத்தை எளிதாக்குவதற்காக இயற்றப்பட்டது. 'பயங்கரவாத அல்லது நாசகார அல்லது சிவில் கொந்தளிப்பு விளைவாகக் காணாமற்போனதாக அறிவிக்கப்படும் இறந்தவர்களின் பதிவுக்கான ஏற்பாட்டை ஏனையவற்றுக்குப் புறம்பாக இந்தச் சட்டம் வழங்குகிறது. எது எவ்வாறிருப்பினும், கடந்த மூன்று வருடங்களாக அமுலில் இருக்கும் இந்தச் சட்டம், அத்தகைய சம்பவங்களுக்குக் காரணம் காட்டக்கூடியவாறாக ஒருவர் காணாமற் போனதாக அறிவிக்கப்பட்டு குறைந்தபட்சம் ஒரு வருடத்துக்கு அவரைப் பற்றிய எதுவித தகவலும் இல்லாத நிலையில் பதிவாளர் நாயகம் அல்லது சம்பந்தப்பட்ட மாவட்ட பிறப்பு மற்றும் மரணப் பதிவாளருக்கு மரண அத்தாட்சிப் பத்திரம் ஒன்றை வழங்குவதற்கு அனுமதி அளிக்கிறது.

393. 'சிவில் கொந்தளிப்பு' என்ற சட்டத்தின் கருத்து யுத்தத்தின் கடைசிக் கட்டங்களையும் உள்ளடக்குகிறதா அல்லது அரசின் கையில் இருக்கும்போது காணாமற்போயிருக்கக் கூடியவர்களையும் அது உள்ளடக்குகிறதா என்பது தெளிவற்றதாகவுள்ளது. அது அவ்வாறே எனக் குழு கருதுகிறது என்பதோடு, அப்படி உள்ளடக்காது என்பதான விளக்கம் தெளிவாகவே ஏற்றுக்கொள்ள முடியாததொன்றாகும். பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இந்தப் புதிய பொறியமைப்பை அரசு எவ்வளவு தூரம் பகிரங்கப்படுத்தியுள்ளது. மற்றும் செயல் முறையில் அதன் பிரயோகம் பற்றியும் குழுவுக்குத் தெளிவற்றதாகவே உள்ளது.

394. வடக்கிலும் கிழக்கிலும் எல்.எல்.ஆர்.சி. முன்னிலையில் சாட்சியம் அளிக்க முன்வந்த பாதிக்கப்பட்ட கணிசமான எண்ணிக்கையினர், அவர்கள் சொந்தங்கள் காணாமற்போனதாக கூறினர். ஆயினும், குழுவுக்கான அதன் எழுத்து மூலமான அறிக்கையில் அரசு 'எல்.எல்.ஆர்.சியின் அறிக்கையும் பரிந்துரைகளும் வெளியாகும் வரை, இத் தருணத்தில், (2010 சட்டத்தின்) ஏற்பாடுகளைச் செயற்படுத்தும் நிலையில் தாம் இல்லை' எனக் குறிப்பிட்டுள்ளது. எல்.எல்.ஆர்.சி. இன் அறிக்கை பகிரங்கப்படுத்தப்படுமா என்ற உத்தரவாதம் கூட இல்லாத நிலையில் எல்.எல்.ஆர்.சி. அதன் அமர்வுகளை முடித்துக்கொள்ளும் வரை மரண அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற உரிமையுள்ளவர்கள் காத்து நிற்கவேண்டியது தேவையற்றதும் பொருத்த மற்றதும் என்பது குழுவின் கருத்தாகும்.

395. உறவினர் ஒருவரின் வேண்டுகோளுக்கேற்ப மரண அத்தாட்சிப் பத்திரத்தைத் துரிதமாக விநியோகிப்பதன் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொள்ளும் அதேவேளையில், ஏனைய நாடுகளின் அனுபவத்தை இங்கு வலியுறுத்தி, மரண அத்தாட்சிப் பத்திரம் ஒன்றை வழங்குவது மரணத்தைச் சூழவுள்ள சந்தர்ப்பங்களைத் திரித்துக் கூறவோ அல்லது மறைக்கவோ உபயோகப்படுத்தலாகாது என்பதைக் குழு வலியுறுத்துகிறது. நிர்வாகச் செயற்பாடொன்றைத் தொடர்ந்து மரண அத்தாட்சிப் பத்திரம் ஒன்றை வழங்குவது சர்வதேச தரங்களை நிறைவு செய்யும் விதத்தில் ஒருவரின் மரணம் பற்றிய சந்தர்ப்ப சூழ்நிலைகளை உண்மையான முறையில் புலனாய்வு செய்வதற்குப் பரிகாரமாகாது. சொந்தக்காரர் ஒருவர் மரண அத்தாட்சிப் பத்திரமொன்றைப் பெற்றுள்ளார் என்பது எதிர்காலத்தில் மேலும் சட்ட நடவடிக்கை எடுப்பதைத் தடுப்பதான சட்ட ரீதியிலான தடையாக அமையக் கூடாது என்பதும் முக்கியமாகும்.

### எ. தீர்மானங்கள்

396. சர்வதேசச் சட்டங்கள் மற்றும் அதன் உள்நாட்டுச் சட்டங்கள், இந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டவை உள்ளிட்ட சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டத்தின் மீறல்கள் பற்றிய நம்பகமான குற்றச்சாட்டுக்களைப் புலனாய்வு செய்து தேவையானவிடத்து சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு இலங்கையைத் தேவைப்படுத்துகின்றன. இராணுவ ரீதியாகக் கிளர்ச்சியொன்று தோற்கடிக்கப்பட்ட வேறு சந்தர்ப்பங்கள் உள்ளிட்ட ஏனைய நாடுகளின் அனுபவம், இலங்கை போன்ற சூழ்நிலைப் பொருத்தத்தில் உண்மை, நீதி மற்றும் இழப்பீடு தொடர்பாகப் பொறுப்புக் கூறலை அடைவதற்காக எவ்வாறு இடைக்கால நீதிப் பொறித்தொகுதிகள் வடிவமைக்கப்படலாம் என்பதற்கான முக்கியமான ஒப்பீட்டளவிலான வழிகாட்டல்களை வழங்குகின்றன.

397. நீதியை மீண்டும் நிலை நாட்டும் அதன் மனவுருவை இலங்கை அரசு மேம்படுத்தியுள்ளது. தன் பிரஜைகளை 'பயங்கரவாதத்தில்' இருந்து காப்பாற்றத் தவறியமைக்காகக் கடந்த கால அரசுகளின் அரசியல் பொறுப்பினை ஆராய்வதற்கும் உயிரோடிருக்கும் சில தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்குப் புனர்வாழ்வளிப்பது மூலம் அல்லது சிறியதோர் எண்ணிக் கையிலான விடயங்கள் தொடர்பாகக் குற்றப் புலனாய்வு மூலம் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் எல்.எல். ஆர்.சியினை அது பிரயோகிக்கிறது என்பதோடு, அவ்மனவுருவின் பிரதி பலன் தீர்க்கமற்றதாக இருப்பதோடு, பொறுப்புக் கூறல் விடயத்தை அணுகுவதற்கான அரைவாசி நடவடிக்கையாகவும் அமைந்துள்ளது. இந்த அறிக்கை யில் விவரிக்கப்பட்டுள்ள, அவை நிரூபிக்கப்பட்டால், சர்வதேச சட்டத்தின் பெரிய மீறல்களாக அமையக்கூடிய, நம்பகமான குற்றச்சாட்டுக்கள் அல்லது வேறு செயற்பாடுகள் தொடர்பாக இலங்கை அரசின் நடவடிக்கைகளைப் பரிசோதிப்பதற்காக எதுவும் இதில் கருதப்படவில்லை. அதிக எண்ணிக்கையிலான பொது மக்கள் மரணத்துக்குப் பங்களிப்பைச் செய்திருக்கக் கூடிய அரசின் கொள்கைத் தீர்மானங்கள் அல்லது நிருவாக செயற்பாடுகள் பற்றிய உண்மையான தொரு புலனாய்வு அல்லது யுத்தத்தின் பின்னணிக்கான காரண காரியங்கள் பற்றியதோர் ஆழமான பரிசீலனையையும் இந்த மாதிரி அமைப்பில் ஆலோசிக்கப்படவில்லை.

398. யுத்தத்தின் இறுதிக்கட்டங்களின் போது புரியப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்ட மீறல்கள் தொடர்பாக மற்றும் நியாயமான பொறுப்புக்கூறலை வழங்குவதற்காக இலங்கையின் உள்நாட்டு பொறித்தொகுதிகள் இதுகாலவரை பயனுறு விதத்தில் செயற்படவில்லை. குறிப்பாக:

(அ) எல்.எல்.ஆர்.சி. கொள்கையளவிலும் அதன் நடைமுறையிலும் ஆழமான குறைபாட்டைக் கொண்டதாகவுள்ளது. அது உறுதியற்ற பொறுப்புக்கூறல் கருத்தின் மேல் உருவாக்கப்பட்டிருப்பதால் அதன் கொள்கை குறைபாடுள்ளதாகவுள்ளது. சுயாதீனம் மற்றும் பக்கச்சார்பற்ற தன்மை, பாதிக்கப்பட்டவர்களை நடத்தும் விதம், சாட்சிகளுக்கான பாதுகாப்பு அல்லது ஒளிவு மறைவற்ற தன்மை ஆகியவற்றுக்கான சர்வதேச தரங்களை அது நிறைவு செய்யாததால் அது நடைமுறையிலும் குறைபாடுள்ளதாகவே உள்ளது. மொத்தமாக, பயனுறு பொறுப்புக் கூறல் பொறித்தொகுதி யொன்றுக்கான சர்வதேச தரங்களை அது நிறைவு செய்யவில்லை என்பதால் பொறுப்புக் கூறல் செயற்பாடு பற்றிய இலங்கை ஜனாதிபதி மற்றும் செயலாளர் நாயகத்தின் கூட்டு உறுதிப்பாட்டை அது நிறைவு செய்யாது. மற்றும் அதனால் நிறைவு செய்ய முடியாமலுமிருக்கிறது.

### (ஆ) உரிமைகள் மீறல்கள்

குறிப்பாக அரச ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டவை தொடர்பாக நேர்மையான, உடனடி மற்றும் பக்கச்சார்பற்ற நீதியை வழங்குவதற்கான அதன் திறனை இலங்கையின் குற்றவியல் நீதித்திட்டம் அண்மை ஆண்டுகளில் வெகுவாக இழந்துள்ளது. அத்தகைய புலனாய்வுகள் மற்றும் வழக்குத் தொடர்வதை மேற்கொள்வதற்கான அரசியல் மனவுறுதி தெளிவாகவே இல்லாது காணப்படுவதோடு, தலைமை வழக்கறிஞராகிய சட்ட மா அதிபரின் சுயாதீனத்தன்மை குறைக்கப்பட்டுள்ளது. பரந்த அவசரகால ஏற்பாடுகள் மற்றும் பாதிக்கப்பட்டவர் சார்பில் தோன்றுவதற்கு நீதித்துறையும் வழக்காடல் அதிகாரிகளும் காட்டும் தயக்கமும் தண்டனை விலக்களிப்புக் கலாசாரமொன்றைத் தோற்றுவித்துள்ளது. இன்று வரை யுத்தத்தின் இறுதிக்கட்டங்கள் தொடர்பான பொறுப்புக் கூறலை குற்றவியல் நீதித்திட்டம் வழங்கவில்லை.

(இ) சட்டத்தின் கீழ், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு, தடுத்து வைக்கப்பட்டவர்கள் தொடர்பானவை உள்ளிட்ட முக்கியமான புலனாய்வு அதிகாரங்கள் உண்டு. பாரிஸ் கோட்பாடுகளுக்கு இணங்கி ஒழு காமை தொடர்பில் முன்னர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அந்தஸ்து குறைக்கப்பட்டதை மற்றும் அதன் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான திறன்களை நோக்குமிடத்து, குறிப்பாகக்காணாமற்போனவர்கள் தொடர்பாகப் பொறுப்புக்கூறலை முன்னெடுத்துச் செல்வதற்கான அண்மையில் மீளமைக் கப்பட்ட ஆணைக்குழுவின்திறன் பற்றி குழுவுக்குப் பெரிய சந்தேகம் உள்ளது. அதன் சுயாதீனத்தையும் செயற்றிறனையும் எடுத்துக்காட்டுவதற்காக அது துரிதமாகச் செயற்படவேண்டியுள்ளது.

(ஈ) தமது குடும்பங்களின் வாழ்வினை மீளக்கட்டியெழுப்ப முயற்சித்துக் கொண்டிருக்கும் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களின் பெரிய மனிதாபிமானத் தேவைகளை மரண அத்தாட்சிப் பத்திரங்கள் நிறைவேற்றலாம் என்ற போதிலும், யுத்தத்தின் பின்னர் மரண அத்தாட்சிப்பத்திரங்களை வழங்குவது மெதுவாகவும் சிக்கல் நிறைந்ததாகவும் காணப்படுகிறது. அத்தகைய அத்தாட்சிப் பத்திரங்களைப் பெறும் நடைமுறையை சுலபமாக்கு வதற்காக அண்மையில் சட்டம் இயற்றப்பட்ட போதிலும், பிரச்சினைகள் தொடர்ந்தும் இருக்கவே செய்கின்றன.

*(வளரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் சலே நாடு திரும்புவாரா? பீதியில் ஏமன் மக்கள்

சனா, ஜூன் 08

சவுதி அரேபியத் தலைநகர் ரியாத்துக்குச் சிகிச்சைக்காகச் சென்ற ஏமன் அதிபர் அலி அப்துல்லா சலேயின் சிகிச்சை நிறைவடைந்தது. இதையடுத்து, அதிபரின் வெளியேற்றத்தை மகிழ்ச்சியுடன் கொண்டாடிய மக்கள் மத்தியில், சலே மீண்டும் திரும்பி வந்து விடுவாரோ என்ற அச்சமும் பீதியும் நிலவுகின்றன.

கடந்த 3 ஆம் திகதி, தலைநகர் சனாவில் உள்ள அதிபர் மாளிகை வளாகத்தினுள் அல் நஹ்டியான் மசூதியில், அதிபர் உள்ளிட்ட மூத்த அதிகாரிகள் பலர் தொழுகையில் ஈடுபட்டிருந்தபோது, குண்டு வீசப்பட்டது.

இதில், குண்டுகளின் சிதறல்கள், அதிபரின் இதயப் பகுதிக்குக் கீழே புகுந்தன. அவரது கழுத்து மற்றும் தலையிலும் காயங்கள் ஏற்பட்டன.


இதையடுத்து, கடந்த 4ஆம் திகதி இரவில், சவுதி அரேபியத் தலைநகர் ரியாத்துக்குச் சிகிச்சைக்காக சலே கொண்டு செல்லப்பட்டார். அவரது மனைவி உள்ளிட்ட 35 உறவினர்களும் உடன் சென்றனர். அங்கு 65 நாள்கள் நடந்த இரு அறுவை சிகிச்சைகள் வெற்றிகரமாக முடிந்தன.

ரியாத்தில், சலேவுக்கு இரு அறுவை சிகிச்சைகள் நடந்தன. முதல் சிகிச்சையில், இதயத்திற்குக் கீழ்ப்பகுதியில் புகுந்த குண்டுகளின் சிதறல்கள் நீக்கப்பட்டன. இரண்டாவதாக, கழுத்துப் பகுதியில் நரம்பியல் அறுவை சிகிச்சை நடந்தது.

தற்போது அவர் நலமுடன் இருப்பதாகவும், முதல் வாரம் ஓய்வெடுப்பார் என்றும் அடுத்த வாரம் முழுவதும், முக்கிய அதிகாரிகளைச் சந்தித்துப் பேசுவார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தநிலையில் மீண்டும் வருவாரா? இந்த ஓய்வுக்குப் பின் அவர் நாடு திரும்புவாரா, மாட்டாரா என்பது குறித்துப் பல்வேறு குழப்பங்கள் நிலவுகின்றன.


ஏமன் தகவல் தொடர்புத் துறைத் துணை அமைச்சர் அப்து அல் ஜனாடி நேற்றுமுன்தினம் அளித்த பேட்டியில், ''சலே நலமுடன் உள்ளார். அவர் தனது அதிகாரத்தை சட்டப்படி ஒரு



நாளில் ஒப்படைப்பார். அதற்காக விரைவில் நாடு திரும்புவார்'' என்று கூறினார்.

தற்போது அதிபர் பொறுப்பை வகிக்கும் துணை அதிபர் மன்சூர் ஹாடி, ராணுவம் மற்றும் பாதுகாப்புப் பொறுப்பை ஏற்றிருந்தாலும் அவற்றில் சிறிதளவு அதிகாரம் மட்டுமே உடையவராக உள்ளார். பாதுகாப்புப் பிரிவின் முக்கியப் பொறுப்புகளில் அதிபரின் மகன் அகமது உள்ளிட்ட உறவினர்கள் பலர் இருப்பதால், ஹாடியால் முக்கிய முடிவுகள் எதையும் எடுக்க முடியாது. இதனால் ஏமனில் அடுத்து என்ன நடக்கும் என்று பல கேள்விகளும் சந்தேகங்களும் எழுந்துள்ளன.

சந்திப்பு....



கியூபா வந்திருந்த சீனாவின் துணை அதிபர் ஜி-ஜிங்பிங்கை (இடது) அந்த நாட்டு அதிபர் ராவூல்காஸ்ட்ரோ, தலைநகர் ஹாவானா நகரில் உள்ள அதிபர் மாளிகையில் வரவேற்றார்.

## ரஷ்ய மொழித் தினமாக ஜூன் 6

மாஸ்கோ, ஜூன் 08

ஆண்டுதோறும் ஜூன் 6 ஆம் திகதியை ரஷ்யமொழித் தினமாக அறிவித்துள்ள அந்த நாட்டு அதிபர் டிமெட்ரிமித்வ தேவ், அது தொடர்பாக புதிய சட்டம் ஒன்றைக் கொண்டு வந்துள்ளார்.

நவீன ரஷ்யாவின் மிகச் சிறந்த இலக்கியவாதியாகத் திகழ்ந்த அலெக்ஸாண்டர் புஷ் ஹினின் பிறந்தநாள் ஆண்டுதோறும் ஜூன் மாதம் 6ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. இதையொட்டி அவரது பிறந்த நாளான நேற்று முன்தினம், ரஷ்யாவின் மொழி ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யமொழி வளர்ச்சிக்கும் ரஷ்ய கூட்டமைப்பின் கலாசாரத்துக்கும் சர்வதேச தொடர்புகளில் ரஷ்ய மொழியினை புகழடையச் செய்வதற்கும், இந்தச் சட்டத்தை இயற்றி அதற்கான ஒப்புதல் அளித்து கையெழுத்திட்டதாகச் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவிக்கிறது.

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
13
01
1977



மறைவு
30
05
2009

திருமதி சுதர்சினி குகனேஸ்வரன்
(பிரதேச செயலகம், மருதங்கேணி)

இரண்டு ஆண்டுகள் ஓடி விட்டன - ஆனால்
எம் ஈர விழிகள் என்றும் காயவில்லையம்மா
மறுபிறப்பு எடுத்திடம்மா மறுபடியும் வந்திடம்மா எம்மிடம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

பருத்தித்துறை. (1723) குடும்பத்தினர்.

## பங்களாதேஷில் முழு அடைப்புப் போராட்டம்; பொலிஸ் தடியடியில் 30 பேர் காயம்

டாக்கா, ஜூன் 08

பங்களாதேஷில் எதிர்க்கட்சிகள் ஞாயிற்றுக்கிழமை நடத்திய முழு அடைப்பு போராட்டத்தில் வன்முறை வெடித்தது. 3 இடங்களில் சக்தி குறைந்த குண்டுகள் வெடித்தன. பொலிஸ் தடியடியில் 30 பேர் காயமடைந்தனர்.

ஆளும் அவாமி லீக் கட்சியைச் சேர்ந்த பிரதமர் ஷேக் ஹசீனா, பொதுத் தேர்தலை நடத்த இடைக்கால அரசு நியமிக்கப்படும் நடைமுறையை இரத்து செய்துவிட்டு, வலுவான தேர்தல் ஆணைக்குழு அமைக்கப்படும் என்று கடந்தவாரம் அறிவித்தார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதான எதிர்க் கட்சியான பங்களாதேஷ் தேசியகட்சி ஞாயிற்றுக்கிழமை முழு அடைப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தது. ஜமாத்-இ-இஸ்லாமி உள்ளிட்ட கட்சிகளும் முழு அடைப்புக்கு ஆதரவு தெரிவித்தன.

இதனால், நாடு முழுவதும் மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டது.

டாக்காவிலுள்ள பங்களாதேஷ் தேசியகட்சி அலுவலகம் அருகே இரண்டு குண்டுகள் வெடித்தன. இதில் பொலிஸ் சப்-இன்ஸ் பெக்டர் ஒருவர் காயமடைந்தார்.

மிர்பூர் அருகே வெடித்த மற்றொரு குண்டில் துவிச்சக்கரவண்டிச் சாரதி காயமடைந்தார்.

நகரின் சில இடங்களில் பொலிஸாருக்கும், ஆர்ப்பாட்டக்காரர்களுக்குமிடையே மோதல் ஏற்பட்டது.

சனிக்கிழமை நள்ளிரவு முதல் 12 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன. இது தொடர்பாக 40 இற்கும் மேற்பட்டோரை பொலிஸார் கைது செய்தனர்.

டாக்கா உள்ளிட்ட முக்கிய நகரங்களில் கடைகள், வர்த்தக நிறுவனங்கள் ஆகியவை அடைக்கப்பட்டிருந்தன. சாலைகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. நாட்டின் பல்வேறு பகுதிகளில் வன்முறை ஏற்பட்டது. கூட்டத்தைக் கலைக்க பொலிஸார் தடியடி நடத்தியதில் 30இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி பொதுத் தேர்தலை நடத்த தேர்தல் ஆணையம் நியமிக்கப்படும் என்று பிரதமர் ஷேக் ஹசீனா அறிவித்துள்ளார். இதற்கு எதிர்க் கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

புதிதாக நியமிக்கப்படும் தேர்தல் ஆணையம், அரசின் கைப்பாவையாக மட்டுமே செயல்படும் என்று பிஎன்பி உள்ளிட்ட கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன. அரசு தனது முடிவை வாபஸ் பெறாவிட்டால், அடுத்ததாக ஒத்துழையாமை இயக்கம் நடத்தப்படும் என்று பிஎன்பி கட்சித் தலைவி பேகம் காலிதா ஜியா எச்சரிக்கை விடுத்துள்ளார். (எ)

கொவிசெத
உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்
810
சீட்டிழுப்பு திகதி
06.06.2011

எழுத்து
X

வெற்றி இலக்கங்கள்
04 08 48 52

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 10,000,000.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 13 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 330 |
| 4ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 660 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100/= | 15963 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 9071 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 228951 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 35863 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,835,420.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 10,539,216.80

வெற்றிப் பெறும் சீட்டுகள் 6மாதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவுதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர [illegible] 2473360
இணையதளம்: www.nlb.lk

## பெரு அதிபர் தேர்தலில் கம்யூனிஸ்ட் வெற்றி

லிமா, ஜூன் 08

பெரு நாட்டின் அதிபர் தேர்தலில் ஒலன்டோ ஹு மாலா வெற்றி பெற்றுள்ளார். 48 வயதான ஒலன்டோ, ராணுவத்தில் பணியாற்றியவர். மனித உரிமைக்கெதிரான போராட்டங்கள் மூலம் மக்களின் ஆதரவைப் பெற்றவர்.

இதனால் முன்னாள் அதிபர் ஆல்பர்டோ பியூஜிமோரியின் மகளை விட கணிசமான வாக்குகள் கூடுதலாகப் பெற்று வெற்றி வெற்றுள்ளார்.

ராணுவத்தில் லெப்டினன்ட் பதவியில் இருந்த ஒலன்டோவுக்கு ஆதரவாக 51.5 சதவீத வாக்குகள் பதிவாயின. இவரை எதிர்த்துப் போட்டியிட்ட கெய்கோ பியூஜி மோரிக்கு 48.5 சதவீத வாக்குகள் பதிவாயின. அதிகார பூர்வமற்ற தேர்தல் முடிவுகள் ஞாயிற்றுக்கிழமை வெளியாயின. மொத்தம் 87 சதவீத வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் ஒலன்டோ ஹுமான 51.2 சதவீத வாக்குகள் பெற்று முன்னணியில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. கிராமப் பகுதிகளில் இவருக்கு அதிக வாக்குகள் கிடைத்துள்ளன.

நாட்டின் பொருளாதார நிலையை மேம்படுத்த பாடுபடப் போவதாக ஆதரவாளர்கள் மத்தியில் பேசுகையில் ஹுமாலா குறிப்பிட்டார்.

மேலும் நாட்டிலுள்ள சுரங்கங்கள் மூலம் அதிக லாபம் ஈட்டும் நடவடிக்கையை மேற்கொள்ளப் போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற வடமாகாண விளையாட்டுத் திணைக்கள ஏற்பாட்டிலான வட மாகாண மாவட்ட அணிகளுக்கு இடையிலான பெண்களுக்கான எல்லே போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்ற முல்லைத்தீவு மாவட்ட அணியினர் கல்விப் பணிப்பாளர் மற்றும் பயிற்றுநருடன்.

# இராமலிங்க வித்தி, அருணாசலம் வித்தி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தன

யாழ்ப்பாணம்,ஜூன்8

டி.எஸ்.ஐ நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 14 வயது பிரிவு ஆண், பெண்களுக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம், அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் ஆகியவை சம்பியன்களாகின.

கடந்த வாரம் ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதி ஆட்டத்தில் ஆவரங்கால் இராமலிங்க வித்தியாலய அணியை எதிர்த்து சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி அணி மோதியது.

மூன்று செற்கள் கொண்ட ஆட்டத்தில் ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலய அணி 2:0 என்ற செற் கணக்கில் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி அணியை வெற்றிகொண்டது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் அளவெட்டி அருணாசலம் வித்தியாலய அணியை எதிர்த்து பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அணி மோதியது.

மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் அளவெட்டி அருணாசலம் வித்தியாலய அணி 2:0என்ற செற் கணக்கில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அணியை வெற்றி கொண்டது. (ஐ-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன் 8

கைதடி மத்தி. வளர்மதி விளையாட்டுக் கழகம், தென்மராட்சிப் பிரதேச ரீதியில் நடத்திவரும் "செற் அப்" முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகமும் கைதடி தெற்கு மின் ஒளி விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. (ஐ-23-288)

யாழ்ப்பாணம்,ஜூன் 8

யாழ் உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியும் நாவாந்துறை சென்.மேரிஸ் வி.கவும் மோதுகின்றன. (ஐ-23)

# பாடும் மீன், யூனியன் அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம்,ஜூன்8

யாழ் உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் ஆனைக் கோட்டை யூனியன், குருநகர் பாடும் மீன் ஆகிய விளையாட்டுக் கழகங்கள் வெற்றி பெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி மோதியது.

பாரதி விளையாட்டுக் கழக அணியை 6;0என்ற கோல் கணக்கில் ஆனைக் கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி வெற்றி கொண்டது.

மற்றைய ஆட்டத்தில் குருநகர் சென்றோக்ஸ் வி.கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

குருநகர் சென்றோக்ஸ் விளையாட்டுக் கழக அணியை 3;0 என்ற கோல் கணக்கில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணி வென்றது. (ஐ-23)

# மின்னொளியில் கரபந்தாட்டம்; மோகனதாஸுக்கு இலகு வெற்றி

யாழ்ப்பாணம்,ஜூன் 8

தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக "பி" அணி வெற்றி பெற்றுள்ளது.

மின் ஒளியில் இந்தப் போட்டி கைதடி மத்தி வளர்மதி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப்போட்டியில் நாவற்குழி நவ சக்தி விளையாட்டுக் கழக அணியும் மட்டுவில்மோகனதாஸ் விளையாட்டுக் கழக "பி" அணியும் மோதின.

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக "பி" அணி 2:0என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது. (ஐ-313)

# காலிறுதி ஆட்டங்கள்

நெல்லியடி,ஜூன்8

நெல்லியடி மத்திய கல்லூரியின் 90 ஆவது ஆண்டு நிறைவையொட்டி அழைக்கப்பட்ட யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் கால் இறுதியாட்டங்கள் இன்று கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

* உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி எதிர் சென்.ஜோன்ஸ் கல்லூரி
* வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி எதிர் சென்.ஹென்றீஸ் கல்லூரி
* சென்.பற்றிக்ஸ் கல்லூரி எதிர் கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி.
* மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி. (ஐ-23)



ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 756 திகதி 06-06-2011

வெற்றி எண்கள்

06 30 38 45 R (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 13,560,590/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 13,560,590/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 01 | 400,000/= | 400,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 10 | 50,000/= | 500,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 335 | 1,000/= | 335,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 572 | 1,000/= | 572,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 15099 | 60/= | 905,940/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7879 | 40/= | 315,160/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 196123 | 20/= | 3,922,460/= |
| ஆங்கில எழுத்து | 28478 | 20/= | 569,560/= |
| | | மொத்தம் ரூ. | 7,520,120/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கேகாலை | 600122859-3-23 |
| இரத்தினபுரி | 600122568-9-39 |
| கண்டி | 600122178-0-10 |
| கண்டி | 600135087-5-45 |
| அநுராதபுரம் | 600139426-2-42 |
| களுத்துறை | 600136497-7-27 |
| காலி | 600138712-8-18 |
| பதுளை | 600128363-1-11 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,920,120/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட

ரூ. 13,944,890/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2011 ஜூன் 09 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு-02
தொ.பே: 2333546/7

Enriching Your Life
DEVELOPMENT LOTTERY

# புத்தூரில் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

வடமராட்சி,ஜூன் 8

புத்தூர் கலைமதி சனசமூக நிலையமும் விளையாட்டுக் கழகமும் இணைந்து 37ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளியில் நடத்தும் 9 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரை இறுதிப் போட்டிகள் நாளை வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு கலைமதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்த ஆட்டங்களில் இளவாலை யங் ஹென்றீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை சென் சேவியர் விளையாட்டுக் கழகமும், யாழ்ப்பாணம் பாடும் மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வடமராட்சி கொற்றாவத்தை விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

கோப்பாய் பிரதேசத்துக்கென நடத்தப்பட்ட போட்டிகளின் இறுதிப் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் உரும்பிராய் அண்ணாஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உரும்பிராய் உதயசூரியன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது.

அரை இறுதிப் போட்டி களில் வெற்றி பெற்ற கழகங்கள் பங்குபற்றும் இறுதிப் போட்டி எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 7மணிக்கு இடம்பெறுவதுடன் மறுநாள் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு புதிய விளையாட்டரங்கத் திறப்பு, விருந்தினர் உரை, பரிசில் வழங்கல், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (எ-236)

நெஞ்சம் பரிதவிக்கும்
10 ஆம் ஆண்டு தனில்...

பிறப்பு 11 . 09 . 1984
இறப்பு 27 . 05 . 2001



செல்வி
இலங்கநாயகம் துஷ்யந்தி
(உயிரியல் பிரிவு மாணவி, தி/ சண்முகா இந்து மகளிர் கல்லூரி)
திதி: வளர்பிறை சப்தமி (08.06.2011)

ஆசைக் கோர் புத்திரி யென்று
அன்பாய் நாம் பெற் றெடுத்து
அன்னமிட்டு அழகு புடைவை உடுத்தி - நீர்
அசைந்து வரும் அழகு கண்டுநாம்
அகம்மிக மகிழ்ந்து இன்புற் றிருந்தோம்
அணி யணியாக அன்பர்கள் வாழ்த்த
மணக்கோலம் காணும் மகிமையை எண்ணி
சொரியும் ஆவல் கொண்டுநாம் நின்றோம்
பார்த்துப் பார்த்து கட்டியவெம் கோட்டையை
பரிவின்றித் தகர்த்தான் கொடிய காலனவன்!
ஓம் சாந்தி.

கைதடி தென்கிழக்கு,
கைதடி.

பிரிவை எண்ணித் தவிக்கும்:
அப்பா, அம்மா, அண்ணாமார்,
அண்ணிமார், மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சானியா; தரத்தில் முன்னேற்றம்



பிரெஞ் ஓபன் கிராண்ட் ஸ்லாம் ரெனிஸ் இரட்டையர் இறுதிப் போட்டியில் நுழைந்ததால் சானியா மிர்சாவின் இரட்டையர் தரநிலை 14 ஆம் இடத்துக்கு உயர்ந்துள்ளது.

மேலும் சானியா, அவரது ரஷ்ய ஜோடி வெஸ்னினா இணைக்கு உலகத் தரநிலையில் 3 ஆம் இடம் கொடுக்கப்பட்டுள்ளது. இஸ்தான்புல்லில் நடைபெறும் உலக மகளிர் சர்வதேச ரெனிஸில் சானியா, வெஸ்னினா ஜோடிக்கு 3 ஆம் இடம் வழங்கப்பட்டுள்ளது.

3606 புள்ளிகள் பெற்று 3 ஆம் இடம் வழங்கப்பட்டுள்ளதால் இஸ்தான்புல்லில் நடைபெறும் போட்டிக்கு முதல் 4 தரநிலை வீராங்கனைகள் மட்டும் பங்கேற்கும் போட்டியில் சானியா, வெஸ்னினா ஜோடி கலந்து கொள்கின்றது.

ஒற்றையர் தரவரிசையில் சானியா மிர்சா 72 ஆவது இடத்திலிருந்து 58 ஆவது இடத்திற்கு உயர்ந்துள்ளார். ஆடவர் இரட்டையரில் ரோஹன் போபண்ணாவுக்கு 10 ஆம் இடம் கிடைத்துள்ளது. லியாண்டர் பயஸ் 11 ஆவது இடத்திற்கு இறங்க, மகேஷ் பூபதி 5 ஆம் இடத்தைத் தக்கவைத்துள்ளார். (15)

# மோ பரா புதிய சாதனை

லண்டனைச் சேர்ந்த மோ பரா ஐரோப்பிய 10 ஆயிரம் மீற்றர் போட்டியில் புதிய சாதனை படைத்தார்.

அவர் வடமேற்கு பசுபிக் பிராந்தியமான ஓர்கனில் நடந்த யூஜின் வைர லீக் போட்டியில் 26 நிமிடம் 46.57 வினாடிகளில் ஓடி சம்பியனானார். அவர் பெல்ஜியத்தை சேர்ந்த முகமது மோர்ட்டின் ஐரோப்பிய சாதனையான 26 நிமிடம் 52.30 வினாடி சாதனையை முறியடித்தார்.

இந்தச் சாதனையை 1999 ஆம் ஆண்டு பெல்ஜியம் வீரர் நிகழ்த்தி இருந்தார். மோ பரா பிரிட்டிஷ் வீரர் ஜான் பிரவுன் சாதனையான 27 நிமிடம் 18.14 வினாடி சாதனையையும் மோ பரா முறியடித்தார். ஓர்கன் போட்டியில் எத்தியோப்பியாவின் இமேன் எமர்காவை முந்தி மோ பரா வெற்றியாளராக வலம் வந்தார். இமேன் 26 நிமிடம் 48.35 வினாடியில் ஓடி முடித்தார்.

மோ பராவின் முந்தைய சிறந்த நேரம் கடந்த ஆண்டில் ஓடிய 27 நிமிடம் 28.26 வினாடி ஆகும். ஓர்கன் ஓடுகளப்பாதை குறித்து மோ பரா கூறுகையில், உண்மையிலேயே இது அதிவிசேட பாதையாகும் என்று பெருமிதத்துடன் கூறினார். கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான ரசிகர்களின் உற்சாகத் துள்ளல் ஆதரவுடன் மோ பரா இந்தச் சாதனையை நிகழ்த்தினார். (15)

# பாக். அதிபரின் மகனிடம் சரணடைந்தார் அப்ரிடி

பாகிஸ்தான் அணித்தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட அப்ரிடி சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றதுடன் கட்டுப்பாட்டுச் சபையை கடுமையாக விமர்சனம் செய்தார்.

இதையடுத்து அவர் வெளிநாடு மற்றும் உள்ளூர் அணிகளில் விளையாடுவதற்கு கிரிக்கெட் சபை சார்பில் வழங்கப்பட்ட தடையில்லா சான்று ரத்து செய்யப்பட்டது. மேலும் 3 பேர் கொண்ட ஒழுங்கு நடவடிக்கை குழு 8 ஆந் திகதி விசாரணை நடத்தும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த சூழ்நிலையில் அதிபர் ஆசிப் அலி சர்தாரியின் மகன் பிலாவாலை அப்ரிடி லண்டனில் சென்று சந்தித்தார். மேலும் எதிர்க்கட்சித் தலைவர் நவாஸ் செரீப் ஆதரவையும் கேட்டார்.

அதன்பின் அவர் நேற்று முன்தினம் இரவு நாடு திரும்பினார். இதையறிந்ததும் ஆயிரக்கணக்கான ரசிகர்கள் விமான நிலையம் சென்று வரவேற்றனர். அவரை காரில் அழைத்து ஊர்வலமாக வந்தனர். அனைத்து அரசியல் கட்சிகளும், பொதுமக்களும் அப்ரிடிக்கு ஆதரவாக இருப்பதால் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்திற்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது. இது விசாரணையை பாதிக்கும் என்று கிரிக்கெட் தலைவர் இஜாஸ்பட் தெரிவித்துள்ளார். (15)





# வெற்றி நடை போடுகின்றது இந்தியா

ரோகித்சர்மா, ரெய்னா கைகொடுக்க, மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் இந்தியா 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

மேற்கிந்தியத்தீவுகள் சென்றுள்ள ரெய்னா தலைமையிலான இளம் இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கின்றது. முதலாவது போட்டி நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்திய அணியில் சுழல் பந்துவீச்சாளர் அஷ்வினுக்குப் பதிலாக அமித் மிஸ்ரா வாய்ப்புப் பெற்றார். மேற்கிந்தியத்தீவுகள் அணியில் பொலார்ட், சகலதுறை ஆட்டக்காரர் அன்ட்ரிரசல் இடம் பெறாதது ஆச்சரியம் அளித்தது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் டரன் சமி சற்றும் தயங்காமல் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

**மந்தமான துவக்கம்:**

இந்திய வேகங்கள் போட்டுத் தாக்க, மேற்கிந்தியத்தீவுகளின் வீரர்கள் ஓட்டங்கள் சேர்க்க திணறினர். லெண்டில் சிம்மொன்ஸ், கிர்க் எட்வர்ட்ஸ் சேர்ந்து படுமந்தமான ஆரம்பம் கொடுத்தனர். பிரவீன்குமார் வேகத்தில் சிம்மொன்ஸ் (6 ஓட்டங்கள்) வெளியேறினார். அடுத்து வந்த டரன் பிராவோ (4 ஓட்டங்கள்), முனாப் பந்தில் ஆட்டமிழந்தார். ஓரளவுக்கு தாக்குப்பிடித்த எட்வேட்ஸ் (21 ஓட்டங்கள்), ஹர்பஜன் சுழலில் சிக்கினார். பின்னர் அனுபவ வீரர்களான சர்வான், மர்லான் சாமுவேல்ஸ் இணைந்து பொறுப்பாக ஆடினர். இவர்கள் நான்காவது விக்கெட்டுக்கு 82 ஓட்டங்கள் சேர்த்தனர். யூசுப் பதான் ஓவரில் சாமுவேல்ஸ் இரண்டு பவுண்டரிகள் அடித்தார். மறுபக்கம் முனாப் ஓவரில் வரிசையாக இரண்டு பவுண்டரிகள் அடித்த சர்வான், அதற்கு அடுத்த பந்தில் 56 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். அமித் மிஸ்ரா வீசிய போட்டியின் 42 ஆவது ஓவரில் டுவைன் பிராவோ, சாமுவேல்ஸ் தலா ஒரு சிக்சர் அடிக்க, 'ஸ்கோர்' மெதுவாக உயர்ந்தது. ஒரு நாள் அரங்கில் தனது 19 ஆவது அரைச் சதம் கடந்த சாமுவேல்ஸ் (55 ஓட்டங்கள்), ரெய்னா பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். பின்னர் சுழலில் கலக்கினார் ஹர்பஜன். இவரது வலையில் முதலில் டுவைன் பிராவோ (22 ஓட்டங்கள்) சிக்கினார். அடுத்து கார்ல்டன் பாக் (16 ஓட்டங்கள்) ஆட்டமிழந்தார். அணித்தலைவர் டரன் சமி (4 ஓட்டங்கள்) ஏமாற்றினார். மேற்கிந்தியத்தீவுகள் அணி 50 ஓவரில் 9 விக்கெட்டுக்களுக்கு 214 ஓட்டங்கள் எடுத்தது.

**ஆரம்பத்தில் திணறல்**

சுலப இலக்கை விரட்டிய இந்திய அணி ஆரம்பத்தில் திணறியது. பார்த்திவ் பட்டேல் (13 ஓட்டங்கள்) வீணாக ரன் அவுட்டானார். ராம்போல் வேகத்தில் விராட் ஹோக்லி (2 ஓட்டங்கள்) வெளியேறினார். பிஷூ சுழலில் பத்ரிநாத் (17 ஓட்டங்கள்) நடையை கட்டினார்.

**தவான், சர்மா அரைசதம்**

தொடர்ந்து விளையாடிய தவான் 51 ஓட்டங்கள், ரெய்னா 43 ஓட்டங்களை எடுத்தனர். ரோகித் சர்மா 68 ஓட்டங்கள் எடுத்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். இறுதியில், 44.5 ஓவரில், இந்திய அணி 6 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 217 ஓட்டங்கள் எடுத்து, 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஆட்டநாயகன் விருதை ரோகித் சர்மா பெற்றார். (15)

# இயன்ற மட்டும் சாதிப்பேன்

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி சாதிப்பேன், என்று மேற்கிந்தியத்தீவுகள் அணியின் சகலதுறை ஆட்டக்காரர் பொலார்ட் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு சுற்றுப்பயணம் செய்துள்ள இந்திய அணி, ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகின்றது. சமீபத்தில் நடந்த 'ரி - 20' போட்டியில் விளையாடாத பொலார்ட், டுவைன் பிராவோ, சர்வான் உள்ளிட்ட அனுபவ வீரர்கள் ஒருநாள் தொடருக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இது குறித்து பொலார்ட் கூறியதாவது: இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரை மிகுந்த ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளேன். இந்த முறை இந்திய அணியில் சச்சின், சேவாக், டோனி, கம்பிர், யுவராஜ், சகிர், நெஹ்ரா உள்ளிட்ட முன்னணி வீரர்கள் இல்லாதது எங்களுக்கு சாதகமாக அமையலாம். அதே வேளையில் தற்போதுள்ள இந்திய அணியை குறைத்து மதிப்பிடக் கூடாது. ஏனெனில் அணியில் இடம்பெற்றுள்ள வீரர்கள், சமீபத்தில் நடந்த ஐ.பி.எல் தொடரில் சிறந்த அனுபவம் பெற்றுள்ளனர்.

எங்கள் அணியில் திறமையான இளம் வீரர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. நிறைய வீரர்கள் சர்வதேச போட்டிகளில் விளையாடிய அனுபவம் பெற்றுள்ளனர். எனவே இந்த முறை எங்கள் மேற்கிந்தியத் தீவுகள் அணி, தொடரை கைப்பற்ற அதிக வாய்ப்பு உள்ளது.

இந்தியாவுக்கு எதிராக துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என்று அனைத்திலும் சாதிக்க கூடுதல் பயிற்சி மேற்கொண்டுள்ளேன். இந்தத் தொடர் எனக்கும் மிக முக்கியமான ஒன்று. ஏனெனில் உள்ளூர் ரசிகர்களின் முன்னிலையில் விளையாட இருப்பதால், மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது. முழுத் திறமையை வெளிப்படுத்தி சாதிக்க முயற்சிப்பேன் - என்றார். (15)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அபூர்வ ஜோதிடம்

தீர்க்க முடியாத சலரோகமும் அதனால் ஏற்படும் உடல் இளைப்பும், குழந்தைப் பேறின்மை மாதவிடாய் தடைப்படல் கண்ணில் பிரஷர் குணமாக்கும் மருந்தியல்

சனி, ஞாயிறு காலை 8.30-பி.ப 2.00 உயரப்புல பிள்ளையார் கோயில், தபால்பெட்டி லேன், ஆனைக்கோட்டை.





ஸ்ரீ ஸ்ரீ அம்மா பகவான் சரணம்

ஸ்ரீ ஸ்ரீ அம்மா பகவானின் 35 ஆவது திருக்கல்யாண தினம்

## லோக கல்யாண மஹோற்சவம்

இடம் : யாழ். இளங்கலைஞர் மன்றக் கலா மண்டபம். (சட்டநாதர் கோயில் வீதி, நல்லூர்.

காலம்: நாளை (09.06.2011) வியாழக்கிழமை பி.ப. 2.30 மணி.

திருமணம், வாழ்க்கையின் பலபடிகளில் ஒரு முக்கிய நிகழ்வாகும். கணவன் மனைவியின் ஆன்மீக மலர்ச்சியே திருமணத்தின் மையக் கருத்தாகும் என வேதங்கள் கூறுகின்றன. சர்வமங்களகரம் பொருந்திய கடவுளின் கல்யாண தினமாகிய

"லோக கல்யாண"

நன்னாளில் பங்கேற்கும் அனைவருக்கும் ஸ்ரீ அம்மா பகவான் சகல சௌபாக்கியங்களையும் அருளுகின்றனர்.

- குடும்பம், கிராமம், ஊர், தேசம், உலகமே சுபீட்சமடையும்.
- திருமண பாக்கியம், மாங்கல்யம் நிலைபெற, புத்திரபாக்கியம் ஐஸ்வர்யம் முதலாய வாழ்க்கையில் பெறுதற்கரிய பதினாறு செல்வங்களும் பெறுவர்.

எனவே இன, மத, பேதமின்றி இந்த வைபவத்தில் கலந்து ஸ்ரீ ஸ்ரீ அம்மா பகவானின் அனுக்கிரகத்தைப் பெறும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

"அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"
"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

ஸ்ரீ அம்மா பகவான் சத்சங்கங்களின் ஒன்றியம், யாழ். மாவட்டம்.

விளம்பர அனுசரணை:-

சோதி ரெக்ஸ்ரைல்ஸ், பிளவ்ஸ் பீஸ் காட்சியறை

21, நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.
021 222 2139.

(சி/732)


## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் அருளானந்தம் (பத்தர்)

(உரிமையாளர், அருள் சுப்பிரமணியம் நகைமாளிகை, மட்டக்களப்பு)



மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம்அருளானந்தம் கடந்த 06.06.2011 திங்கட்கிழமை மட்டக்களப்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா சுப்பிரமணியம் ஆசாரி (J.P) - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் இராஜவதனியின் அன்புக் கணவரும் யாழ்ப்பாணம், கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற S.K சேனாதிராசா பத்தர் மற்றும் நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் அருள்ஜெனனி, சேஷகோபன், சுதர்ஷினி, பிரணவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிறிஸ்கந்தராசா, திருமதி இராஜமனோகரி சண்முகராசா, திருமதி இராஜரஞ்சனி மோகனதாஸ் ஆகியோரின் மைத்துனரும் கிரிதரணி, வைஷ்ணவி, சிவகாமினி, சிவானி ஆகியோரின் பெரிய தந்தையும் பொன்னுத்துரை கமலேஸ்வரியின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.06.2011) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டக்களப்பு, கள்ளியங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"சிறிவாசம்"
கருவேலடி வீதி, கொக்குவில் கிழக்கு,
இல.45/1, புகையிரத நிலைய குறுக்கு வீதி,
மட்டக்களப்பு.

தகவல்
சு.சண்முகராசா
(சகலன்)

(சி/729)

## இன்றும் நாளையும் மின்தடை

யாழ்ப்பாணம், ஜூன் 08

உயரழுத்த மின்மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு இன்று புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை, உயர்பாதுகாப்பு வலயப்பகுதி ஆகிய இடங்களிலும்-

நாளை- வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய இடங்களிலும் மின்விநியோம் தடைப்பட்டிருக்கும்- என்று யாழ். பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஒ)

## யாழ்.வேம்படியில் நாட்டுக் கூத்துப் போட்டி சனியன்று

யாழ்ப்பாணம், ஜூன் 08

வடனமாகாண கல்வித் திணைக்களம் வருடா வருடம் அகில இலங்கைத் தமிழ் மொழித் தினப்போட்டி நிகழ்ச்சிகளில் நடத்தி வரும் நாட்டுக் கூத்துப் போட்டி இம்முறை யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

வடமோடிக்கூத்து, தென்மோடிக் கூத்து, சிந்துநடைக்கூத்து, விசேட கூத்து, இசைநாடகம் ஆகிய நாட்டுக் கூத்துகள் சம்பந்தப்பட்ட போட்டிகள் அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு நடைபெறும் என மாகாணக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்தப் போட்டியில் மாவட்ட நிலையில் முதலாம் இடத்தைப் பெற்ற நாட்டுக் கூத்துகள் பங்குபற்ற முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## தவறிவிட்டது

இராசாவின் தோட்டத்துக்கும் கோயில் வீதி நல்லூருக்கு மிடையில் Samsung Mobile Phone ஒன்று நேற்று (07.06.2011) திங்கட்கிழமை தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் T.P இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புக்கு- 0212227068


## வயறிங் வேலைகளுக்கு...

வயறிங் மற்றும் பைப் லைனிங் என்பன துரிதமாகவும், சிறப்பாகவும் செய்து தரப்படும்.

தொடர்புக்கு- ஆனந்தி திருமணசேவை

T.P- 0775081756, 0750486930



## வேலை ஆள்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு

- விற்பனையாளர்
- சிட்டை எழுதுனர்
- விற்பனை பிரதிநிதி

தேவை.

தொடர்பு- 0212222403
(காலை 9.00 - 5.30 வரை)



## வீடமைப்பு மீள் நிர்மாணப்பணிகளை மீள ஆரம்பிக்காதவர்களுக்கான இறுதிச் சந்தர்ப்பம்.

மேற்படி திட்டத்தின் கீழ் நிதி உதவிகளைப் பெற்றுக்கொண்ட சிலர் தமது வீடமைப்பு மீள் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளாது இருப்பது இனங்காணப்பட்டுள்ளது. இவர்கள் இப்ப ணிகளை மீள ஆரம்பிப்பதற்கு இறுதிச்சந்தர்ப்பமாக 15.06.2011 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்படுகிறது.

இத்திகதிக்கு முன்னர் இவ்வீடமைப்புப் பணிகளை ஆரம்பிக்காதுவிடின் அவர்களுக்கான நிதி உதவி இரத்துச் செய்யப்படுவதுடன் இதுவரை வழங்கப்பட்ட கொடுப்பனவுகளும் மீள அறவிடப்படுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

க.தெய்வேந்திரம்,
பதில் திட்டப்பணிப்பாளர்.

(சி/727)


## மரண அறிவித்தல்

### அருணாசலம் கந்தையா

(தர்மகர்த்தா புங்குடுதீவு கிராஞ்சியபதி, கந்தசாமி கோயில்)



புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 3 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் தற்போது 5/1, புகையிரத வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் கந்தையா நேற்று (07.06.2011) செவ்வாய்க்கிழமை சிவபாதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம்-யோகமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் யோகேஸ்வரியின் பாசமிகு கணவரும் கணேஸ்வரன், காலஞ்சென்ற புண்ணியகரன் மற்றும் தாரணி, இலம்போதரன், சிந்துஜீவனி ஆகியோரின் அருமைத்தந்தையும் பானுமதியின் பாசமிகு மாமனும் கண்ணம்மா, கனகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் கமலாதேவி, சிவராசலிங்கம், நவராசலிங்கம் சியாமளாதேவி, சிவகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சதீஸின் அருமைப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5/1, புகையிரத வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.


அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும் யாழ்ப்பாணத்தில்



எந்த முதலீடும் இல்லாமல் மாதம் ரூபா 50,000/= க்கு மேல் சம்பாதிக்க ஆசையா.....?? !!!!

யாழ் குடாநாட்டு இளைஞர் யுவதிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் இணையத்தளம் மூலம் மாதம் ரூபா 50,000/= மேல் வீட்டிலிருந்தபடியே சம்பாதிப்பதற்கு ஓர் இலகு வழிகாட்டல் வகுப்பு

இல்லத்தரசிகளே நீங்களும் உங்கள் குடும்பத்தை முன்னேற்ற நினைக்கிறீர்களா????-ஆனால் என்ன வேலை செய்வது. என்று தெரியவில்லை???? முதலீடு இல்லை மற்றும் குழந்தைகளை விட்டு வெளியே சென்று வேலை செய்ய யோசிக்கிறீர்களா? கவலையை விடுங்கள் உங்கள் வீட்டிலிருந்தபடியே மாதம் ரூபா 50,000/=மேல் சம்பாதித்து கொள்ளுங்கள்

உங்களிடம் இருக்க வேண்டியது ஓர் கணனியும் இணைய வசதியும் மட்டுமே.

குறிப்பு : கணணி பற்றி அறிவில்லாதவர்களும் பயப்படாமல் எம்முடன் இணைந்து கொள்ளலாம்.

வகுப்பு நடை பெறும் நாள் : 11.12 ந்திகதிகளில் சனி ஞாயிறு பி.ப 2.30க்கு

இடம்: யாழ் வேம்படி மகளிர் கல்லூரி

பயிற்சி கட்டணம்: 3250/= மட்டுமே

பதிவுக்கட்டணம் எதுவுமில்லை

மேலதிக விபரங்களுக்கு 0215675916,0212220918

கீழ் பட்டவர்களுக்கு விசேட


## நீங்காத நினைவலைகள்

| 18ஆம் ஆண்டு | முதலாம் ஆண்டு |
|---|---|
| பிறப்பு 28.03.1945 | பிறப்பு 22.09.1946 |
| இறப்பு 05.03.1993 | இறப்பு 08.06.2010 |



அமரர் சின்னத்துரை இரத்தினசிங்கம்
(ஓய்வுபெற்ற நில அளவையாளர்)



அமரர் பேரின்பராணி இரத்தினசிங்கம் (B.A)
(ஓய்வுபெற்ற லிகிதர், யாழ். கச்சேரி)

வாழ்வு எனும் கொடையை
இவ் வையகத்தில் எமக்குத் தந்து
எம்மை விட்டு வானகம் சென்றுவிட்ட
எங்கள் அன்புத் தெய்வங்களே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டுப் பிரியாது
தங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆஸ்பத்திரியடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

குடும்பத்தினர்.


!!யாழ் மண்ணில் முதன் முறையாக!!

## CERTIFICATE IN ETHICAL HACKING AND IT SECURITY

எந்தக் கணனிகளையும் உங்கள் கட்டுப்பாட்டின் கீழ்கொண்டுவரலாம்...

- Introduction to Cyber crimes
- Introduction to Ethical Hacking
- Introduction to Internet and e mail
- Windows Management and Configurations.
- Windows Hacking and Cracking
  - Hacking Windows XP Administrator passwords
  - Hacking Windows XP System password
  - Recover Forgot E mail login id & passwords
  - Remote spy Hacking & Key logs capturing.
  - Unlocking & Cracking the Application sofwares
  - Google Hack, Proxy servers & Resource hacker
  - 25 Important Secrets & Tricks About Windows XP
  - Hack Zip, RAR, pdf, doc ... Files' Passwords
  - Portable operating system & softwares & More...
- Safety Moves Against Hackers
  - How to safe your pc from hackers
  - How to safe System Administrator Acc
  - How to safe E mail Acc from spy and hackers
  - How to safe USB Flash drive from Virus
  - Antivirus Guard and spy remover
  - How to identify anonymous websites & More...

Duration One Month

..அதிகரித்து வரும் சைபர் குற்றங்களுக்கு எதிரான செயற்திட்டம்.. இணைய திருட்டுக்களிடமிருந்து உங்களை பாதுகாத்து கொள்ளுங்கள்

Online classes

Free Hand out Materials & Tools CDs

மறந்த விண்டோஸ் Administrator பாஸ்வேட்கள்&ஈமெயில் Login Id மற்றும் பாஸ்வேட்களை கண்டுபிடித்தல். உங்கள் கணனியை பயன்படுத்துபவர்களை இணையமூடாக முகாமை செய்தல்(Spy), மென்பொருட்களை Unlock செய்தல், மென்பொருள் கோப்புக்களை Unlock செய்தல், Proxy, Google hacks, USB மென்பொருட்கள், 25 விண்டோஸ் XP தந்திரோபாயங்கள் மற்றும் வைரஸ், Spy போன்ற இணைய திருட்டுகளுக்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் பல விடயங்களை உள்ளடக்கிய பாடத்திட்டம் உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்......

மேலதிக விபரங்களுக்கு!!!

UNI - ICT Campus
No - 83, Palaly Road, Kantharmadam
T.P No:021 321 6433 /0777-110862


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறாததுடன், கல்விச் செயற்பாடுகள் யாவும் நிறுத் தப்பட்டன.

பல்கலைக்கழக விரி வுரையாளர்களின் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டு, சுமுக நிலை திரும்பும் போதே பல்கலைக் கழகம் மீள ஆரம்பிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ஐ)

## தடுப்பிலுள்ளோரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் விவரங்களை உடன் வெளியிடுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப் புடனான பேச்சில் அரசு உறுதி வழங்கியிருந்தது. ஆனால் பல மாதங் களாகியும் விவரம் வெளியிடப்படவில்லை. இந்த விடயத்தில் அரசு காலதாமதம் செய்து வரு கின்றது. இந்தப் பின்னணியி லேயே நேற்று வவுனியாவில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

'நாம் இலங்கையர்' என்ற ஜே.வி.பி. ஆதரவு அமைப் பினாலேயே நேற்றைய ஆர்ப்பாட்டம் ஒழுங்கு செய்யப்பட் டிருந்தது. மு.ப. 10 மணிக்கு ஆரம்பித்த ஆர்ப்பாட்டம் 11 மணியையும் தாண்டி நீண்டது.

காணாமற்போன தமது உறவுகளினதும், தடுத்து வைக் கப்பட்டுள்ளவர்களினதும் புகைப் படங்களைக் கையில் ஏந்திய வாறு கண்ணீர் மல்க மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, கடந்த மே மாதம் 2ஆம் திகதி கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு முன் பாகக் காணாமற்போன மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் உறவுகள் கவன யீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தை அடுத்து காணாமற்போனோரின் பெயர்கள் அடங்கிய விவரங்கள் சிறைச்சாலை அதிகாரிகளிடம் சமர்ப் பிக்கப்பட்டன. ஆனால், அதற்கு இன்றுவரை எதுவித பதிலும் கிடைக்கவில்லை என்று தெரிவித்தார் 'நாம் இலங்கையர்' அமைப்பின் நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினர் உதுல் பிரேமரட்ன. எதிர்வரும் தினங்களில் இவ்வாறான ஆர்ப்பாட் டங்களை யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற இடங்களிலும் நடத்தப்போவதாகவும் அவர் கூறினார். (உ)


### 31ஆம் வீட்டுக்கிருத்தியமும் நன்றி நவிலலும்

தோற்றம் 05 ★ 02 ★ 1924



மறைவு 09 ★ 05 ★ 2011

### திருமதி சுப்பிரமணியம் அன்னலட்சுமி

கடந்த (09.05.2011) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது பாச மிகு குடும்பத்தலைவியின் பிரிவுச் செய்தியறிந்து உடன் வந்து சகல உதவிகளை யும் வழங்கி ஆறுதல் கூறி அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் நோய்வாய்ப்பட்டிருந்தபோது உதவிகள் புரிந்தோருக்கும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியோருக்கும் அத்துடன் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களான உரும்பிராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயில் பரிபாலன சபையினருக்கும் உரும்பிராய், காளியம்பாள் கோயில் பரிபாலன சபையி னருக்கும் மற்றும் 764 சிற்றூர்திச் சேவை சங்கத்தினருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் இன்று (08.06.2011) புதன்கிழமை மு.ப. 11 மணி தொடக்கம் அவரின் மகனின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த் தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள் ளுமாறு அன்புடன் அழைக்கிறோம். தனிப்பட்ட அழைப்பு கிடைக்கப் பெறாதவர்கள் இந்த அழைப்பினைத் தயவு கூர்ந்து தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

திருத்தணிகை இல்லம்,
சிவகுல வீதி, உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய். (சி/740)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

### ஓராண்டு சிரார்த்த தினம்

மலர்வு 05 ★ 03 ★ 1948



மறைவு 18 ★ 06 ★ 2010

திதி: 08.06.2011

### திருமதி இராஜேஸ்வரி சண்முகரத்தினம்

இல்லறம் தான் நல்லறம் என எடுத்துக்காட்டி
எல்லோருக்கும் இயன்றவரை உதவிசெய்து
நல்லாக்கி வைத்த எங்கள் தாயே!
நாமுன்னைத் தேடுகின்றோம் - எங்கே என்று
உள்ளத்தால் பொய்யாது ஒழுகிநின்றாய்
உறவுகளின் நினைவுகளில் உறங்குகின்றாய்
ஓராண்டு ஆனாலும் என்ன இன்று
ஊராகும் உறவுகளும் உருகுகின்றனர்
எல்லாருக்கும் உன் நினைவு வெள்ளம்
ஏங்குகிறோம் ஏன் இந்தப் பிரிவு வந்து
பல்லாண்டு சென்றாலும் உன்மேல் பத்தி
பரமனிடம் கேட்கிறது உன் மறுபிறவி.

காளி கோயிலடி,
சண்டிலிப்பாய். (1758)

உன் நினைவில் உருகும்
கணவன் மற்றும் உறவுகள்


## பத்து லட்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டப்பட்டிருந்தன.

நிபுணர் குழு அறிக்கைக்கு எதிரான மனு ஒன்று கிடைக்கப் பெற்றுள்ளது என ஐக்கிய நாடுகளின் இலங்கைக் கிளை அதிகாரி டொம் ஹொக்லி தெரி வித்தார்.

இந்த அறிக்கை விரைவில் ஐக்கிய நாடுகளின் நியூயோர்க் தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பி வைக்கப் படும் எனவும் அவர் கூறினார். (சி)

## ஈரானிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த நாட்டுத் தொலைகாட்சி செய்தி வெளியிட்டது. ஆனால் இந்த ரகசியக் கடிதத்தின் உள்ளடக்கம் பற்றிய எந்தத் தகவலையும் அது தெரிவிக்க வில்லை.

நேற்றுமுன்தினம் அலரிமாளிகை யில் ஜனாதிபதியைச் சந்தித்த ஈரானியப் பிரதி வெளிவிவகார அமைச்சர் ரகசியக் கடிதத்தை கையளித்துள்ளார். (உ)

## போர்க்குற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரவையின் ஆணையாளர் நவநீதம் பிள்ளை கோரியுள்ளார்.

பான் கீ - மூன் சார்பான உயரதிகாரி விஜய நம்பியார், சரணடைபவர்கள் தொடர்பாக உறுதி அளித்திருந்தும், அவர்கள் கொலை செய்யப்பட்டமை குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றீர்கள்?'' என 'இன்னர் சிற்றி பிரஸ்' கேள்வி எழுப்பியது.

கேள்வியின் இரண்டாம் பகுதிக்கு பான் கீ - மூன் பதில் அளிக்கவில்லை. போர்க் குற்ற விசாரணை தொடர்பாக அங்கத்துவ நாடுகளே முடிவு செய்ய வேண்டும் எனப் பதிலளித்தார்.

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்குப் பதிலளிப்பதன் மூலம் மாத்திரமே இலங்கையில் உறுதி யான சமாதானத்தையும் நாட்டின் ஒரு மைப்பாட்டையும் பேண முடியும். எனவே, அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விடயங்களை முழுமையாக இலங்கை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும். இதனையே சர்வதேச சமூகமும் எதிர் பார்க்கின்றது.

இலங்கையின் உத்தியோகபூர்வ பதிலை ஒவ்வொருநாளும் எதிர்பார்த் துக் கொண்டிருக்கிறேன், விரைவில் இலங்கை அரசு பதிலளிக்க வேண்டும்.

- இவ்வாறு 'இன்னர் சிற்றி பிரஸ்' தெரிவித்துள்ளது. (உ-சி)

## ஐ.தே.க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைப்பை விடுத்தார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

ஜனநாயகத்துக்கு எதிராக அடக்கு முறைகளைக் கையாண்டுவரும் அரசு, தனது நடவடிக்கைகளை மேலும் வலுப் படுத்தி வருகிறது.

ஆர்ப்பாட்டங்களைக் கலைப்பதற் கும், கட்டுப்படுத்துவதற்கும் இராணுவத் தைப் பயன்படுத்துவதற்கு அவசரகாலச் சட்டத்தில் இடமுள்ளது. ஆனால் சாதா ரண சட்டங்களில்இடமில்லை. குண்டர் குழுக்களையும், கலகக்காரர்களையும் பொலிஸ் ஜீப்களில் கொழும்புக்கு அரசு வரவழைத்துள்ளது.

அரசின் ஒடுக்குமுறைகளைப் பார்த் துக் கொண்டு மௌனம் சாதிப்பதை விட அதற்கு எதிராகப் போராட்டங் களை நடத்தத் தீர்மானித்துள்ளோம். அதன்படி மருதானை ரயில் நிலையத் துக்கு முன்பாக நாளை மாலை 3 மணிக்கு மேற்படி ஆர்ப்பாட்டம் ஏற் பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆர்ப் பாட்டத்தையும் தடுக்க அரசு திட்டங் களை மேற்கொள்ளலாம்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கட்சி, கொள் கை, அமைப்புகள் என்ற பேதங்களின்றி அனைவரும் கலந்துகொள்ளுமாறு நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

இப்படி அவர் தெரிவித்தார். (சி)

## தோட்டத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோட்டத் தொழிலாளர்களுக்காக குரல் கொடுக்கின்றோம்' எனக் கூறிக்கொண்டு தோட்ட முதலாளிமாரின் தேவை களைப் பூர்த்திசெய்யும் சில தொழிற்சங்கங்கள் தோட்ட முத லாளிமார் சம்மேளனத்துடன் கூட்டு ஒப்பந்தம் கைச்சாத் திட்டுள்ளன. இந்த ஒப்பந்தம் மூலம் தோட்டத் தொழிலாளர் களுக்கு ஒரு சொற்ப தொகையே சம்பள அதிகரிப்பாக வழங் கப்பட்டுள்ளது. கைச்சாத்திடப்பட்டுள்ள கூட்டு ஒப்பந்தம் அநீதியானது.

மே மாத இறுதியாகும்போது வாழ்க்கைச் செலவுப் புள்ளி 234.8 ஆக அதிகரித்திருந்ததுடன், நான்கு பேரைக் கொண்ட குடும்பத்துக்கு குறைந்த பட்ச மாதாந்த செலவு 40 ஆயிரம் ரூபாவுக்கும் மேலாகும் என அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. கல்வி மற்றும் சுகாதாரம் உட்பட நலன்புரி சேவைகளுக்காக நிதி குறைக்கப்பட்டுள்ளதால், அதற்காக செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் மூலம் அதிகரிக் கப்பட்டுள்ள சொற்ப தொகை இன்றுள்ள வாழ்க்கைச் செலவுக் கேற்ற அதிகரிப்பல்ல - என்றுள்ளது. (சி)

## நிபுணர் குழு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அது தொடர்பாக எம்மால் வெளியிடப்பட்டது. அந்த அறிக் கையில் இலங்கைக்குப் பாதகமான விடயங்கள் அடங் கியுள்ளன என்று அநுரகுமார திஸாநாயக்க கடந்த நாடாளு மன்ற அமர்வின்போது கூறினார்.

காங்கேசன்துறை துறைமுகத்தையும் பலாலி விமான நிலையத்தையும் இலங்கை அரசு இந்தியாவிடம் ஒப்படைக்கப் போகின்றது என்றும் அவர் கூறினார்.

கூட்டறிக்கையில் இந்த விடயம் தொடர்பாகக் கூறப்பட வில்லை. காங்கேசன்துறை ரயில் பாதை தொடர்பாகத்தான் கூறப்பட்டது. ஆகவே அநுரகுமார திஸாநாயக்கவின் குற்றச் சாட்டை நான் நிராகரிக்கின்றேன்.

இந்தியாவின் அழைப்பை ஏற்று நான் அங்கு செல்ல வில்லை. எமது நாட் டின் தேவைகளைக் கருத்தில் கொண்டே நான் அங்கு சென்றேன். அந்தப் பயணம் எமது நாட்டுக்கு மிகவும் பயனுடையதாக அமைந்தது.

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் உட்படப் பல முக்கிய தலைவர்களை நான் அங்கு சந்தித்துப் பேசினேன். ஆனால் இலங்கை தொடர்பான ஐ.நா. நிபுணர் குழு அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமாறு நான் இந்தியாவிடம் கோரவில்லை.

நாம் தருஸ்மன் அறிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த அறிக்கைக்கும் ஐ.நா.சபைக்கும் எதுவித தொடர்பு மில்லை.இந்த அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமாறு நாம் சர்வதேச நாடுகளிடம் கோரினால் அந்த அறிக்கையை நாம் ஏற்றுக்கொண்டதாக அமையும்- என்றார். (உ-சி)


### மத்திய கிழக்கில் வேலைவாய்ப்பு

(தங்குமிட வசதியுடன் குறைந்த பட்ச வருமானம் 25,000/-)

சகல துறைகளிலும் இலகு கடன் வசதியில்
வெற்றிடங்கள் உண்டு.

மொத்தச் செலவு ரூபா 80,500/=

* ரூபா 5,500டன் பதிவுசெய்து மருத்துவப் பரிசோதனை செய்யப்படும்.
* மருத்துவச் சான்றிதழும், பயண ரிக்கட்டும் வழங்கும்போது ரூபா 30,000/- செலுத்தவேண்டும்.
* மிகுதி ரூபா 45,000/- உங்கள் ஊதியத்திலிருந்து தவணைக் கட்டணமாக செலுத்தும் ஒழுங்குகளுக்கு.

தொடர்பு:- **YARL PARDY**

51, Amman Road, Jaffna.
Phone No:- 0777 360353, 077 3087795.

### மரண அறிவித்தல்

### கந்தையா காசிப்பிள்ளை

(முன்னாள் காசாளர், தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கம், கைதடி)



கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும், கைதடி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா காசிப்பிள்ளை நேற்று அதிகாலை (07.06.2011) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்ற கதிர்காமத்தையன் மற்றும் சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சிவஞானேஸ் வரியின் (கிளி) அன்புக் கணவரும் வசந்தினி (முகாமைத்துவ உதவி யாளர், பிரதேச செயலகம், சாவகச்சேரி),பவதாரணி (லண்டன்), பவதர்சிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் சின்னம்மா, காலஞ் சென்ற சிவயோகநாதன் மற்றும் தங்கமுத்து, செல்லம்மா, சிவபாக் கியம், சிவஞானேஸ்வரி, சிவஞான்சுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கௌரிதரன் (கிராம சேவையாளர், பிரதேச செயலகம், சாவகச்சேரி), மயூரகிரிநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் கமலேஸ்வரி (கனடா), பரமேஸ்வரி (உப அதிபர், யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி), சிவகுமாரன் (கனடா), விக்கினேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் குகதரன், அருணன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (07.06.2011) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி தெற்கு, கைதடி. (1757)

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நவீன சந்தைப் பகுதியில் திடீரென இரவோடு இரவாக 'முளைத்த' கடைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 08

யாழ். நகர் நவீன சந்தைப் பகுதியிலுள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் திடீரென இரண்டு கடைகள் இரவோடு இரவாக முளைத்துள்ளன.

யாழ். மாநகர சபையின் அனுமதி பெற்றே கடந்த ஞாயிறு இரவு இந்தக் கடைகள் அமைக்கப்பட்டன என்று கூறப்பட்டது.

குறிப்பிட்ட இடத்தில் கடைகள் அமைக்கப்பட்டுள்ளதால், நகரப் பகுதி வர்த்தகர்கள் மற்றும் பொது மக்களின் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்களைப் பாதுகாப்பாக நிறுத்தி வைக்க போதிய இடவசதி இல்லை என்று முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாநகர சபையினால் நிர்மாணிக்கப்பட்டு வரும் ஐந்து மாடிக் கட்டடத் தொகுதிக்காக கஸ்தூரியார் வீதிச் சந்தியருகில் இயங்கி வந்த சைக்கிள் பாதுகாப்பு நிலையம் ஏற்கனவே அகற்றப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு நிலைமையில் நவீன சந்தைப் பகுதியிலுள்ள இடமும் கபளீகரம் செய்யப்பட்டுள்ளதால், நகருக்கு வருபவர்கள் சைக்கிள்களை நிறுத்தி வைக்கஇடம்தேடி அலைகின்றனர்.

அநேகர் தமது சைக்கிள்களை வீதி ஓரங்களில் 'அடுக்கி' விட்டுச் சென்று விடுகின்றனர். இதனால் போக்குவரத்து நெருக்கடி - இடைஞ்சல் ஏற்படுகிறது. விபத்துகள் ஏற்படும் அபாயமும் உள்ளது.

இதேவேளை, நவீன சந்தைப் பகுதியில் சுமார் ஐம்பது சதுர அடி நிலப்பகுதியே சைக்கிள் பாதுகாப்பு நிலையத்துக்காக எஞ்சியுள்ளது. அந்த மிகுதி பகுதியிலும் கடைகள் 'முளைத்தால்' கூட ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்று சந்தைப் பகுதியில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வருபவர்கள் தெரிவிக்கின்றனர்.

அதேசமயம் நவீன சந்தைப் பகுதியில் புதிய கட்டடத் தொகுதி அமைக்கப்படவுள்ளது. அதனை யாழ். மாநகர சபையே அமைக்கவுள்ளன. அந்தக் கட்டடத் தொகுதியில் தங்களுக்கு 'நெருக்கமானவர்'களுக்கு வர்த்தக நிலையங்களை வழங்கவே இந்தத் திடீர் கடைகள் முளைத்து வருகின்றன என்று வர்த்தகர்கள் நம்புகின்றனர். (ஒ-14)

# பட்டப்பகல் வேளையில் வீடு புகுந்து பெண் அணிந்திருந்த தோடுகள் அபேஸ்

## நெடுங்கேணியில் துணிகரச் சம்பவம்

வவுனியா, ஜூன் 08

வவுனியா வடக்கு, நெடுங்கேணி 17 ஆம் கட்டைப் பகுதியில் நேற்றுப் பட்டப்பகலில் இருவர் வீடு புகுந்து பெண் ஒருவரின் தோடுகளைப் பலவந்தமாகக் கழற்றிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

வீட்டிலுள்ளவர்கள் தோட்ட வேலைக்குச் சென்றதால் மேற்படி பெண் மட்டுமே தனியே வீட்டில் இருந்துள்ளார். காலை 9.30 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் இருவர் திடீரென வீட்டினுள் புகுந்து அந்தப் பெண்ணின் கழுத்தைத் திருகியதுடன் சத்தம் போடாதவாறு வாயையும் பொத்திய பின்னர் அவர் அணிந்திருந்த தோடுகள் இரண்டையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

குறித்த வீட்டுக்கு மிக அருகில் இராணுவக் காவலரண் அமைந்துள்ளது. பாதிக்கப்பட்ட பெண் இராணுவத்திடம் முறையிட்டதைத் தொடர்ந்து அவர்கள் குறித்த பிரதேசத்தில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். ஆனால் எவரும் கைது செய்யப்படவில்லை.

குறித்த பெண் வேறு நகைகள் எதுவும் அணிந்திருக்காத நிலையில் அவர் அணிந்திருந்த தோட்டைக் கழற்றிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-க-10-15)

# வித்தகபுரம் மக்கள் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 08

தேசிய வீடமைப்பு அதிகார சபையும் மீள் குடியேற்ற அமைச்சும் இணைந்து மேற்கொள்ளும் வீடு திருத்துவதற்கான கடன், மானியம் வழங்கல் திட்டத்தை பெறவிரும்பும் வித்தகபுர கிராம சேவகர் பிரிவுக்கு உட் பட்ட மக்களை நாளை வியாழக் கிழமை மு.ப. 10 மணிக்கு கிராம சேவகர் காரியாலயத்துக்கு சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

வீடு திருத்துவதற்கு கடனாக ஒரு லட்சம் ரூபாவும், மானியமாக ஒரு லட்சம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன. இதில் அரச ஊழியரின் பிணையைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்களும் விண்ணப்பிக்கமுடியுமென்று தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் பொதுப் பிணையாக 50 வயதுக்குட்பட்ட நபரை வைத்தே கடன் பெற்றுக்கொள்ளமுடியும்.

எனவே இந்தத் திட்டத்துக்கு விண்ணப்பித்தவர்களும், கடன்பெற விரும்புபவர்களும் தமது காணி உறுதி, அடையாள அட்டை, வங்கிப் புத்தகம் என்பவற்றுடன் கிராம சேவகர் அலுவலகத்துக்கு சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஒ-15)

# நயினை உற்சவத்தை முன்னிட்டு ஆயத்தப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

நயினாதீவு நாகபூஷனி அம்மன் கோயிலின் வருடாந்த மஹோற்சவம் அடுத்த மாதம் இடம்பெறவுள்ளதால் அதற்கான விசேட ஏற்பாடுகளை யாழ். மாவட்ட செயலகம் மேற்கொண்டுள்ளதாக அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

அவர் இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்தவை வருமாறு:

நயினாதீவினுள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுவதற்கு புதிய பேருந்து ஒன்று அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும் பிரதேசத்தின் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருக்கும் பொருட்டு குப்பைகளை அகற்ற நெடுந்தீவுப் பிரதேச சபை உரிய நடைவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று பணிக்கப்பட்டுள்ளது.

நயினாதீவில் உள்ள வீதிகள் மற்றும் குறிகாட்டுவான் வரையுள்ள வீதிகளை வீதி அபிவிருத்தி அதிகார சபையும் பிரதேச சபைகளும் திருத்துதல் வேண்டும். மேலும் நயினாதீவின் பயணிகள் நன்மை கருதி வைத்திய சேவைகளை மேற்கொள்ளவும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

பயணிகளுக்கும் யாத்திரிகர்களுக்கும் ஏற்ற வகையில் படகுச் சேவையை மாற்றியமைப்பதற்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. அரச பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகளின் சேவையை சீராக வழங்கவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

யாத்திரிகர்களுக்குப் போதுமான அளவு குடிதண்ணீரை வழங்குவதற்கும் தற்காலிக குடிதண்ணீர் தாங்கிகளை அமைக்குமாறும் பணிக்கப்பட்டுள்ளது. மின்சார சேவையை திருவிழாக்காலத்தில் தடையின்றி வழங்குமாறும் கோரப்பட்டுள்ளது. அத்துடன் போதுமானளவு கையிருப்பில் எரிபொருள்களை வைத்திருக்குமாறும் பணிக்கப்பட்டுள்ளது.

நயினாதீவில் திரு விழாக் காலங்களில் பொலிஸ் நிலையம் நிறுவப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-15)

**காணி விற்பனைக்கு**

கந்தர்மடம், பலாலி வீதி, இந்து மகளிர் வீதியில் அமைந்துள்ள 3½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0773906158

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை கனகராசா (குட்டி)



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் தச்சன் தோப்பை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப் பிள்ளை கனகராசா கடந்த (06.06.2011) திங்கட் கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் கனிஷ்ட மகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் டிரோஜா, தேனுஜனின் தகப்பனும் கமலேஸ்ரி, சற்குணராசா, புஸ்பராணியின் சகோதரரும் சின்னத்துரை - சரஸ்வதி தம்பதியரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.06.2011) புதன்கிழமை ந.ப. 12 மணிக்கு அவரின் கைதடி தச்சன் தோப்பு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலம்பிராய் பிணமுருங்கை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுப்பிட்டி. (சி/738) தகவல் குடும்பத்தினர்.

### திருமதி செல்வரத்தினம் சறோஜினிதேவி



கோவிலாக்கண்டி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வரத்தினம் - சறோஜினிதேவி நேற்று (07.06.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு மற்றும் பொன்னம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராசையா- சிவபாக்கியத்தின் மருமகளும், செல்வரத்தினத்தின் அன்பு மனைவியும் பாலரூபன் (கனடா), பாலரூபி (ஜேர்மனி), பாமினி, பௌசிகா, ஜெயரூபன் (மாணவன், யா/ நாவற்குழி ம.வி) ஆகியோரின் பாசமிகு தாயும் பாஸ்கரனின் (ஜேர்மனி) மாமியும் தர்மகுலசிங்கம் (சாவகச்சேரி பிரதேச சபை), மகேந்திரன் (கனடா), காலஞ்சென்ற மணிமேகலை மற்றும் இராசகுலசிங்கம் (வர்த்தகர்), விஜயலட்சுமி (ஆசிரியை, கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்), ரங்கநாதன் (லண்டன்), காலஞ்சென்ற ஆனந்தராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் தனலட்சுமி (கனடா), இராஜேஸ்வரி, செல்வராணி, செல்வமலர் (கனடா), இந்திராணி (கனடா), இராஜேஸ்வரி, செந்தில்மணி, இரத்தினசிங்கம், வசந்தா, நந்தகுமார், சரவணராஜினி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோவிலாக்கண்டி மத்தி, கைதடி. (1760) தகவல்: குடும்பத்தினர்.

# இருளில் மூழ்கியுள்ள நவாலி வடக்குப் பகுதி

யாழ்ப்பாணம், ஜூன் 08

நவாலி வடக்கு பகுதி கடந்த மூன்று நாள்களாக இருளில் மூழ்கியுள்ளது.

கடந்த மூன்று நாள்களாக முன்னறிவிப்பு எதுவுமின்றி மாலை 5.30 மணி தொடக்கம் இரவு 10 மணி வரை இந்த மின் வெட்டு நடந்துவருகிறது.

இது தொடர்பாக மின்சார சபையிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது; மேலிடத்துப் பணிப்பின் காரணமாகவே தாம் இவ்வாறு மின்வெட்டை நடைமுறைப்படுத்தி வருவதாகக் கூறினார்.

இரவு நேர இந்த மின்வெட்டினால் மாணவர்களின் கல்வி நிலை பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாக பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர். அதே சமயம் ஏனையோரும் தமது தேவைகள், கடமைகளைச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (ஒ-10-302)

Microsoft Office Rs.800 Course fee
Accounting pack.. Rs.1200 Course fee
Free Course fee Dip. English ICDL, DTP Typing Hardware
New Batch 10.06.2011
MCS Supported By UNDP/JRRP
SMS your Name & Course to 772395895 & Get Schol.
324,Palaly Road,Parameswara Junction
www.mcsitcampus.org

**விருந்துபசார வைபவம் பிற்போடப்பட்டுள்ளது**

*தர்சீலன் நிஷாந்தினி*

தம்பதியரின் திருமணத்தையொட்டி எதிர்வரும் 12.06.2011 அன்று சங்கரத்தை Y.M.H.A மண்டபத்தில் நடைபெறவிருந்த விருந்துபசார நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. விருந்துபசார வைபவம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்பதை உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

வட்டுக்கோட்டை மேற்கு, வட்டுக்கோட்டை. தொ.பே:-0774914179. (சி/730)
தவில் வித்துவான், N. இராமநாதன் குடும்பத்தினர்.

ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்
An ISO 9001:2000 Certified Company
Spoken English பயிற்சிமையம்.
veta Experts in English Training




புதிய பிரிவுகள் ஆரம்பம்.

| யாழ்ப்பாணம் | | சாவகச்சேரி | | நெல்லியடி | |
|---|---|---|---|---|---|
| Sat, Sun | 7.30 a.m. | Sat, Sun | 9.30 a.m. | Mon, Tue | 4.30 p.m. |
| Mon, Wed, fri | 7.30. a.m. | Mon, Wed | 9.30 a.m. | Tue, Thu | 3.30 p.m. |
| Tue, Thu | 5.00 p.m. | | | Tue, Thu | 5.00 p.m. |

UK Student Visa , Settlement Visa
DMI COMPUTER EDUCATION
No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403
M.M.V. வீதி, நெல்லியடி. Tel. : 021-226 2470
No.174, கண்டி வீதி, HNB அருகில் சாவகச்சேரி. Tel.:021-227 0243

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.06.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org